கழக வெளியீடு - கக.

உ

நீதி வெண்பா

கழகப்புலவர்

திரு தி. சு. இளவழகனார் அவர்கள்

எழுதிய உரையுடன்

※

திருநெல்வேலி, தென்னிந்திய

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்

திருநெல்வேலி, & சென்னை.

4th Edition: Feb. 1947

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.
THIRUNELVELI & MADRAS.

August 1948.

Printed at the Muthukumaran Press, 8-99, Ammen Koil St, Madras-1.

முகவுரை

‘நீதிவெண்பா’ என்னும் பெயரினாலேயே இந்நூல் வெண்பா யாப்பினால் இயற்றப்பட்டிருக்கின்றதென்பதும், அவைதாம் நீதிகளை உணர்த்துகின்றனவென்பதுந் தெளிவாகின்றன.

இதனை இயற்றினா ரின்னா ரென்பது தெரியவில்லை. இந்நூலின் முதலிலிருந்து கடைசி வரையில், இடையிடையே பதினொரு பாட்டுகள் தூய தனித்தமிழ்ச் சொற்களாலான செய்யுட்களும் (I4, 15, 24, 35, 36, 49 59, 74, 76, 77, 89), ஏனைய அவற்றிற்கு மாறாக நிரம்பிய வட சொற் கலப்பினாலான செய்யுட்களுமாக விரவிக் காணப்படுகின்றமையாலும், முன்னுணர்த்தப்பட்ட நீதிகளே பின்னும் வருகின்றமையாலும், (10, 50), எவ்வெச் செய்யுட்களை அடுத்து நிற்றல் வேண்டுமோ அவ்வவை தம்மை அடுத்து நில்லாது சிதறுண்டன போலச் சில செய்யுட்கள் ஆங்காங்கும் இயைபின்றிய நிற்கின்றமையாலும் (34, 37), சில பாட்டுக்கள் அழகிய அரிய சொற்களாலும் இனிய எளிய நடையினாலும் அரும்பெரும் நுட்பக்கருத்துக்களை உணர்த்தா நிற்ப (37, 52, 72), ஏனைய அவற்றிற்கு மாறான சொற்களாலும், நடையினாலும் உணர்த்துகின்றமையாலும், சில பழங்காலச் செய்யுட் போக்கினையும் (29, 44), சில பிற்காலச் செய்யுட்போக்கினையுந் தழுவி நிற்கின்றமையாலும், சில அடர்ந்து நிரம்பிய கருத்துடைய வாயும் (35, 37), மற்றுஞ் சில அம்முறையில் இலவாயுமிருக்கின்றமையாலும், இன்னும் இன்ன பல ஏதுக்களாலும் இந்நூல் ஓராசிரியரா லியற்றப்படாது யாரோ ஒருவராற் றொகுக்கப்பட்ட தொகை நூலாகுமோ என்னும் ஐயமுந் தோற்றுகின்றது. இதன் காப்புச் செய்யுள்,

“மூதுணர்ந்தோ ரோதுசில மூதுரையைப் பேதையேன்
நீதிவெண்பா வாக நிகழ்த்துவேன்”

என்று கூறுதலும், அதற்கேற்ப, இந்நூல் தான் எடுத்துக்கொண்ட நீதிகளை ஓரொழுங்கான முறையின் நின்று உணர்த்தாமையும்

அவ் வையத்தினை மேலும் வளர்ப்பனவா யிருக்கின்றன. இனி, இந் நூன்முழுவதுஞ் சைவ சமயமே உயர்த்தப்பட்டு நிற்பதும் (58, 95, 97), சமணம் இழிக்கப்பட்டு நிற்பதும் (26), இன்ன சிலவும் ஓராசிரியரி னியல்பினைக் காட்டுகின்றமையின், அவை அவ்வையைக் கோட்பாட்டிற்கு எதிராவனவாகும். எனினும், அவ்வியல்பு தொகுத்தோர்மேலுஞ் செல்லுமாதலாலும், ஏனைப் பல ஏதுக்களை நோக்க இன்ன சிலசிற்றேதுக்களே யாதலாலும், இவ்வீரொரேதுக்களைக் கொண்டு அவ்வையங் கழலுமாறில்லை யென்க.

இனி, இதன்கட் காணப்படுஞ் செய்யுட்களும், அவற்று லுணர்த்தப்படும் அறிவுரைகளுஞ் சிறு பிள்ளைகள் முதல் எத்திறத்தவருங் கற்றுணர்தற் குரியவையா யிருக்கின்றன. இதன் 37, 39, 91-ம் செய்யுட்களில் உவமைத்திறனும் 72-ம் செய்யுளில் உருவகத்திறனும் அழகும் நுட்பமும் பொருந்த அமைந்திருக்கின்றன. 49-ஞ் செய்யுளில், 'தென் புலத்தார் தெய்வம் விருந்தொக்க' லென்னுந் திருவள்ளுவர் திருமொழியும் எடுத்தாளப் பட்டிருக்கின்றது. சிறு பிள்ளைகளுந் தம் பருவத்திற் கேற்ற ஒழுக்கங்களை அறிந்து தமது நடையிலுங் கொண்டுவருதற் கேற்ற நீதிகள் இந்நூலில் நிரம்பி யிருத்தலால், இது பள்ளிக் கூடங்களிலும் பாடமாக வைக்கப்படுகின்றது.

இந்நூலுக்கு வேறு உரைக ளிருந்தாலும், தெளிவான பதவுரை கருத்துரைகளோடு அவற்றின்கண் இல்லாத விளக்க உரை நுட்பங்கள் பலவும் இதன்கண் எளிதான நடையில் எழுதிச் சேர்க்கப் பட்டிருத்தலாலும், நீதி நூல்களின் விளக்க வுரைகளெல்லாம் பெரும்பாலும் நீதியைப்பற்றியவையாகவே இருத்தல் வேண்டு மென்னும் முதன்மை நோக்கம் பற்றி அவ்விளக்கவுரை தானும் எழுதப்பட்டிருத்தலாலும், இவ்வுரை வெளிவரல் இன்றியமையாததாயிற்று.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

உ

நீதி வெண்பா

மூலமும் உரையும்

காப்பு

மூதுணர்ந்தோ ரோதுசில மூதுரையைப் பேதையேன்
நீதிவெண்பா வாக நிகழ்த்துவேன்—ஆதிபரன்
வாமரன் கருணை மணியுதரம் பூத்தமுதற்
கோமான் பெருங்கருணை கொண்டு.

(இதன் பொருள்) ஆதி பரன்-முழுமுதற் கடவுளாகிய சிவபிரானுடைய, வாமம் மான்—இடப் பாகத்தில் உள்ள உமையம்மையார், கருணை - அருளினாலே, மணி உதரம் - தமது அழகிய திருவயிற்றில், பூத்த-தோற்றிய, முதல் கோமான்-முதற் பிள்ளையாகிய பிள்ளையாரின், பெருங்கருணை கொண்டு-பேரருளைத் துணையாகக் கொண்டு, மூதுணர்ந்தோர்-பேரறிவாளர், ஓது-சொல்லிய, சில மூதுரையை-சில அறிவு மொழிகளை, பேதையேன்-அறிவிற் சிறியேனான யான், 'நீதிவெண்பா' ஆக-நீதி வெண்பா என்னும் நூலாக, நிகழ்த்துவேன் - செய்வேன்.

(இதன் கருத்து) யான் 'நீதி வெண்பா' நூல் செய்தற்கு முழுமுதற் கடவுள் துணை என்பது.

வாமம் என்பது வாம் எனக் குறைந்து நின்றது. 'பெருங் கருணை கொண்டு நிகழ்த்துவேன்' என்க. இது கடவுள் வணக்கச் செய்யுள்.

நூல்

தாமரைபொன் முத்துச் சவரங்கோ ரோசனைபால்
பூமருதேன் பட்டுப் புனுகுசவ்வா—தாமழன்மற்
றெங்கே பிறந்தாலு மெள்ளாரே நல்லோர்கள்
எங்கே பிறந்தாலு மென்.

(இ - ள்.) தாமரை - தாமரைப் பூவும், பொன்-பொன்னும், முத்து - முத்தும், சவரம் - சாமரையும், கோரோசனை - கோரோசனையும், பால் - பாலும், பூ - அழகிய, மரு - மணமுள்ள, தேன்-தேனும், பட்டு-பட்டும், புனுகு - புனுகும், சவ்வாது - சவ்வாதும், ஆம் அழல்-எரியும் நெருப்பும் (ஆக இப் பதினொன்றும்), எங்கே பிறந்தாலும்-எவ்வளவு தாழ்ந்த இடத்திலிருந்து கிடைத்தாலும், எள்ளார் - (அவைகளை உலகத்தார்) இகழமாட்டார்கள்; (ஆதலால்), நல்லோர்கள்-நல்ல தன்மையுடையவர்கள், எங்கே-எந்த இனத்திலே, பிறந்தாலும் - பிறந்திருந்தாலும், என் - அதனால் தாழ்வு என்ன? (தாழ்வில்லை என்பது.)

(க - து.) நல்லோர் தாழ்ந்த குடியிற் பிறந்தாலும் உயர்ந்தோரே யாவர்; அவரைத் தாழ்ந்தவரென்று யாரும் இகழமாட்டார்கள்.

தாமரை, சேற்றில் விளையும். பொன், மண்ணிற் கிடக்கும். முத்து, கடலிலுள்ள சிப்பிப் பூச்சியிலிருந்து வெளிப்படும். சாமரம், ஒரு விலங்கின் மயிர்க்கற்றை. கோரோசனை, ஆவின் வயிற்றில் அகப்படும். பால், ஆவின் மடியிலிருந்து பெறப்படும். தேன், கொழுப்படையிற் கசியும். பட்டு, ஒரு பூச்சியிலிருந்து வெளிவரும். புனுகு ஒருவகைப் பூனையின் அழுக்கு. அழல், தாழ்ந்த கட்டையிலிருந்து எழுந்தெரிவது. மற்று, ஏ-அசைகள். 1

அரிமந் திரம்புகுந்தா லானை மருப்பும்
பெருகொளிசேர் முத்தும் பெறலாம்—நரிநுழையில்
வாலுஞ் சிறிய மயிரெலும்புங் கர்த்தபத்தின்
தோலுமல்லால் வேறுமுண்டோ சொல்.

(இ - ள்.) அரி - சிங்கத்தின், மந்திரம் - குகையினுள்ளே, புகுந்தால் - நுழைந்தால், ஆனை - ஆனையினுடைய, மருப்பும் - (விலையுள்ள உயர்ந்த பொருள்களான) கொம்பும் (தந்தமும்), பெருகு ஒளி - மிகுந்த ஒளி, சேர்-உள்ள, முத்தும் - அக்கொம்பிலுள்ள முத்தும், பெறலாம் - கண்டெடுக்கலாம்; நரி நுழையில் - நரியிருக்கும் குழியில் (பார்த்தால்), சிறிய வாலும் - அறுந்துபோன வால்களும், மயிர் - குறுமயிர்களும், எலும்பும் - துண்டுதுண்டான எலும்புகளும், கர்த்தபத்தின்-கழுதையின், தோலும் - சிதைந்த தோலும், அல்லால் - (ஆக இந்தத் தாழ்ந்த பொருள்கள்)

தவிர, வேறும் - வேறு உயர்ந்த பொருள்களும், உண்டோ - அவ்விடத்தில் இருக்குமோ, சொல் - நீ சொல் பார்ப்போம்!

(க - து.) பெரியோரைச் சேர்ந்தால் உயர்வும், சிறியோரைச் சேர்ந்தால் இழிவும் உண்டாகும்.

சிறிய என்பது தாழ்ந்த என்னும் பொருளில் வந்தது. அதனை வால், மயிர், எலும்பு, தோல் என்பனவற்றோடு சேர்த்து உரைப்பினும் ஆம். உயர்வினால் சிங்கத்தின் குகை மந்திரம் எனப்பட்டது.

அறிவன் பகையேனும் அன்புசேர் நட்பாம்
சிறுவன் பகையாம் செறிந்த—அறிவுடைய
வென்றி வனசரன்றான் வேதியனைக் காத்தான்முன்
கொன்றதொரு வேந்தைக் குரங்கு.

(இ - ள்.) முன்-முன்னொரு காலத்தில், செறிந்த-மிகுந்த, அறிவு-அறிவும், வென்றி - வெற்றியும், உடைய-, வனசரன்-(பகைவனான) வேடன், வேதியனை - பார்ப்பனன் உயிரை, காத்தான்-காப்பாற்றினான், குரங்கு-ஒரு குரங்கு, ஒரு வேந்தை-ஓர் அரசனை, கொன்றது - (அறிவில்லாமையால்) கொன்று விட்டது, (அதுபோல); அறிவன் - அறிவுடையோன், பகை எனும் - பகைவனானாலும், அன்பு சேர் நட்பு - அன்போடு கூடிய நண்பனாக, ஆம் - ஆவான், (ஆனால்) சிறுவன்-அறிவில்லாதவன், (நண்பனா யிருந்தாலும்) பகை-பகைவனாக, ஆம்-ஆய்விடுவான்.

(க - து.) அறிவில்லாதவர்களின் நட்பைவிட அறிவுடையவர்களின் பகைமை நல்லது.

பகை என்பது பகைவனைக் குறிப்பதுபோல, நட்பு என்பது நண்பனைக் குறித்து. வனசரன் - காட்டில் வாழ்பவன்; அவன் வேடன். வேந்தன் என்பது வேந்து எனக் கடை குறைந்தது. நட்பில் அன்பு சேர்ந்த நட்புதான் சிறந்ததென்பதற்கு 'அன்பு சேர் நட்பு' என்றார். அஃதாவது: அறிவுடையோர் ஒருவருக்கொருவர் ஏதாவது ஒன்று குறித்துப் பகைவர்போலானாலுந் தமக்குள் இருக்கும் அன்பை விடமாட்டார்கள் என்றபடி. தான் - அசை.

வேடன் கதை:

பார்ப்பான் ஒருவன் ஓர் அரசனிடத்தில் ஒரு மாணிக்கமணியைப் பெற்று, அதைக் கையில் வைத்துக்கொண்டால் திருடர்கள் பிடுங்கிக்கொள்வார்களென்று நினைத்து வாயிற் போட்டு விழுங்கி விட்டான். பின் பொருகாற் கக்கி எடுத்துக்கொள்ளலாமென்பது அவன் எண்ணம். இதை யறிந்த வேடன் ஒருவன், அந்தப் பார்ப்பான் தன் ஊருக்குப் போகும்பொழுது கூடவே போய் நடுக் காட்டு வழியில் அவனை மடக்கி 'உன் வயிற்றிலிருக்கும் மாணிக்கத்தைக் கக்கு' என்றான். பார்ப்பான் 'மாணிக்கம் உன் வயிற்றில் தானே இருக்கிறது' என்று வேடனைக் கேட்டான். இவர்கள் இப்படிச் சண்டை போட்டுக்கொண்டு இருக்கும்பொழுது திருடர்கள் வந்து பார்ப்பானைப் பிடித்துக்கொண்டு மாணிக்கத்தைக் கக்கச் சொன்னார்கள். வேடன் அறிவுள்ளவன் ஆதலால், அவன் பகைவனானாலும் அந்தப் பார்ப்பானிடத்தில் அன்பும் இரக்கமுங் கொண்டு, அவன் உயிரைக் காப்பாற்ற எண்ணித் திருடர்களைப் பார்த்து, 'ஐயா, நாங்கள் வேடிக்கைக்குப் பேசிக்கொண்டோம். வயிற்றிலா மாணிக்கம் இருக்கும்! வேண்டுமானால் என் வயிற்றைக் கீறிப் பாருங்கள்' என்றான். திருடர்கள் வேடன் வயிற்றைக் கீறிப்பார்த்து மாணிக்கம் இல்லாதது கண்டு, 'ஆ, இவனை வீணாகக் கொன்றுவிட்டோமே. இந்தப் பார்ப்பானையாவது விட்டு விடுவோம்' என்றெண்ணி அவனை விட்டுவிட்டார்கள். பார்ப்பான் உயிர் பிழைத்தான். பார்ப்பானுக்கு வேடன் முதலிற் பகைவனாயிருந்தாலும், அவன் அறிவுடையவனாதலால், 'அன்பு சேர் நட்பையே கொண்டான்.

குரங்கின் கதை:

அரசன் ஒருவன் தான் வளர்த்துவந்த குரங்கினிடத்திற் கத்தியைக் கொடுத்து, 'இங்கு யாரும் வராமற் பார்த்துக்கொள்' என்று சொல்லித் திட்டம் செய்துவிட்டுப் படுத்துக்கொண்டான். அவன் தூங்கும்பொழுது அவன் மேலே ஓர் ஈ வந்து உட்கார்ந்தது. அறிவில்லாத அக் குரங்கு பார்த்தது. அரசன் இந்த ஈயைக் கொல்லத்தான் கத்தி கொடுத்தான் என்று நினைத்து அந்த ஈயைக் கொல்லப் போயிற்று. ஈ பறந்துவிட்டது. அரசன் இரு துண்டாக வெட்டுண்டான். அரசனுக்குக் குரங்கு நட்பானாலும் அறிவில்லாமையாற் பகைவன்போல் ஆகிவிட்டது.

மென்மதுர வாக்கால் விரும்புஞ் சகங்கடின
வன்மொழியி னாலிகழு மண்ணுலகம்—நன்மொழியை
ஓதுகுயி லேதங் குதவியது கர்த்தபந்தான்
ஏதபரா தஞ்செய்த தின்று.

(இ - ள்.) நன் மொழியை - (மெல்லிய குரலான) இனிய ஓசையை, ஓது - கூவுகின்ற, குயில் - குயிற் பறவை, ஏது உதவியது-என்ன கொடுத்துவிட்டது, (இன்று-எதுவும் இல்லை) (அல்லது) கர்த்தபம்-அருவருக்கும்படி ஓசைபோடும் கழுதை, ஏது அபராதம் செய்தது-என்ன கெடுதி செய்துவிட்டது. இன்று-எதுவும் இல்லை; (அவ்வாறிருக்கக் குயிலைமட்டும் உலகம் விரும்புவதேன்? அதன் மெல்லிய இனிய ஓசையினு லன்றோ? ஆகவேதான்), சகம்-உலகம், மென்-மெல்லிய, மதுர வாக்கால்-இன்சொல்லால், விரும்பும்-யாரையும் விரும்பி மகிழ்கின்றது. மண்ணுலகம் - இன்சொல்லால் மகிழ்ந்த இவ்வுலகம், கடின-கொடுமையான, வன்மொழியினுல் - வலிய சொல்லால், இகழும் - (எவரையும்) அருவருத்துப் பேசுகின்றது.

(க - து.) இனிமையாகவே பேசவேண்டும் என்பது.

ஓசையால் மென்மையுற்றுப் பொருளால் இனித்து ஒழுகும் சொல்லை 'மென்மதுர வாக்கு' என்றார். அவ்வாறே அவற்றால் உரத்துங் கைத்தும் எழும் மொழியைக் 'கடின வன்மொழி' என்றார். குயிலுங் கழுதையும் ஏதும் நன்மையாவது தீமையாவது செய்யாதிருக்கும்பொழுதே, அவ்விரண்டினுள் ஒன்றி னிடத்தில் விருப்பமும் மற்றொன்றினிடத்தில் வெறுப்பும் உலகத்துக்கு உண்டாவது, குயில் இன்னோசை தருவதாலும், கழுதை வல்லோசை தருவதாலுமே என்க. இன்சொல்லும் வன்சொல்லும் உலகத்துக்கு மகிழ்ச்சியும் அருவருப்புந் தரும் உண்மையை, "இன்சொலால் அன்றி இருநீர் வியனுலகம் வன் சொலால் என்றும் மகிழாதே" என்னும் அறிவுமொழியும் எடுத்துரைப்பது காண்க. இச் செய்யுளில் சகம் என்று முதலிற் பொதுவாகவும், பின்பு மண்ணுலகம் என்று சிறப்பாகவும் கூறினமையால், இன் சொல்லால் நல்லவருந் தீயவரும் உள்ள மேல் கீழான எல்லா உலகங்களும் மகிழ்வடையு மென்றும், தேவருலகம் வன்சொல்லால் மகிழாது நிற்குமேயன்றி அவ் வன்சொல்லையும் அவ் வன்சொல் பயப்பாரையும் இகழமாட்

டாது; ஆனால் மண்ணுலகம் அங்ஙனம் வாளாவிராது இகழ்தலைச் செய்யும் என்றும் அறிந்து கொள்ளப்படும்.

"நாவின் நுனியில் நயமிருக்கிற் பூமாதும்
நாவினிய நல்லோரும் நண்ணுவார்—நாவினுனி
ஆம்கடின மாகில் அத்திருவுஞ் சேராள்முன்
ஆங்கே வருமரண மாம்"

என்று இந்நூலிற் பின்னும் வருதல் அறிக. (4)

பகைசேரு மெண்ணான்கு பற்கொண்டே நன்னா
வகைசேர் சுவையருந்து மாபோல்—தொகைசேர்
பகைவரிட மெய்யன்பு பாவித் தவராற்
சுகமுறுத னல்லோர் தொழில்.

(இ - ள்.) நல் நா - நல்ல நாக்கு, பகை சேரும்-தனக்குப் பகையான, எண்ணான்கு பல் கொண்டே - முப்பத்திரண்டு பற்களைத் துணையாகக் கொண்டே, வகை சேர் சுவை-பலவகையான சுவைகளையும், அருந்துமா போல் - சுவைப்பதுபோல, தொகை சேர் பகைவரிடம்-பகைவர் பலராயினும் அவர்களிடம், மெய் அன்பு - உண்மையான அன்பையே, பாவித்து - வைத்து, அவரால்-அப் பகைவர்களால், சுகம் உறுதல் - பலவகையான இன்பங்களையும் அடைதல், நல்லோர் தொழில் - நல்லவர்களின் செயல்.

(க - து.) நல்லவர் பகைவரிடத்திலும் அன்பு கொள்வர்.

பற்கள் நாக்கைச் சில வேளைகளிற் கடித்துவிடுவதனால் அவை நாக்குக்குப் பகையாயின. (5)

காந்தனில் லாத கனங்குழலாள் பொற்பவமாஞ்
சாந்தகுண மில்லார் தவமவமாம்—ஏந்திழையே
அன்னை யில்லாப் பிள்ளை யிருப்ப தவமவமே
துன்னெயிறில் லாருண் சுவை.

(இ - ள்.) ஏந்து இழையே - மணிகளால் இழைக்கப்பட்ட நகைகளை எடுப்பாக அணிந்துள்ள பெண்ணே, காந்தன் இல்லாத - கணவன் இல்லாத, கனம் குழலாள் - பளுவான கூந்தலை உடைய பெண்மகளின், பொற்பு - அழகு, அவம் ஆம்—

வீண் ஆகும்; அன்னை யில்லா - தாயில்லாத, பிள்ளை - குழந்தை, இருப்பது-இன்னொருவரை எதிர்பார்த்துப் பிழைத்திருப்பது, அவம் (ஆம்) - வீண் ஆகும்; துன்-நெருக்கமான, எயிறு-பற்கள், இல்லார்-இல்லாதவர்கள் உண்ணும், ஊண் சுவை - உணவின் சுவை, அவம் ஆம்-வீண் ஆகும்; (அது போல), சாந்த குணம்-பொறுமையான பண்பு, இல்லார்-இல்லாத பேரறிஞரின், தவம்-இறை வழிபாடு, அவம் ஆம்-வீணாகும்; அவ் வழிபாடு செய்தும் பயனில்லை யென்றபடி.

(க - து.) பொறுமை யில்லாது தவமுயற்சியில் நின்று கடவுள் வணக்கஞ் செய்வதில் ஏதும் பயனில்லை.

இச் செய்யுளில் 'சாந்தகுணமில்லார் தவம் அவமாம்' என்பது உவமேயம். மற்ற மூன்று கருத்துக்களும் உவமைகள். இவ்வாறு உவமைகளையுங் கருத்தொடு படுத்துக் கூறுதல் புலனெறி வழக்கு; இம்முறை பின்னும் வரும்; இந்நூல் 27, 28-வது செய்யுட்களிற் காண்க.

'கல்லாத மாந்தர்க்குக் கற்றுணர்ந்தார் சொற்கூற்றம்
அல்லாத மாந்தர்க்(கு) அறம்கூற்றம்—மெல்லிய
வாழைக்குத் தானீன்ற காய்கூற்றம் கூற்றமே
இல்லிற் கிசைந்தொழுகாப் பெண்''

என்னும் மூதுரைச் செய்யுளும் இவ் வழக்கினைத் தெளியக் காட்டும். இன்னும், அடுத்த பாட்டு முற்றும் உவமையாகவே வருதலுங் காண்க.

பொற்பு என்றது, இங்கு இளமையைக் குறித்தது. பிள்ளை, பாலுண்ணும் பச்சைக் குழந்தை; ஏனென்றால், அத்தகைய தொன்றே தன் தாயின் உதவியின்றி உயிர்வாழ முடியாததும், ஒருகால் தப்பிப் பிழைத்து உயிர்வாழினும், நோயுந் துன்பமு மின்றி வாழ்தல் அரிதாவதுமாம். நெருங்கிய பற்கள் இல்லாதவர்கள் வாயிலிடும் பண்டத்தை முழுதும் மெல்ல முடியாமல் அப்படியே விழுங்கிவிடுவார்கள். அங்ஙனம் அரைகுறையாய் மென்று விழுங்குவதனால், நன்றாய் மென்று சுவைப்பதாலாம் இன்பத்தை அவர்கள் பெறமுடியாது போம். அம்முடியாமையே இங்குக் குறிக்கப்பட்டது. ஆம் என்னும் சொல்லை மற்றவற்றிற்குங் கூட்டுக. (6)

வருத்தவளை வேயரசர் மாமுடியின் மேலாம்
வருத்த வளையாத மூங்கில்—தரித்திரமாய்
வேழம்பர் கைப்புகுந்து மேதினியெல் லாந்திரிந்து
தாழுமவர் தம்மடிக்கீழ்த் தான்.

(இ - ள்.) வருத்த - தன்னைப் பிறர் வளைத்து வருத்தப் படுத்த, வளை-மிக வருந்தி வளைந்த, வேய் - மூங்கில் தண்டு, அரசர்-உலகத்துக்கே தலைவரான அரசரின், மா - பெருமை பெற்ற, முடியின் - தலைமுடியின், மேல் ஆம்-மேலாய் இருக்கும்; வருத்த - அங்ஙனம் வளைத்து வருத்த, வளையாத - வளையாது நிமிர்ந்தே நின்ற, மூங்கில்-மூங்கிற்கொம்பு, தரித்திரமாய்-கீழ்மை யுடையதாய், வேழம்பர்-கழைக் கூத்தாடிகளின், கைப்புகுந்து - கையி லகப்பட்டு, மேதினி எல்லாம்-உலகமெல்லாம், திரிந்து- சுற்றிச்சுற்றி அலைந்து, அவர்தம்-அவருடைய, அடிக்கீழ்-காலின் கீழே, தாழும் - கிடந்து இழிவடையும். தான் - அசை.

(க - து.) இளமையிலேயே வருந்திக் கல்வி கற்றுக் கொண்டால் பெருமையும், கல்லாவிட்டால் சிறுமையும் வரும்.

இச் செய்யுள், முழுதும் உவமையாக உள்ளது. உவமேயம் இதன்கண் எஞ்சி நின்றது. அது, இளமையிலேயே தந்தை யாரும் ஆசிரியரும் வற்புறுத்திப் படிக்கவைக்க, அப்பொழுது நன்றாய் வருந்திப் படித்துக் கொண்ட பிள்ளைகள் பிற்காலத்தில் அரசனும் போற்றும்படி பெருமையடைவார்கள். அப்பொழுது உடம்பு வளைந்து படித்துக்கொள்ள மாட்டாத பிள்ளைகள் பின்பு குடிக்கக் கஞ்சியும் கட்டத் துணியும் அற்று, ஊர் ஊராய் அலைந்து திரிந்து கீழ்மக்களின் வேலைகளைச் செய்துகொண்டு அவர் காலால் உதைபட்டுக் கிடப்பர் என்பது.

வளைந்த மூங்கில் அரசர் முடியில் இருப்பதை, அவர் ஏறி வரும் பல்லக்கின்மேற் காண்க. வளையாது கூத்தர் கைப்பட்ட மூங்கிலுக்கு வந்த வறுமையாவது, அழகு செய்யப்படாது, வெயிலாலுலர்ந்து மழையால் நனைந்து தரையிற் கிடந்து தட்டுண்டு கிடப்பது முதலியன. கூத்தாடியின் கைப்பட்ட மூங்கில் வேறு நல்வினைக்குப் பயன்படாது போதலின், 'கைப் புகுந்து' என்றார். மூங்கிலுக்கு வளைதல் அது குருத்தாயிருக் கும் காலத்திலாதலால், உவமேயத்திலும் இளமை என்று வருவித்துக் கொள்ளப்பட்டது. (7)

நொய்தாந் திரணத்தி னொய்தாகும் வெண்பஞ்சின்
நொய்தா மிரப்போ னுவலுங்கால்—நொய்யசிறு
பஞ்சுதனி னொய்யானைப் பற்றாதோ காற்றணுக
அஞ்சுமவன் கேட்ப தறிந்து.

(இ-ள்.) நுவலுங்கால் - சொல்லும்பொழுது, இரப்போன் - பிச்சை யெடுப்பவன், நொய்து ஆம் - சிறியதான, திரணத்தின்-துரும்பைக் காட்டிலும், நொய்து ஆம் பஞ்சின்-பின்னும் இலேசான பஞ்சைவிட, நொய்து ஆம்-மிகவும் எளியவன் ஆவான், (அங்ஙனம்) நொய்ய சிறு பஞ்சுதனின்-மிகவும் நொய்தான சிறு பஞ்சைவிட, நொய்யானை - எளியவனான அவ்விரப்பானை, காற்று - வீசியடிக்குங் காற்று, பற்றாதோ - பற்றி அடித்துக்கொண்டு போகாதோ (எனின்), காற்றும் - அக்காற்றுக்கூட, அவன் கேட்பது அறிந்து - அவ் விரப்போன் ஒவ்வொருவரையுங் கேட்டுக்கொண்டிருத்தலைத் தெரிந்துகொண்டு, அணுக அஞ்சும் - (தன்னையும் ஏதாவது கேட்டுவிடுவானோ என்று அவனிடம்) நெருங்குவதற்கே அச்சப்படும்.

(க-து.) பிச்சை யெடுப்பது மிகவும் தாழ்ந்தது.

இதனால், இரப்பவனின் எளிமையும் ஏழைமையுங் கூறப்படுகின்றன. துரும்பையும் பஞ்சையும்விட இரப்போன் எளியவன் என்றபடி. 'வெண்பஞ்சின் நொய்தாம் இரப்போன்' என்று கூறியதன் மேலும், 'நொய்ய சிறு பஞ்சுதனின் நொய்யானை' என்று கூறியதும், 'காற்றும் அணுக அஞ்சும் அவன் கேட்பதறிந்து' என்றதும் முறையே அவனுடைய ஏழைமை மிகுதியையும் இழிவு மிகுதியையும் விளக்கின. அவன் யாது கேட்டுவிடுவானோ என்று காற்றே அஞ்சுமானால், மக்கள் அஞ்சுதலைப்பற்றிக் கூறல்வேண்டா. எனவே, எல்லாரும் இவ்வாறு அஞ்சி ஒதுங்கிவிடுவார்களானால், அவ்விரப்போன் துணையற்றுத் தவிப்பான். அப்போது அவன் எளியனாதல் புலனாகின்றமை காண்க. (8)

ஒருபோது யோகியே யொண்டளிர்க்கை மாதே
இருபோது போகியே யென்ப—திரிபோது
ரோகியே நான்குபோ துண்பா னுடல்விட்டுப்
போகியே யென்று புகல்.

(இ - ள்.) ஒள் - ஒளியுள்ள, தளிர் - இலைக்கொழுந்து போலும், கை-கையையுடைய, மாதே - அழகுடைய பெண்ணே, யோகியே - தவம் செய்பவன், ஒருபோது (உண்பான்) - ஒரு நாளில் ஒருபொழுது உண்பான்; போகியே - உலக இன்பங்களை நுகர்ந்துகொண்டிருப்பவன், இருபோது (உண்பான்) - ஒரு நாளில் இரண்டு முறை உண்பான்; ரோகியே - நோயாளியே, திரிபோது (உண்பான்) - ஒரு நாளில் மூன்று வேளைகள் உண்பான்; உடல் விட்டுப் போகியே - உடலை விட்டு இறந்துபோகக் கூடியவனே, நான்கு போது உண்பான் - ஒரு நாளில் நான்கு தடவைகள் உண்பவனுவான், என்று புகல் - என்று சொல்.

(க - து.) ஒரு வேளை இரு வேளைக்கு மேல் மூன்று வேளையும் நான்கு வேளையுமாக உண்ணலாகாது.

யோகியே போகியே என்பவற்றின் இரண்டு ஏகாரமும் அசைகள்; ரோகியே போகியே என்பவற்றின் ஏகாரங்கள் தேற்றம். உண்பான் என்னும் வினையாலணையும் பெயரை மற்ற வற்றோடும் ஒட்டுக. என்று என்பதனோடு உம்மை கூட்டி ரோகியே யென்றும், போகியே யென்றும் எனப் பொருளுரைத் தலு மொன்று.

இச் செய்யுளில் மூன்று போதும் நான்கு போதும் உண்ணல் கூடாதென்று மறுத்து, ஒருபோதுண்பதைத் துறவறத்தார்க்கும் இருபோதுண்டலை இல்லறத்தார்க்குமாக ஆசிரியர் எடுத்துக் காட்டினர். ஏனென்றால், முன்னிரண்டையும் பின்னிரண்டினின் றும் 'என்ப' என்னும் இடைகொடுத்துப் பிரித்தாராதலான் என்க.

கண்ணிரண்டே யாவர்க்குங் கற்றோர்க்கு மூன்றுவிழி
எண்ணுவிழி யேழாகு மீவோர்க்கு—நண்ணும்
அநந்தந் தவத்தா லருண்ஞானம் பெற்றோர்க்
கநந்தம் விழியென் றறி.

(இ - ள்.) யாவர்க்கும் கண் இரண்டே (ஆகும்) - மக்க ளெல்லார்க்கும் இரண்டு கண்களே உள்ளன; கற்றோர்க்கு மூன்று விழி (ஆகும்) - படித்தவர்களுக்கு மூன்று கண்கள் இருக் கின்றன; ஈவோர்க்கு - கொடுப்பவர்களுக்கு, எண்ணும்-மதிக்கத் தகுந்த, விழி ஏழு ஆகும் - கண்கள் ஏழாகும்; நண்ணும்-வந்து

கூடுகின்ற, அநந்தம் - முடிவில்லாத, தவத்தால் - நல்வினையால் (புண்ணியத்தால்), அருள் ஞானம் - அருள் வழிப்பட்ட மெய்யறிவைப், பெற்றோர்க்கு - பெற்ற பெரியோர்களுக்கு, அநந்தம் விழியாகும் - கணக்கில்லாத கண்கள் உண்டு, என்று அறி- என்று நீ தெரிந்து கொள்.

(க - து.) பொது மக்களைவிடக் கற்றவர்களும் வள்ளல்களும் தவத்தோரும் முறையே மேலானவர்களென்பது.

'ஏழாகும்': ஆகும் என்பதை மற்றவற்றிற்கும் ஒட்டுக. முதல் அநந்தம் அழியாமைப் பொருளையும், இரண்டாம் அநந்தம் அளவின்மைப் பொருளையும் உடையன. கண்ணிரண்டே என்பதன் ஏகாரம் தேற்றப் பொருளது. யாவர்க்கும் என்றது, மக்களினுங் கீழ்ப்பட்ட விலங்கு, புள் முதலியவைகளையும் உள்ளடக்கி; அவற்றிற்கும் இரண்டு கண்களே உளவாதலால், மதிக்கத்தக்க கண்கள் வேறின்றி அவ்விரண்டையே உடைய மக்கள், அவ் விலங்கு முதலியவற்றினுஞ் சிறந்தாரென்பது சொல்லாமை தெளிவித்தற் பொருட்டு. எண்ணும் என்பதைக் கற்றோர் விழிக்கும், அருண்ஞானம் பெற்றோர் விழிக்கும் அடையாக்கிக் கொள்க. எண்ணும் விழியாவது - பெரியோரால் மதிக்கத்தக்க கண்களை; ஊனக் கண்ணைவிட அறிவுக் கண்ணே சிறந்ததாதலால் 'எண்ணும் விழி' என்றார். கல்வி முதலிய வேறு கண்கள் இருக்கும்பொழுது இழிவான அவர்தம் ஊனக் கண்ணும் சிறந்தெடுத்துப் பாராட்டப்படுகின்றமையின், கற்றவர் முதலானவர்களுக்கு அறிவுக்கண்ணோடு அவ்வூனக் கண்கள் இரண்டையும் ஒரு சேரச் சேர்த்து மூன்று என்று கூறினார். கொடுக்குங் கையிலுள்ள நகக் கண்கள் ஐந்தோடு ஊனக்கண்கள் இரண்டுஞ் சேர்க்க, ஈவோர்க்குக் கண்கள் ஏழாகுமென்று கொள்க. ஊனக் கண், கல்வி முதலிய வேறு கண்கள் இல்லாதபொழுது இழிக்கப்படுதலும், அவை இருக்கும்பொழுது மதிக்கப்படுதலுமான இவ்வுண்மையை,

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்"

என்னும் திருக்குறளிலும்,

"மைதவழ் வெற்பன் மணவணி காணமற்
கையாற் புதைபெறூஉங் கண்களுங் கண்களோ"

என்னுங் கலித்தொகை யடிகளிலும் (39) காண்க. (10)

உற்றபெருஞ் சுற்ற முறநன் மனைவியுடன்
பற்றிமிக வாழ்க பசுவின்வால்—பற்றி
நதிகடத்த லன்றியே நாயின்வால் பற்றி
நதிகடத்த லுண்டோ நவில்.

(இ - ள்.) பசுவின் வால் - பசு மாட்டின் வாலை, பற்றி - பிடித்துக்கொண்டு, நதி - நீர் நிரம்பிய ஆற்று வெள்ளத்தை, கடத்தலன்றி - கடப்பதல்லாமல், நாயின் வால்-ஒரு சிறு நாயின் வாலை, பற்றி - பிடித்துக் - காண்டு, நதி - ஆற்றை, கடத்தல் - கடந்து செல்லல், உண்டோ - முடியுமோ, நவில் - நீ சொல்; (அது போல), உற்ற-பொருந்திய, பெருஞ்சுற்றம் - பெருமை யான உறவினர், சூழ-தன்னைச் சூழ்ந்திருப்ப, நன் மனைவியுடன்- ஒருவன் தனக்கு வாய்த்த நல்ல மனைவியோடு, பற்றி - அன்பு கொண்டு, மிக - நன்றாக, வாழ்க - வாழக் கடவன்.

(க - து.) நல்ல இல்லாளோடு கூடி இல்வாழ்க்கையை நடத்தல் வேண்டும்.

நல்ல சுற்றத்தார் வினைவகையால் நேர்வராதலின், 'உற்ற பெருஞ் சுற்றம்' என்றார். அஃதாவது நாமே இப் பிறவி முயற்சி யாற் சேர்த்துக் கொள்ளல் இயலாதென்பது. பெருஞ் சுற்ற மென்றது, நல்ல தன்மைகளிற் பெருமை மிக்க உறவினரை; ஏனென்றால் அவருடைய பண்புகளே வாழ்க்கையாற்றைக் கடத்தற்கு உதவுமாகலின். வாழ்க்கையை இப் பாட்டில் ஆறாக உருவகப்படுத்தினார்; பல்வகையான ஞான வளங்களை யெல்லாந் தொகுத்துக் கொண்டு பலர்க்கும் பயனாகி இறுதியில் இறைவன்றன் பேரருட் கடலிற் படிதலின் என்க. அன்றியும், நினைத்தாலும் நெஞ்சம் நீராம்படி பலப் பல இடுக்கண்களை இவ் வுலக வாழ்க்கை உடையதுபோலத் தன்கண் இறங்குவாரைத் துன்பத்துக் குள்ளாக்கிக் கடைசியிற் கொல்விக்கவுந் தக்க அலை களும் சுழிகளும் அவற்றின் விரைவுகளும் பிறவும் ஆறு உடைத் தாதலுங் கருதுக. இவ்வகையான நடுக்கமுடைய வாழ்க்கை யைக் கடந்து மேம்படுதற்கு உதவியாகப் பற்றத்தக்க நல்ல துணை நன் மனைவியே யாவாள். மனைவியாவாளே தன் கணவ னுடைய எல்லாச் செய்திகளையும் மிக நெருங்கிப் பழகியறிந்து

அவ்வறிதலால் அவன் இயல்புக்கும் ஆற்றலுக்கும் ஏற்ப இடனறிந்து இடுக்கண் களைந்து துணைபுர்வள். மனைவியும் நெஞ்சொத்தவளாயிருத்தல் வேண்டு மென்பார், 'நன் மனைவி' யென்று அடையொடு சேர்த்துக் கூறினர். கணவனும் மனைவியுந் தமக்குள்ள ஒருமைப்பாட்டினாலேயே எடுத்த வேலையை முடிக்கப்பெறுதல் வேண்டு மென்பது,

"காதன் மனையாளுங் காதலனும் மாறின்றித்
தீதி லொருகருமஞ் செய்பவே"

என்னும் நன்னெறிச் செய்யுளாலுந் தெளியப்படும். மனைவி கணவனைப் பாதுகாக்குங் கடமையுடையவள் என்பது,

"தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

என்னுந் திருக்குறளிற் கண்டுகொள்க.

பொருள் முதலிய வேறு வகைகளாற் பற்றின் அப்பொருள் முதலியவை குறைவுபட்டும் இல்லாதும் போகும்வழிக் கணவன் மனைவியர்க்குள் ஒற்றுமை கெட்டுத் துன்பம் விளையுமாதலின், அப்பொருள் முதலியவை இல்லாதபொழுதும் ஒற்றுமை நின்று இன்பந் தோன்றுதற்கு அன்பாற் பற்றுக வென்பார், 'பற்றி' என்றார். மனைவியை உடன் பற்றி என்ற பொருள் கூறுவதும் ஒன்று. மிக வாழ்க என்றது, அன்பால் நெஞ்சமொத்த மனைவியொடு கூடிப் பெறத்தக்க எல்லா நலங்களையும் மிகவும் பெற்று நன்றாக வாழ்க என்பதற்கு. பசுவின் வால் பற்றி நதி கடத்தற்கு நன்மனைவியைப் பற்றி வாழ்தலே உவமேயமாதலின், நாயின் வால் பற்றி ஆறு கடத்தற்குத் தீய மனைவியைப் பற்றி வாழ்தலை உவமேயமாகக் கொள்க. ஆற்றைக் கடத்தற்குச் சிறிதும் உதவியாகாது அவ்வாற்றில் வீழ்ந்து இறத்தற்கே நாய் கருவியாதல்போல, நெஞ்சொத்தில்லாத தீய மனைவியும் அன்பற்ற பொருட் பெண்டிரும் பிறரும் வாழ்க்கையைச் செம்மைப்படுத்தும் வீடுபேற்றின்பந் தருதற்கு உதவியாகாது அவ்வாழ்க்கையிற் பல இன்னல்களை விளைத்து இறப்பித்தற்கே இடஞ்செய்வர்.

"ஏமாந்த போழ்தின் இனியார்போன்று இன்னாராய்த்
தாமார்ந்த போதே தகர்க்கோடாம்—மாணோக்கின்

தம்நெறிப் பெண்டிர் தடமுலை சேராரே
செந்நெறிச் சேர்துமென் பார்" (பொதுமகளிர். 8)

"செம்மையொன்(று) இன்றிச் சிறியார் இனத்தராய்க்
கொம்மை வரிமுலையாள் தோள்மரீஇ—உம்மை
வலியால் பிறர்மனைமேல் சென்றாரே இம்மை
அலியாகி ஆடிஉண் பார்" (பிறர்மனை நயவாமை. 5)

என்பன நாலடியார். (11)

ஆசைக் கடியா னகிலலோ கத்தினுக்கும்
ஆசற்ற நல்லடியா னவானே—ஆசை
தனையடிமை கொண்டவனே தப்பா துலகந்
தனையடிமை கொண்டவனே தான்.

(இ - ள்.) ஆசைக்கு - அவாவுக்கு, அடியான் - அடிமைப்பட்டுக் கிடப்பவன், அகில லோகத்தினுக்கும் - எல்லா உலகங்களுக்கும், ஆசு-குற்றம், அற்ற-இல்லாத, நல்-நல்ல, அடியான் ஆவானே - அடிமையாவான். ஆசைதனை - அவாவை, அடிமை கொண்டவனே-தனக்கு அடிமையாகக் கொண்டவனே, (அகில) உலகந்தனை - எல்லா உலகத்தையும், தப்பாது - தவறாமல், அடிமை கொண்டவனே (ஆவான்) - அடிமைப்படுத்திக்கொள்வான்.

(க - து.) அவா இல்லாதவன் உலகத்தை வெல்வான்.

ஏகாரங்கள் மூன்றிலும் நடு நின்றது பிரிநிலை. மற்ற இரண்டும், தான் என்பதும் அசைகள். அகிலம் ஆவான் என்பவற்றைப் பின்னுங் கொள்க. ஆசைக்கு அடியான் என்றால், ஆசை போனவழியெல்லாந் தான் அடங்கி நடப்பவன் என்பது. ஆசை இறுதியில் துன்பத்தையே தருமாதலால், அதன்வழியே சென்றவன் அளவில்லாத துன்பங்களாற் சூழப்பட்டிருப்பான். துன்பம் நேர்ந்து மிகுந்தமையின் அதனை நீக்கிக்கொள்வதற்கு உலகத்தாரின் உதவியை நாடி, அவரெல்லார்க்கும் அடிமையாய்க் கிடப்பனாதலின், "ஆசைக்கு அடியான் அகிலலோகத்தினுக்கும் அடியான்" என்றார். அவனை 'ஆசற்ற நல்ல அடியான்' என்றது இழிப்புரை. அல்லது உள்ளபடியே பிறரை எதிர்பார்த்துக் கிடக்கும் அடியான் என்றுமாம். ஆசைதனை அடிமை கொண்ட

வன் என்றால், ஆசைவழித் தான் நடவாமல், தன்கண் ஆசையை எழவொட்டாதபடி அதை அடக்கி நிற்பவன் என்பது. அப்படிப் பட்டவனுக்கு இன்பமே வரும். அவ்வின்பத்தைப் பெற உலகத் தவரெல்லாரும் இவனை நோக்கி அடிமை கிடப்பராதலால், 'ஆசை தனை அடிமை கொண்டவன் தப்பாது உலகந்தனை அடிமை கொண்டவன்' என்றார். பிறரை எதிர்பாராமையின் உலகத் தார்க்கு இவன் அடிமையாகான். உலகம் என்பது உலகத்தி லுள்ள உயிர்களை. இன்பத்தை எல்லா உயிர்களுந் தப்பாது பெற விரும்புதலால், அவாக் கெட்டு இன்பமார்ந்து இருப்பவனுந் தப்பாது உலகத்தினை அடிமை கொண்டவனாவான். அவா துன்பந் தரும் என்பதும், அவாவின்மை இன்பந் தருமென் பதும்,

"அவா இல்லார்க்(கு) இல்லாகுந் துன்பம்அஃது உண்டேல்
தவாஅது மேன்மேல் வரும்"

"இன்பம் இடையறா(து) ஈண்டும் அவாஎன்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்"

என்னும் திருக்குறள் கொண்டு அறிந்துகொள்க. (12)

ஆனந் தணாமகளிர் அன்பாந் குழந்தைவதை
மானந் தரும்பிசி வார்த்தையிவை—மேனிரையே
கூறவரு பாவங் குறையாதவ் வொன்றுக்கு
நூறதிக மென்றே நுவல்.

(இ - ள்.) ஆன் (வதை)-ஆக் கொலை, அந்தணர் (வதை)-பார்ப்பார் கொலை, மகளிர் (வதை) - பெண் கொலை, அன்பாம் குழந்தை வதை - அன்பு வடிவான குழந்தைகளின் கொலை, மானம் தரும் பிசி வார்த்தை - இழிவைக் கொடுக்கும் பொய்யுரை, இவை-இவ்வைந்து தீமைகளையும், மேல் நிரையே கூற - மேல் வரிசையாகச் சொல்ல; வரும்-அவற்றால் வரும், பாவம்-தீவினை, ஒவ்வொன்றுக்கும்-ஒன்றுக் கொன்று, குறையாது - குறையாமல், நூறு-நூறு பங்கு, அதிகம்-மிகுதியாம், என்றே நுவல் - என்றே சொல்லு.

(க - து.) ஆன் அந்தணர் மகளிர் குழந்தை முதலியவர் கட்குத் தீமை செய்வதும், பொய் சொல்வதுங் கூடாது.

ஏ - தேற்றம். வதை என்பதை மற்றவற்றோடும் ஒட்டுக. பொய்யையும் மற்றத் தீமைகளையும் வேறு பிரித்தற்கு வதை என்பதை இறுதியிற் கொடுத்தார். பெற்றோர் செலுத்தும் அன்பெல்லாந் தங்குதற்குத் தக்க இடமாயுள்ளது குழந்தையே யாதலால், 'அன்பாங் குழந்தை' என்றார். பொதுவாகக் குழந்தைகளைக் கொல்லுதல் தவறென்பதோடு, அதனினுஞ் சிறப்பாக ஆன், அந்தணர், மகளிர் என்பாரையும் அவர்தங் குழந்தைகளான ஆன்கன்றுகள், பார்ப்பனப் பிள்ளைகள், பெண் குழந்தைகள் என்பவைகளையுங் கொல்லுதல் பெரிதும் ஏதமாமென்று குறித்தற்கு அன்பாம் என்னும் அடைகொடுத்தா ரென்றலுமொன்று. ஆன் அந்தணர் மகளிர் என்னும் சொற்கள் முறையே கன்றுடை ஆனையும், அந்தண்மையுள்ள பார்ப்பாரையும், கற்புடைப் பெண்டிரையுஞ் சிறப்பாக உணர்த்தும். வதை என்பது கொலையையே யன்றிச் சிறிது துன்பஞ்செய்தலையுங் குறிக்குமாதலின், அவர்க்கு அதுதானுஞ்செய்யலாகா தென்க. துன்புறுத்துதற்குங் கொலை செய்தற்கும் இவர் தகாதவர் என்பது,

"பாய்எரி இந்தப் பதியூட்டப் பண்டேஓர்
ஏவல் உடையேனால் யார்பிழைப்பார் ஈங்(கு)என்னப்
பார்ப்பார் அறவோர் பசுப்பத் தினிப்பெண்டிர்
மூத்தோர் குழவி எனும்இவரைக் கைவிட்டுத்
தீத்திறந்தார் பக்கமே சேர்கஎன்று காய்த்திய
பொற்றொடி ஏவப் புகைஅழல் மண்டிற்றே
நல்தேரான் கூடல் நகர்" (வஞ்சினமாலை, 51-57)

என்னுஞ் சிலப்பதிகார அடிகளாலும் விளங்கும். மானம் என்றது இங்கு இழிவுப்பொருளில் வந்தது. (13)

பெற்றமையு மென்னப் பெரியோரும் பெற்றபொருண்
மற்றமையு மென்றே மகிழ்வேந்து—முற்றியநன்
மானமிலா வில்லாளு மானமுறு வேசியரும்
ஈன முறுவா ரிவர்.

(இ - ள்.) பெற்று - பொருளைப் பெற்றிருந்து, அமையும் - இதுபோதும், என்ன - என்று நெஞ்சம் மகிழாத, பெரியோரும் - சான்றோர் எனப்படுவாரும், பெற்ற பொருள் - தாம் அடைந்த பொருளே, அமையும் என்று - போதுமென்று, மகிழ் - நெஞ்சம்

மகிழும், வேந்தும் - அரசர்களும், முற்றிய - மிகுந்த, நல் - நல்ல, மானம் - நாணம், இலா - இல்லாத, இல்லாளும் - மனைவியும், மானம் - அந்த நாணத்தை, உறும் - பெறுகின்ற, வேசியரும் - பொது மகளிரும், இவர் - ஆக இந் நால்வரும், ஈனம் உறுவார் - தாழ்வு அடைவார்.

(க - து.) பெற்ற பொருளிலே பெரியோர்கள் அமைதி பெறுமையிலும், அதனை அரசன் வெறுப்பதிலும், இல்லாள் நாண முறுமையிலும், வேசிகள் அதனைக் கொள்வதிலும் அவர்க்குத் தாழ்வே யன்றி உயர்வில்லை.

பொருள் வேண்டக்கூடாத பெரியோர் அதனை வேண்டிலுற் குற்றமாதல் போலப், பொருளை மேன்மேலும் விரும்பிச் சேகரிக்கவேண்டிய அரசன் அதனை வேண்டாது வெறுத்தலுங் குற்றமாயிற்று; அதைப்போலவே, இல்லாளுக்கும் வேசியர்க்கும் நாணத்தைக் கொள்க. இல்லாளுக்கும் வேசியர்க்கும் நாணம் வேண்டியும் வேண்டாதும் நிற்றல் போலப், பெரியோர்க்கும் அரசர்க்கும் பொருள் வேண்டாதும் வேண்டியும் நிற்கின்றதென்று இவற்றை உவமை கொள்ளுதலும் ஒன்று. அதற்குப் பெரியோர் அரசர் இல்லாளர் வேசியர் என்பன எதிர் நிரனிறையாகும்.

பெற்றபொருள் போதுமென்று செங்கோலரசன் அமைதியுறுவனாயின், மிகுந்த பொருளால் உலகுக்குச் செய்யவேண்டிய உயர்ந்த அறச்செயல்களை யெல்லாம் அவன் செய்யமாட்டாதவனாய்ப் போவனாதலாலும், மிகுந்த பொருள் இல்லாமையாற் பகையரசர்களால் வெல்லப்பட்டுத் தான் எண்ணிய எண்ணப்படி நாட்டுக்கு நலஞ்செய்யமாட்டாது தன் நாட்டவரைப் பிறர் கையில் விடுத்து அவர்க்கு இன்னலிழைத்தவன் ஆவனாதலாலும் அவனுக்குத் தாழ்வு நேர்கின்றமையின், பெற்ற பொருள் போதுமென்று அரசன் அமைதியுறுதல் அவனுக்குக் குற்றமாயிற்று. அவ்வாறே, முதலிலேயே நாணமிறந்து பலரையும் மருவிக் கற்பிழந்துவிட்ட வேசி, மீண்டும் நாணமுடையளாய்த் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளுதலால் அவட்கு அத்துணை உயர்வு வராமையானும், முதலிலேயே நாணிழந்து பிறர் மெய் தொட்டுப் பொருள் தேடி உயிர்வாழ்ந்துவந்தவள், இனித் தன்னை எவரும் மணந்து தனிவாழ்க்கையில் நிறுத்திப் பொருள் தாராராதலின், தன் மக்களோடு வறுமையிற் கிடந்து உழலுதலாகிய தாழ்வே வரு

இன்றமையானும், வேசியர் நாணமுறுதலிற் றாழ்வு வருதல் காண்க.

இனிப் பெரியார் பொருள் விழைதலும், இல்லாள் நாணிழத்தலுந் தாழ் வென்பது வெளிப்படை. எவ்வளவு இருத்தல் வேண்டுமோ அவ்வளவும் இல்லாளுக்கு இருத்தல் வேண்டு மென்பார், 'முற்றிய மான' மென்றும், அவட்கும் அவளோடு சேர்ந்த அவள் கொழுநனுக்கும் அது பலவகையிலும் நலமே விளைத்தலால், 'நன் மான' மென்றும் அடைமொழிகள் தரப்பட்டன. மற்று - அசை. (14)

கற்றோர் கனமறிவர் கற்றோரே கற்றறியா
மற்றோ ரறியார் வருத்தமுறப்—பெற்றறியா
வந்தி பரிவாய் மகவைப் பெறுந்துயரம்
நொந்தறிகு வாளோ நுவல்.

(இ - ள்.) வருத்தம் உற - துன்பப்பட்டு, பெற்று அறியா—(பிள்ளையைப்) பெற்றறியாத, வந்தி-மலடி, மகவை-குழந்தையை, பெறுந் துயரம்-பெற்றெடுக்குந் துன்பத்தை, நொந்து-நோவுற்று, பரிவாய் - இரக்கமாய், அறிகுவாளோ-தெரிந்துகொள்வாளோ, நுவல் - நீ சொல், (அவள் தெரிந்துகொள்ளமாட்டாள். அது போல,) கற்றோர் - வருந்திப் படித்தவர்களின், கனம் - பெருமையை, கற்று அறியா - அங்ஙனம் வருந்திப் படித்தறியாத, மற்றோர் - மூடர்கள், அறியார் - தெரிந்துகொள்ளமாட்டார்கள். கற்றோரே அறிவர் - அவர்கள் பெருமையைப் படித்தவர்களே அறிவார்கள்.

(க - து) படித்தவர் பெருமையைப் படித்தவரே அறிவார்.

அறிகுவாளோ என்பதில் கு எழுத்துப்பேறு. பரிவாய் என்றது, பிள்ளையைப் பெறுந் துன்பத்தோடு அக்கால் அப்பிள்ளை மாட்டு உண்டாகும் ஓர் அன்பை. அந்த அன்பையும் மலடி அறியாள் என்றபடி.

"பெற்றவட்கே தெரியும் அந்த வருத்தம் பிள்ளை
பெறாப்பேதை அறிவாளோ"

என்று தாயுமானவரும் இவ்வாறே கூறுவர். (15)

செய்யு மொருகருமந் தேர்ந்து புரிவதன்றிச்
செய்யின் மனத்தாபஞ் சேருமே—செய்யவொரு
நற்குடியைக் காத்த நகுலனைமுன் கொன்றமறைப்
பொற்கொடியைச் சேர் துயரம் போல்.

(இ - ள்.) செய்யும் - செய்யத்தக்க, ஒரு கருமம்-ஒரு வேலையை, தேர்ந்து - ஆராய்ந்துபார்த்து, புரிவதன்றி - செய்வதல்லாமல், செய்யின் - நினைந்துபாராது செய்வதனால், முன் - முன்னொருநாள், செய்ய - செம்மையான, ஒரு நல் குடியை-ஒரு நல்ல குழந்தையை, காத்த - பாதுகாத்துக்கொண்டிருந்த, நகுலனை-கீரிப்பிள்ளையை, கொன்ற - (ஆராயாது) கொன்றுவிட்ட, மறைப் பொற்கொடியை - பார்ப்பனப் பெண்ணை, சேர் - சூழ்ந்த, துயரம்போல் - துன்பம்போல, மனத்தாபம்- துன்பம், சேரும் - உண்டாகும்.

(க - து.) எதனையும் முன்னாராய்ந்து செய்தல் வேண்டும்.

தேர்ந்து புரிதலாவது, 'தான் எடுத்துக்கொண்ட வேலை தன் ஆற்றலுக்கும், காலம் இடம் துணை முதலியவற்றிற்கும் பொருந்துமா வென்று முன்னரே நினைந்துபார்த்து ஒரு முடிவுக்கு வருதல், அவ் வேலையை முடிக்கும் முறையையும் ஆராய்தலென்று கொள்க. மனத்தாபம் என்பது நிகழ்ந்தது எண்ணி ஓயாது நெஞ்சுளைதல். செய்ய-அழகிய. செம்மை என்னும் பண்புப்பெயர்ப் பகுதி திரிந்து செய்ய என்றாயிற்று. நல் என்றது, குலத்தின் உயர்வை. குடி-குடிக்கு நிலைக்களனான குழந்தையை உணர்த்துதலால் ஆகுபெயர். ஆகவே, அழகிய உயர்ந்த ஒரு குழந்தையைச் 'செய்ய ஒரு நற்குடி' என்றார். குலம் நீள்வதற்குக் குழந்தை இன்றியமையாதது என்பது வெளிப்படை. அங்ஙனமன்றிக் குடி என்பதை வீடென்று கொள்வாருமுளர். முன்-காலவாகுபெயர். மறைப் பொற்கொடி என்பதில், மறை யென்பது பார்ப்பனக் குலத்தையும், பொற்கொடி என்பது இளமையையும் உணர்த்தவே, அத்தொடரால் காணும் பொருள் அழகிய இளம்பெண்ணாகிய பார்ப்பனி யென்பது. இஃது அன்மொழித்தொகை. இச்செய்யுட் பொருளை,

"அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல்"

என்னும் திருக்குறளிலுங் காண்க.

கதை: குழந்தை யில்லை யென்று ஒரு கீரிப்பிள்ளையை வளர்த்துவந்த பார்ப்பனி யொருத்திக்குச் சில நாட்கள் கழித்து மகப்பேறுண்டாயிற்று. குழந்தையைப் பெற்று மகிழ்ந்தாளாயினுங் கீரியின்பால் அன்பு தளர்ந்திலது. ஒரு நாள் தன் குழந்தையைத் தொட்டிலிலிட்டுத் தூங்கவைத்துக் கீரியை அக் குழந்தைக்குக் காவலாக அருகு நிறுத்திப் பக்கல் இருந்ததொரு குளஞ்சென்று நீரெடுத்துத் திரும்பினள். இவள் திரும்புவதற்குள் தொட்டிலருகே ஒரு பாம்பு வந்தது அது குழந்தையைக் கடித்துவிடாதபடி கீரிப்பிள்ளை அப்பாம்பைத் துண்டு துண்டாகக் கடித்துவிட்டது. அதனால் அதன் வாயெல்லாஞ் செந்நீர் பாய்ந்து சிவப்பாய்விட்டது. இதற்குள் பார்ப்பனி வீட்டுக் கருகே வந்ததுங் கீரி மகிழ்ந்து முன்னே ஓடிற்று. பார்ப்பனி ஆராயாமல், குழந்தையைத்தான் அது கடித்ததென் றெண்ணி, நீர்க்குடத்தைக் கீரிப்பிள்ளையின் தலைமேற் போட்டு அதனைக் கொன்றனள். பின்பு வீடுசேர்ந்து நடந்தது கண்டு கீரிப் பிள்ளையை நினைந்து, தான் ஆராயாது செய்துவிட்டமைக்கு ஏங்கி அவ்வேகத்தாலேயே உயிர் நீத்தனள். (16)

நாவி னுனியி னயமிருக்கிற் பூமாதும்
நாவினிய நல்லோரும் நண்ணுவார்—நாவினுனி
ஆங்க டினமாகி லத்திருவுஞ் சேராண்முன்
ஆங்கே வருமரண மாம்.

(இ-ள்.) நாவின் நுனியில் - நாக்கு முனையில், நயம்-மகிழத்தக்க இன்சொல், இருக்கில்-உண்டாகுமானால், பூமாதும்-மலர்மகளும், நா இனிய-இனிய செஞ்சொல்லால் நாக்கு இனிமை யடையப்பெற்ற, நல்லோரும்-நல்ல பெரியோரும், நண்ணுவர்-பேசுவார், நாவின் நுனி-அங்ஙனமன்றி அந் நாக்கு நுனி, கடினம் ஆம் ஆகில்-வன்சொற்கள் பயின்று வலிதாகுமானால், அத் திருவும்-முன் சொன்ன திருவினளும், சேராள்-சேரமாட்டாள், ஆங்கு மரணம் வரும்-அதனால் சாவும் உண்டாகும்.

(க-து.) மக்கள் இன்சொல்லே உடையராதல் வேண்டும்.

நயம் மிக்க இனிய சொல், நயம் எனப்பட்டது. பூமாதும் நல்லோரும் நண்ணுவா ரென்றது, அவர் அருள் நண்ணும்

என்றபடி. பூமாதின் அருள் இம்மைப்பயனுக்கும், நல்லோரின் அருள் மறுமைப் பயனுக்கு மெனக் கொள்க. ஆங் கடினம் என்பதைக் கடினம் ஆம் என்று மாற்றுக. ஆங்கே-அப்பொழுதே எனுலுமாம். இச் செய்யுட் பொருள் முன்னும் வந்தது. (17)

ஈக்கு விடந்தலையி லெய்துமிருந் தேளுக்கு
வாய்த்த விடங்கொடுக்கில் வாழுமே—நோக்கரிய
பைங்கணர வுக்குவிடம் பல்லளவே துர்ச்சனருக்
கங்கமுழு தும்விடமே யாம்.

(இ-ள்.) ஈக்கு-ஈ என்னும் சிற்றுயிர்க்கு, விடம்-நஞ்சு, தலையில் எய்தும்-தலையிலே உண்டாகும், இரு தேளுக்கு-கருந் தேளுக்கு, விடம் - நஞ்சு, கொடுக்கில் - அதன் கொடுக்கில், வாழும்-இருக்கும், நோக்க அரிய - பார்ப்பதற்கு அருமையான, பை - பசிய, கண் - கூரிய கண்களையுடைய, அரவுக்கு - பாம்பு களுக்கு, விடம் - நஞ்சு, பல் அளவே-பல்லில்மட்டும் இருக்கும், துர்ச்சனருக்கு - (ஆனல்) கெட்ட குணமுடையவர்களுக்கோ, அங்கம் முழுதும் - அவர்கள் உடம்பு முழுவதும், விடமே ஆகும்-நஞ்சேதா னிருக்கும்.

(க - து.) தீயோர் தொடர்பு சிறிதுமே கூடாது.

கொடுமை மிக்க தேளெனினுமாம். வாழும் என்றார், தேள் களுக்கு நஞ்சுக்கெனத் தனியே கொடுக்கொன் றிருத்தலா லென்க. நோக்கரிய என்பதை அரிய நோக்குப் பைங்கண் அரவு என்று மாற்றி, அந்நோக்கைப் பாம்புக் காக்குதலுமாம். கெடுதியே உருவமாயிருப்பவர் தீயோர் என்றபடி. மேல் வருஞ் செய்யுளும் இது. (18)

துர்ச்சனரும் பாம்புந் துலையொக்கி னும்பாம்பு
துர்ச்சனரை யொக்குமோ தோகையே—துர்ச்சனர் தாம்
எந்தவிதத் தாலு மிணங்காரே பாம்புமணி
மந்திரத்தா லாமே வசம்.

(இ-ள்.) தோகையே-பெண்ணே, துர்ச்சனரும்-தீயோரும், பாம்பும் - பாம்புகளும், துலை - (ஓர்) அளவில், ஒக்கினும் - ஒப்பா னுலும், பாம்பு துர்ச்சனரை ஒக்குமோ - பாம்புகள் கெட்டவரை

(மற்றோர் வகையில்) ஒப்பாகுமோ? (ஒப்பாகாது; ஏனெனில்,) பாம்பு மணி மந்திரத்தால் வசம் ஆம் - பாம்புகள் மணி மந்திரங்களால் அடங்கி நிற்கும், (ஆனால்) துர்ச்சனர்தாம் எந்த விதத்தாலும் இணங்காரே - தீயோர்கள் எவ்வகையான முயற்சியினாலும் நல்ல வழியில் திரும்பமாட்டார்கள்.

(க - து.) தீயோர் எவ்வகையினாலும் திருந்தார்.

துலை - அளவு கருவி; அளவுக்கானமையின் அஃதும் தோகை என்பதும் ஆகுபெயர்கள். அளவு என்பது பாம்புந் தீயோருந் தீமையில் ஓரளவினராதலே. மந்திரம் - மறைமொழி. மணிகளாலும் மந்திரத்தாலும் பாம்பை உரிமைப் படுத்துதல் வெளிப்படை. தீயாரை இணக்க இயலாதென்பதை இதன் 21-ம் பாட்டும்,

"கப்பி கடவதாக் காலைத்தன் வாய்ப்பெயினுங்
குப்பை கிளைப்போவாக் கோழிபோன்—மிக்க
கனம்பொதிந்த நூல்விரித்துக் காட்டினுங் கீழ்தன்
மனம்புரிந்த வாறே மிகும்" (கீழ்மை. 1)

என்னும் நாலடியாரும் நன்குணர்த்தும். இவர்தங் கொடுமையை மேல்வருஞ் செய்யுளாலும் அறியலாம். (19)

கொம்புளதற் கைந்து குதிரைக்குப் பத்துமுழம்
வெம்புகரிக் காயிரந்தான் வேண்டுமே—வம்புசெறி
தீங்கினர்தங் கண்ணிற் றெரியாத தூரத்து
நீங்குவதே நல்ல நெறி.

(இ - ள்.) கொம்பு உளதற்கு ஐந்து - கொம்பு உள்ளதற்கு ஐந்து முழத் தொலைவும், குதிரைக்குப் பத்து முழம் - குதிரைக்குப் பத்துமுழத் தொலைவும், வெம்பு கரிக்கு ஆயிரம் முழம்-சினங்கொள்ளுகின்ற யானைக்கு ஆயிர முழத் தொலைவும், வேண்டும் - விலகிப்போகவேண்டும். (ஆனால்) வம்பு - தீமைகள், செறி - மிகுந்த, தீங்கினர்தம் - தீயோருடைய, கண்ணில்-கண்களுக்கு, தெரியாத - தெரியக்கூடாத, தூரத்து - தொலைவில், நீங்குவதே - விலகிப்போவதே, நல்ல நெறி-நல்ல வழியாகும்.

(க - து.) விலங்குகளினுங் கொடிய ரென்று நினைத்துத் தீயோர் கண்ணுக்குத் தெரியாதிருப்பதே நல்லது.

கொம்புள்ளவைகள் ஆடு மாடு முதலியன. முழம் என்பதை மற்றவற்றிற்கும் ஒட்டுக. வெம்புதல் - நெஞ்சிலே சினக்குறிப்பு ஒன்று வைத்துக்கொண்டு அதையே நினைத்து அதன் வண்ணமாதல். கரி - ஆகுபெயர். வம்பு - குற்றமில்லாதவழி வீண் போர் தொடுத்தல். (20)

அவ்விய நெஞ்சத் தறிவில்லாத் துர்ச்சனரைச்
செவ்விய ராக்குஞ் செயலுண்டோ—திவ்வியநற்
கந்தம் பலவுங் கலந்தாலு முள்ளியது
கந்தங் கெடுமோ கரை.

(இ - ள்.) திவ்விய - மேன்மையான, நல் கந்தம் - நல்ல மணப்பண்டங்கள், பலவும்-பலவற்றையும், கலந்தாலும்-உடன் கலந்தாலும், உள்ளியது-உள்ளியினுடைய, கந்தம்-தீய நாற்றம், கெடுமோ - நீங்குமோ, கரை - நீ சொல். (அதுபோல) அவ்விய நெஞ்சத்து அறிவு இல்லா துர்ச்சனரை - பொறாமை கொண்ட நெஞ்சமுடைய அறிவில்லாத தீயோரை, செவ்வியராக்கும்-நல்லவராகத் திருப்பும், செயல் உண்டோ - செய்கையு முண்டோ ? (இல்லை யென்பது.)

(க - து.) தீயோரை நல்லவராக்குதல் இயலாது.

அறிவுடையார் அவ்விய நெஞ்சத்தாராய் இராராதலின், அந்நெஞ்சத்தை அறிவிலார்பால் வைத்து, 'அவ்விய நெஞ்சத் தறிவில்லா' என்றார். செவ்வியர்-நல்லவர். செயலுண்டோ என்றது நல்லவராக்குஞ் செயல் தீயோர்பாற் பயன்படாதென் பதற்கு. திவ்விய நல் - ஒருபொருளன. கந்தம் இரண்டனுள் முன்னது அஃது உடைய பண்டத்தை உணர்த்துதலால் ஆகு பெயர். இது மணத்தின் மிகுதியைக் காட்டும். உள்ளி என்பது இங்கு வெள்ளைப்பூண்டு ; வெங்காயத்தினும் மிக்க நாற்றமுடையது. உள்ளி வெள்ளைப்பூண்டுக்கு வருதலை, 'உள்ளி வெள்ளுள்ளி' எனச் சைவசமயநெறி என்னும் நூலில் வருதல் காண்க. (21)

துன்னு மிருமனுந் துர்ச்சனரு மொக்குமே
மன்னு மினிமையான் மாறாகிப்—பன்னுங்
கடுவுங் கடுநேர் கடுமொழியுங் கண்டாற்
கடுக வசமா கையால்.

(இ - ள்.) துன்னும் இருமலும் - மிகுந்துவரும் இருமல் நோயும், துர்ச்சனரும்-தீயோரும், மன்னும்-நீங்காத, இனிமையான்-இனிமைக்கு, மாறாகி - வேறாகி, பன்னும் - சொல்லப்படுகின்ற, கடுவும்-நஞ்சு போன்ற கைப்பான மருந்தையும், கடுநேர்-அம்மருந்தை யொத்த, கடுமொழியும் - வன்சொல்லையும், கண்டால்-பார்த்தால், கடுக - விரைவாக, வசம் ஆகையால் - அடங்கிவிடுதலால், ஒக்கும்-அவ்விருமலும் தீயோரும் ஒன்றுக்கொன்று ஒப்பாகும்.

(க - து.) தீயோர் கடுஞ்சொல்லையே விரும்பி அதற்கே அடங்குவார்கள்.

தித்திப்பான பண்டங்களால் இருமல் நோய் மிகும். தீயோரும் இன்சொல்லால் அடங்காமல் மீறுவர். மற்றுக், கசப்பான மருந்துகளால் இருமல் நோய் நீங்கும்; அதுபோலவே, தீயோரும் கடுமொழிக்கே அஞ்சியடங்குவர். ஆதலால், அவ்விரண்டிற்கும் ஒப்புமை காண்க. துன்னுதல்-மிகுதல். மாறாகிக் கண்டால் வசமாகையால் ஒக்கும் என்க. மன்னும் இனிமையாவது, எப்பொழுதும் நீங்காத மணமும் நன்மையும். இனிமையான் - இனிமைக்கு. பன்னும் - உலகத்தவரால் மருந்தென்று சொல்லப்படும். நேர் - ஒப்பு. 'நீர்மே லெழுத்துக்கு நேர்' என்பதிற் காண்க. கடுக-விரைவுப் பொருளது. (22)

செங்கமலப் போதலர்ந்த செவ்விபோ லும்வதனஞ்
சந்தனம்போ லுந்தங்கு மொழி-பங்கியெறி
கத்திரியைப் போலுமிளங் காரிகையே வஞ்சமனங்
குத்திரர்பால் மூன்று குணம்.

(இ - ள்.) இளங் காரிகையே - இளம் பெண்ணே, செங்கமலப் போது-சிவந்த தாமரைப் பூ, அலர்ந்த செவ்வி போலும்-மலர்ந்த அழகை யொத்த, வதனம்-முகமும், சந்தனம் போலும்-நல்ல மணமுடைய சந்தனத்தைப் போன்ற, தங்கு மொழி - இனிமை தங்கிய மெதுவு மொழியும், பங்கி - மயிரை, எறி - வெட்டுகின்ற, கத்திரியைப் போலும்-கத்திரிக்கோலைப் போலும், வஞ்ச மனம்-கரவு மனமும் (என), குத்திரர்பால் - வஞ்சகரிடத்தில், மூன்று குணம்-மூன்று கொடுந்தன்மைகள் உள்ளன.

(க - து.) உள்ளத்தில் தீமையொன்று கொண்டு வஞ்சகர்கள் முகத்தையும் மொழியையும் நன்மையாகக் காட்டுவது கண்டு அவரை நம்பி உறவாடலாகாது.

அலர்ந்த செவ்வியாவது-மலர்ந்தபோது ஏற்படும் கிளர்ச்சி முதலிய அழகுகள். அதைப் போலவே வஞ்சகர் முகமும், புன்னகையும் எழுச்சியும் மிக்கதாய் இனிமையுடன் தெரியும். தங்கு மொழி - இனிமை பொருந்திய மொழி. தங்கித் தங்கி அடக்கமாகப் பேசும் மெதுவு மொழியுமாம். அது சந்தனம் போலுதலாவது மேன்மைக்கும் மணமாகிய நன்மைக்கும் உயர்வுக்குமென்க. எறிதல் - வெட்டுதல்; இஃது இப்பொருட்டாதலை "வாளெறிந்தனன்" (சிலப், கொலை, 213) என்பதிற் காண்க. அறுத்த லென்றுங் கொள்க. "எறிவளை யார்ப்ப" என்பதிற் போல (சிலப், கானல்). கத்திரி, வெட்டுந் தொழிலுக்கு உவமை. ஆவது, சூழ்ச்சியால் தீயன செய்கை. இறுதியில் என, உள என்று இருசொற்கள் வருவிக்க. வதனம், மொழி, மனம் என்பவற்றிற்கு எண்ணும்மை விரிக்க. முகமும் மொழியும் மனமும் எனக் குத்திரர்பால் மூன்று குணம் உள என்று கூட்டுக. (23)

நீசனே நீச னினையுங்காற் சொற்றவறும்
நீசனே நீசன் அவனையே—நீசப்
புலையனு மென்றுரைக்கும் புல்லியனே மேலாம்
புலையனு மென்றே புகல்.

(இ - ள்.) நீசனே - புலையனே, நீசன் - உண்மையான புலையன்? நினையுங்கால் - நினைந்து பார்த்தால், சொல் தவறும் - சொன்ன சொல்லிலிருந்து தவறிப்போகும், நீசனே-புலையனே, நீசன் - உண்மையான புலையனுவான்; அவனை - சொல் தவறுந புலையனை, நீசப் புலையன் ஆம் என்று உரைக்கும் - இழிவான புலையனுவான் என்று சொல்லும், புல்லியனே-தாழ்ந்த தன்மையுடையவனே, மேலாம் புலையனும்-பெரும் புலையனுவான், என்று புகல் - என்று நீ சொல்.

(க - து.) இனத்தால் தாழ்வு கூருமல் தன்மையால் தாழ்வு கூறல் வேண்டும்.

மூன் றேகாரங்களுள் நடுநின்றது பிரிநிலை; ஏனைய அசைகள். நீசன் என்பவன் ஊனுண்பவன்; புலையன் என்பானும்

அவன். நீசப் புலையன் என்றது தீயதாய் நாறும் உடலுடைய ஊன் பயில்வானை. நீச்சு என்பது புலால் நாற்றம்; நீச்சுநாற்றம் என்பது வழக்கு. சொல் தவறுபவன் புலையனை விடக் கீழாவான் என்பது. (24)

ஞானமா சார நயவா ரிடைப்புகழும்
ஏனைநால் வேத மிருக்குநெறி—தான்மொழியிற்
பாவநிறை சண்டாளர் பாண்டத்துக் கங்கைநீர்
மேவுநெறி யென்றே விடு.

(இ - ள்.) ஞானம்-அறிவும், ஆசாரம்-ஒழுக்கமும், நயவாரிடை-விரும்பாதவரிடத்திலே, புகழும்-புகழப்படுகின்ற, ஏனை-இவையல்லாத, நால் வேதம்-நான்கு திருமறைகளின் அருங் கருத்துக்களும், இருக்கும் நெறி-இருக்கின்ற முறையை, மொழியின் - சொல்வோமானால், பாவம் நிறை - தீவினை மிக்க, சண்டாளர்-நீசருடைய, பாண்டத்துக்கு - மட்கலத்தில், கங்கை நீர்-உயர்ந்த கங்கையாற்றின் நீர், மேவும் நெறியே என்று-கிடக்கும் முறையையே ஒத்திருக்கும் என்று, விடு-போற்றாமல் விட்டுவிடு.

(க - து.) கற்றபடி நடக்கவேண்டும்.

தான், அசை. ஏகாரந் தேற்றம்; அதைப் பிரித்து நெறியோடு கூட்டுக. ஞானமும் ஆசாரமும் என்று எண்ணும்மை விரிக்க. ஞானம்-இங்கு மெய்யறிவு. நயவார்-விரும்பாதவர்; வினையாலணையும் பெயர். நயத்தல் விரும்புதற் பொருளில் வருமென்பது, "நலன் நயந்து" [புறம், 144.] என்பதிற் காண்க. (25)

குணநன் குணராக் கொடியோ ரிடத்திற்
குணநன் குடையார் குறுகார்—குணமுடைமை
நண்ணாச் சமண நகரத்திற் றாசொலிக்கும்
வண்ணானுக் குண்டோ வழக்கு.

(இ - ள்.) குணம் உடைமை நண்ணா - ஆடை கட்டுந் தன்மையில்லாத, சமண நகரத்தில் - சமண மதத்தினர் இருக்கும் பட்டினங்களில், தூசு ஒலிக்கும் வண்ணானுக்கு-அழுக்குடைகளை வெளுக்கும் வண்ணானுக்கு, வழக்கு உண்டோ-இருப்பு உண்டா?

இல்லை; அதுபோல) குணம்நன்கு உணராக் கொடியோரிடத்தில்-நல்ல தன்மைகளை அறியாத தீயோரிடத்தில், குணம் நன்குடையார் - நல்ல தன்மைகளையுடைய நல்லவர்கள், குறுகார்-சேரமாட்டார்கள். (அவர்கட் கொன்றும் வேலையில்லை யென்றபடி.)

(க - து.) நல்லோர்க்குந் தீயோர்க்கும் எதுந் தொடர்பில்லை.

குண நன்கு - குண நன்மை. நன்கு - இங்குப் பெயர்; 'நிரம்ப' என்றுமாம். நண்ணு - சைவம் அடையாத என்னுங் குறிப்பினது. துவைத்துத் துணி கட்டு மியல்பு சமணர்க்கு இல்லை. தூசு - அழுக்கு. இஃது அழுக்குடைய துணியை உணர்த்துதலால் ஆகுபெயர். ஒலித்தல் - வெளுக்கடித்தல். "ஊரொலிக்கும் வண்ணார்" என்பது பெரிய புராணம்: [திருக்குறிப்பு, 113.] (26)

ஆனை மருப்பு மருங்கவரி மான்மயிருங்
கான வரியுகிருங் கற்றோரும்—மானே
பிறந்தவிடத் தன்றிப் பிறிதொருதே சத்தே
செறிந்தவிடத் தன்றோ சிறப்பு.

(இ - ள்.) மானே - பெண்ணே! ஆனை மருப்பும் - யானையின் கொம்புக்கும், அரு கவரி மான் மயிரும் - அருமையான கவரிமானின் மயிருக்கும், கான வரி உகிரும் - காட்டில் வாழும் புலி நகத்திற்கும், கற்றோரும் - கற்றோர்க்கும், பிறந்த இடத்து அன்றி-தோன்றிய இடங்களில் அல்லாமல்,பிறிதொரு தேசத்து-வேற்று நாடுகளில், செறிந்த இடத்து அன்றோ - தாம் சேர்ந்த இடங்களிலன்றோ, சிறப்பு - பெருமை!

(க - து.) கற்றோர்க்கு வேற்றூர்களில் மிக்க சிறப்புண்டாம்.

மருப்பும் மயிரும் உகிரும் அவ் விலங்குகளாற் போற்றப் படாமையின், அவற்றிற்கும் பிறந்தவிடத்துப் பெருமையில்லை. (27)

தலைமயிருங் கூருகிரும் வெண்பல்லுந் தத்தம்
நிலையுடைய மானவரு நிற்கு—நிலைதவறுந்
தானத்திற் பூச்சியமே சாரு நிலைதவறுந்
தானத்திற் பூச்சியமோ தான்.

(இ - ள்.) தலை மயிரும் - தலையின் மயிரும், கூர் உகிரும - கூரிய நகமும், வெண் பல்லும்-வெள்ளை நிறமுடைய பல்லும், தத்தம் நிலை உடைய மானவரும் - தமக்கென ஒரு நிலையுடைய மானமுடைய பெரியோரும், நிற்கும் நிலை தவறுந் தானத்தில்- தாம் நிற்கின்ற நிலையினின்றும் தவறிப்போகாத இடத்தில், பூச்சியமே - புகழ்தான்; சாரும்-தாம் சேர்ந்த, நிலை-அந்த உயர்ந்த நிலையிலிருந்து, தவறும் தானத்தின்-தவறுமிடத்தில், பூச்சியமோ- புகழோ? (புகழில்லை.)

(க - து.) தாம் நிற்கும் நிலையினின்றும் தாழலாகாது.

நின்ற நிலையினின்று வழுவாமை மானம். இதனை ஆசிரியர் பரிமேலழகர் 'எஞ்ஞான்றுந் தந்நிலையில் தாழாமை' என்பர். மயிரும் உகிரும் பல்லும் தந்நிலையி னின்றால் முறையே எண்ணெயும் நிறமும் பொடியும் பெற்றுப் பெருமை யடைதலும், தவறினாற் குப்பை யடைந்து இழிவடைதலுமாம். பெரியோர் நிலைதவறினால் இழி வெய்துவா. இதனைத் "தலையின் இழிந்த மயிர் அனையர் மாந்தர் நிலையின் இழிந்தக் கடை" என்றருளுவர் நஞ் செந்நாப் புலவர். (28)

வென்றி வரியுகிரும் வெண்கவரி மான்மயிருந்
துன்றுமத யானைச் சுடர்மருப்பும்—நின்றநிலை
வேறுபடி னுஞ்சிறப்பா மெய்ஞ்ஞானி நின்றநிலை
வேறுபடி னுஞ்சிறப்பா மே.

(இ - ள்.) வென்றி - வெற்றியையுடைய, வரி - புலியின், உகிரும் - நகமும், வெண் கவரிமான் மயிரும் - வெண்மையான கவரிமானின் மயிரும், துன்று மதம்-மிகுந்த மதத்தையுடைய, யானைச் சுடர் மருப்பும் - யானையின் ஒளியுற்ற பற் கொம்பும், நின்ற நிலை - தாம் இருந்த நிலையிலிருந்து, வேறுபடினும் - மாறு பட்டாலும், சிறப்பு ஆம்-அவைகட்குப் பெருமை உண்டாகும்; (அது போல) மெய்ஞ்ஞானி-உண்மையான அருட் பெரியார், நின்ற நிலை வேறுபடினும் - தாம் இருந்த நிலையிலிருந்து மாறு பட்டாலும், சிறப்பு ஆமே - அவர்கட்குப் பெருமையே உண்டாகும்.

(க - து.) அடியார்கள் நிலை வேறுபடுவதாயினும் இழுக் கில்லை.

கவரிமான் என்பது ஒரு மான் வகை. சுடர் மருப்பாவது- கண்ணாடி போலும் பளபளப்பான மருப்பு. இம் மூன்றும் நின்ற நிலை வேறுபடுதலாவது, முறையே, தாலிபோலக் கழுத்தில் அணியப்படுதல் முதலியனவும், இறைவனுக்கும் அவனருள் பெற்ற அடியார்கட்குஞ் சிவிறியாக உதவுதலும், உயர்ந்த ஏனங்களாகப் பயன்படுதலுமாம். இங்ஙனம் அவைகள் நிலைவேறுபட்டு நிற்பதால் அவைகளுக்குப் பெருமை குறைவதில்லை. அதுபோல், தாம் நிற்கும் தவநிலை கலைந்து, பொதுத்தொண்டுகைத்தொழில் முதலியன மேற்கொள்ள நேர்ந்தாலும் மெய்யுணர்வு வாய்ந்த அருட்பெரு மக்கட்கு மேன்மையேயன்றி இழுக்குண்டாகாதென்பது. இது,

"எத்தொழிலைச் செய்தாலும் ஏதவத்தைப் பட்டாலும்
முத்தர் மனமிருக்கும் மோனத்தே—வித்தகமாய்க்
காதிவிளை யாடியிரு கைவீசி வந்தாலுந்
தாதிமனம் நீர்க்குடத்தே தான்"

என்னும் பட்டினத்தடிகள் திருமொழியாலும் விளங்கும். (29)

அன்னை தயையும் அடியாள் பணியுமலர்ப்
பொன்னி னழகும் புவிப்பொறையும்—வன்னமுலை
வேசி துயிலும் விறன்மந் திரிமதியும்
பேசி லிவையுடையாள் பெண்.

(இ-ள்.) பேசில்-பேசினால், அன்னை தயையும்-தாயைப் போல் அன்பும், அடியாள் பணியும்-பணிவிடைக்காரியைப் போலத் தொண்டும், மலர்ப் பொன்னின் அழகும்-செந்தாமரை மலரின்மேலிருக்குந் திருமகளைப்போல அழகும், புவிப் பொறையும்-நிலத்தைப் போலப் பொறுமையும், வன்ன முலை வேசி துயிலும் - அழகிய கொங்கைகளையுடைய வேசியைப்போலத் துயிலின்பந் தருந் திறனும், விறன் மந்திரி மதியும்-வல்லமை மிக்க அமைச்சரைப்போல அறிவும், (ஆகிய) இவை உடையாள்-(ஆகிய) இந்த ஆறு அரிய இயல்புகளையும் உடையவளே, பெண்-பெண்ணெனத் தக்கவள் (என்று பேசுக.)

(க-து.) இரக்கம் முதலான ஆறு இயல்புகளும் உடையவளே பெண்ணெனப்படுவாள்; அல்லாதவள் பெண்ணுருவம் உடையவளாயிருந்தாலும் பெண்ணெனப்படாள்.

நிலத்தைப் போலப் பொறையுடைமையாவது, கடப்பாரை முதலிய இருப்புக் கருவிகளால் தன்னை ஊறுபடுத்தித் தோண்டிய போதும் நிலம் அதனைப் பொறுத்துக்கொண்டு தன்னைத் தோண்டுவாரைத் தாங்கியும் நிற்பதுபோலக், கணவன் முதலியோரால் எத்துணைத் துன்பந்தான் தனக்கு நேர்வதாயினும், பெண்மக்கள் அதனைப் பொறுத்துக்கொண்டு அக் கணவன் முதலியோர்க்கு ஏதுந் தீங்கு நேராதபடி தாங்குதலும் வேண்டும் என்பதாம். இதனை,

"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை"

என்று நம் நாயனாருங் குறிப்பர். துயில் - துயில்வார் எய்தும் இன்பம். அஃது அது தருந் திறத்தை உணர்த்திநின்றது. விறல், எந்த நேரத்திலும் எத்துணை அரியதான செய்தியையும் விரைந்தாராய்ந்து தக்க சூழ்ச்சியோடு கூடிய முறை பொருந்திய நுட்பந்தெரிக்கும் வல்லமை.

பெண்ணொருத்தி பேசிற் பெரும்பூமி தானதிரும்
பெண்ணிருவர் பேசில்விழும் வான்மீன்கள்—பெண்மூவர்
பேசி லலைசுவறும் பேதையே பெண்பலர்தாம்
பேசினுல கென்னுமோ பின்.

(இ - ள்.) பெண்ணொருத்தி பேசில் - பெண் ஒருத்தி பேசினால், பெரும் பூமி-இப் பெரிய நிலவுருண்டை, அதிரும்-நடுங்கும்; பெண் இருவர் பேசில் - பெண்மக்கள் இரண்டு பேர் பேசுவாரானால், வான்மீன்கள் - வானில் உள்ள உடுக்கள் (நட்சத்திரங்கள்), விழும்-கீழே உதிர்ந்து விழும்; பெண் மூவர் பேசில் - பெண் மக்கள் மூன்றுபேர் பேசினாலோ, அலை - கடல் நீர், சுவறும்-சுண்டிவிடும் (என்றால்), பேதையே-பெண்ணே! பெண் பலர் தாம் பேசில்-பெண்கள் பலரே பேசத்தொடங்கிவிட்டால், பின்-பின்பு, உலகு-இவ்வுலகம், என்னுமோ-என்னதான் ஆகுமோ?

(க - து.) தீய பெண்களின் சொற்களால் உலகத்துக்கு மிக்க தீங்குண்டு.

பூமிதான் என்பதில் உள்ள தான் என்பதைப் பிரித்து என்ன தான் ஆமோ என்று இறுதியிற் சேர்க்க. முன் செய்யுளில் நல்ல

பெண்களின் அறுவகை யியல்புகளைக் கூறினமையால், இச் செய்யுளில் தீய பெண்களின் தீய இயல்பு கூறப்பட்டது. இவை கொண்டு பெண்மக்களில் நல்லார் தீயார் இவரிவரெனப் பகுத்துத் தெரிந்துகொள்ளலாம். இப் பாட்டில் தீய இயல்பினைக் குறிக்க வந்த ஆசிரியர், பேசுந் தொழிலையே அதற்குக் காட்டாகக் குறித்தமை நினைவுகூரற்பாலது.

என்னே கிரேதத் திரேணுகையே கூற்றுவனும்
தன்னேர் திரேதத்திற் சானகியே—பின்யுகத்திற்
கூடுந் திரௌபதையே கூற்றாம் கலியுகத்தில்
வீடுதொறுங் கூற்றுவனா மே.

(இ - ள்.) கிரேதத்து - கிருத ஊழியில், இரேணுகையே - இரேணுகை என்பவளே, கூற்றுவன் ஆம்-நமனாகும்; திரேதத்தில் - திரேத ஊழியில், தன் நேர்-தனக்குத்தானே ஒப்பாகிய, சானகியே - சீதை என்பவளே, கூற்றுவனும் - நமனாகும்; பின் யுகத்தில் - அதற்கடுத்ததான துவாபர ஊழியில், கூடும்-வந்த, திரௌபதியே-திரௌபதையே, கூற்றாம்-நமனாகும்; கலியுகத்தில் - இப்பொழுது நடக்குங் கலியூழியிலோ வென்றால், வீடு தொறும் - ஒவ்வொரு வீட்டிலும் இருக்கும் (ஒவ்வொரு பெண்ணும்), கூற்றுவன் ஆம் - நமனாகும்; என்னே - இஃது என்ன வியப்பு!

(க - து.) வீடுதோறும் மகளிர் நல்லோராய் விளங்கவேண்டும் என்பது.

தீய பெண்டிரைக் கூற்றென்னும் வழக்கு
"—கூற்றமே
இல்லிற் கிசைந்தொழுகாப் பெண்"

என்பதிற் காண்க. (32)

கர்ப்பூரம் போலக் கடலுப் பிருந்தாலுங்
கர்ப்பூர மாமோ கடலுப்புப்—பொற்பூரும்
புண்ணியரைப் போல இருந்தாலும் புல்லியர்தாம்
புண்ணியரா வாரோ புகல்.

(இ - ள்.) கடல் உப்பு - கடல் நீரில் உண்டாகும் உப்பு, கர்ப்பூரம் போல - கருப்பூரத்தைப் போலவே, இருந்தாலும் - (உருவத்தில்) இருக்குமானாலும், கடலுப்பு-அவ்வுப்பு, கர்ப்பூரம் ஆமோ-தன்மையிலுங் கருப்பூரமே ஆய்விடுமோ? (ஒருகாலும் ஆகாது; அதுபோல) புல்லியர்-தீவினையாளர், பொற்பு ஊரும்-அழகு மிகுகின்ற, புண்ணியரைப் போல - நல்வினையாளரைப் போலவே, இருந்தாலும்-உருவத்தில் இருப்பாரானாலும், புண்ணியர் ஆவாரோ - தன்மையிலும் நல்வினையாளராக ஆய்விடுவார்களோ, புகல் - நீ சொல்லு.

(க - து.) உருவத்தாற் பிறரை மதித்தலாகாது.

கல்லுப்பு வேறே இருத்தலின், கருப்பூரத்தைப் பெரிதொத்திருக்கும் உப்புக் கடலுப்பெனப் பட்டது. புண்ணியர்க்குப் பொற்பு ஊருதலாவது, அவர்மாட்டு இறைவன் அருள் நிறைந்து துளும்ப, அவ்வருட்பெருக்கால் மேனி சிவந்து அழகு மிகுவது. ஊர்தல், இங்கு மேற்படுதல் என்னும் பொருட்டு; இஃதிப் பொருட்டாதலை,

"எரி சிறிதாயி னீருரு மில்லத்து
வாரி சிறிதாயிற் பெண்ணூரும்—மேலைத்
தவஞ்சிறி தாயின் வினையூரு மூரு
மூரஞ்சிறி தாயிற் பகை."

என்னும் **நான்மணிக்கடிகைச்** (101) செய்யுளிற் காண்க. நல்வினையாளர்க்கு அருளால் அழகு மிகத், தீவினையாளர் சிலர்க்கு அவ்வகையான் அழகு மிகாமற் பிறப்பிலிருந்தே உடம்பமைப்பின் வழியாய் அழகு மிகுந்திருக்கலாமானாலும் அவர் அழகு அவர் தம் தீச்செயலாலேயே குன்றிவிடும். ஆகவே, இருவரும் ஒருவராகார்; தன்மையில் வேறுவர். இன்னும், இயற்கை யழகே யன்றித் திருநீறு முதலிய அருட்குறிகள் அணிந்து பொய்யடியார் உண்மை யடியாரைப் போலிருத்தலும் உண்டு. அவர் அங்ஙனம் அவரை உருவத்தால் ஒத்திருந்தாலும் உள்ளத்தால் ஒவ்வார் என்க. (33)

சீலமில்லா னேதேனுஞ் செப்பிடினுந் தானந்தக்
கால மிடமறிந்து கட்டுரைத்தே—ஏலவே
செப்புமவ னுந்தானே சிந்தைநோ காதகன்று
தப்புமவ னுத்தமனே தான்.

(இ - ள்.) சீல மில்லான்-நல்லொழுக்க மில்லாதவன், ஏதே னும் - (தீய சொல்) ஏதேனும் ஒன்றை, செப்பிடினும்-சொன்ன லும், தான்-நல்லவன், அந்தக் காலம் இடம் அறிந்து - அவன் சொன்ன நேரத்தையும் இடத்தையும் ஆராய்ந்தறிந்து, ஏல-ால்லாவற்றிற்கும் பொருந்த, கட்டுரைத்துச் செப்புமவனும்-அறிவு மொழிகளை உறுத்துச் சொல்லி அதற்கு விடை கொடுப் பானும், தானே சிந்தை நோகாது-அத் தீய மொழியால் தனக்குத் தானே நெஞ்சம் வருந்தாமல், அகன்று தப்புமவனும்-அவ்விடத் திலிருந்து நீங்கித் தப்பித்துக்கொள்வானும், உத்தமனே தான்-நல்லவர்களே யாவார்கள்.

(க - து.) நல்லோர், ஒழுக்கமில்லாதவன் சொல்லுந் தீய மொழிகளால் வருந்தாமல் அவர்க்கிசைய உறுதி உரைத்தும் உரையாதும் செல்வர்.

முதலிரண்டு ஏகாரங்களும் அசைகள். பின்னிரண்டு ஏகா ரங்களுள் முன்னது பிரிநிலை; பின்னது தேற்றம். தீயவர் தீது சொல்லியபொழுது அதைக் கேட்ட நல்லவர் இருவகைப்படுவர். ஒரு வகையினர் தாமே அடங்குவர்; மற்றொரு வகையினர் அவரை அடக்குவர். இருவரும் மேம்பட்ட தன்மையையே புடையவர்களாதலால் மேலோ ரெனப்பட்டார். கட்டுரைத்தல் என்பது திருந்தும்படி பொருள்நிறைத்து உறுதியாய் விளக்கிச் சொல்லுதல். இதனைக் "கட்டுரை - விளங்கச் சொல்லுதல்" என்று சிலப்பதிகாரத்து அரும்பத உரையாசிரியரும் (சிலப், பதிகம்-82), "கட்டுரை-பொருள் பொதிந்த சொல், உறுதியை யுடைய சொல்லுமாம்" என்று அடியார்க்கு நல்லாரும் (சிலப், பதிகம் - 54) உரை கூறியவாற்றால் அறிந்துகொள்க. கட்டு ரைத்துச் செப்புமவன் என்று இரண்டுவினை தருதலால், கட்டுரைத்தலுக்கு வேறாகச் செப்புதல் ஒன்றுங் கொள்க. செப்பு தல் விடைகூறுதல்; இப்பொருளாமாறு "செப்பும் வினவும் வழாஅ லோம்பல்" (தொல். சொல். 13. சேனா.) என்பதிற் கண்டுகொள்க. (34)

சிற்றுணர்வோ ரென்றுஞ் சிலுசிலுப்ப ரான்றமைந்த
முற்றுணர்வோ ரொன்று மொழியாரே—வெற்றிபெறும்
வெண்கலத்தி னோசை மிகுமே விரிபசும்பொன்
ஒண்கலத்தி னுண்டோ வொலி.

(இ - ள்.) வெண்கலத்தின் ஓசை-வெண்கலத்தினின் றுண்டாகும் ஓசை, மிகும்-மிகுதியாகும், (ஆனால்) வெற்றி பெறும் விரி பசும்பொன்-மேன்மையடைகின்ற விரிந்த பசுமையான பொன்னாற் செய்யப்பட்ட, ஒண் கலத்தின் ஒலி-ஒளி பொருந்திய பாண்டத்தின் ஓசை, உண்டோ-அங்ஙனம் மிகுவதுண்டோ? (இல்லை; அதுபோல) சிற்றுணர்வோர் - சிற்றறிவினையுடையவர்கள், என்றும் - எப்பொழுதும், சிலுசிலுப்பர்-சிடுசிடு என்று இரைச்சலெடுத்துப் பேசுவார்கள், ஆன்று-கல்வி கேள்விகளால் நிறைந்து, அமைந்த - அடங்கிய, முற்றுணர்வோர் - பேரறிவாளர்கள், ஒன்றும் மொழியார் - அப்படிச் சிடுசிடென்னும் இரைச்சற் பேச்சொன்றும் பேசமாட்டார்கள்.

(க - து.) சிலுசிலுத்துப் பேசுவர் சிறுவர்; அமைந்து பேசுவர் பெரியர்.

சிற்றுணர்வோர், புல்லர்கள். அவர், தாம் பெற்ற சிற்றறிவினால் தம் மலம் அடங்காதவர் என்பது. எனவே, அவரிடம் அம் மல எழுச்சியினாலே சிலுசிலுப்புத் தோன்றும். அங்ஙனமன்றி முற்று முணர்ந்தவரானால் அவர் தாம் பெற்ற அம் முற்றறிவினாலே தமது முழுமலத்தையும் அடக்கிக்கொள்வர். ஆதலின், அவர்பால் மல எழுச்சி தோன்றாமையின், சிலுசிலுக்காது அமைந்துநிற்பர். ஆன்று என்றது அறிவின் விரிவுக்கு. அமைந்த என்றது மலத்தின் அடக்கத்துக்கு; என்னை? அறிவு விரிந்தால் மலம் அடங்கு மாதலின். அறிவின் விரிவும் அதனால் மலத்தின் அடக்கமும் முற்றுணர்வோர்மாட்டே காணப்படுமாதலால், அவை தாம் அவர்க்கு அடைமொழிகளாயின. சிலுசிலுத்தலாவது சினமுண்டாகும்படி சினப்பட்டிரைவது. ஒன்றும் மொழியார் என்பது சிலுசிலுத்துப் பேசார் என்பதனோடு, பெரும்பாலும் அவர் வீண் பேசமாட்டார் என்பதுங் குறித்தபடியாம். வெண்கலத்துக்கு ஓரடைமொழியேனும் இன்றிப் பொற்கலத்துக்கு மட்டும் 'வெற்றி பெறும்' 'விரி, 'பசுமை' 'ஒள்' என்றித் துணை யடைமொழிகள் வந்தமை, அத்துணை உயர்வுடையது ஓசையிடுவதில்லை யென்றும், ஒருயர்வுமில்லாத வெண்கலமே பேரிரைச்ச லிடுமென்றுந் தேற்றுதற் கென்க. (35)

உள்ளபொழு தேதுமுவந் தளிப்ப தல்லாலோர்
ளென்னளவு மீய விசையுமோ—தெள்ளுதமிழ்ச்

சீரளித்தோ னுண்டநாட் சேர்மேகத் துக்கருந்த
நீரளித்த தோமுந்நீர் நின்று.

(இ - ள்.) (இரவலரே!) தெள்ளு தமிழ் - தெளிவான தமிழின், சீர் - இலக்கணத்தை, அளித்தோன் - கொடுத்தவனாகிய குறுமுனிவன், உண்ட நாள் - தனது நீரைக் குடித்துவிட்ட காலத்தில், முந்நீர் - கடல், நின்று - நீர்கொண்டு நின்று, சேர் மேகத்துக்கு - தன்னிடம் வந்த மேகத்துக்கு, அருந்த - குடிக்க, நீர் அளித்ததோ-நீர் கொடுத்ததோ? (இல்லை; அதுபோல) உள்ள பொழுது-தன்னிடத்தில் பொருள் உள்ள காலத்தில், எதும்-எதுவொன்றும், உவந்து - மகிழ்ந்து, அளிப்பதல்லால் - கொடுப்பதல்லாமல், (பொருளில்லாத காலத்தில்) ஓர் எள்ளளவும் - ஓர் எள்ளு அளவாயினும், ஈய - கேட்பார்க்குக் கொடுக்க, இசையுமோ - முடியுமோ? (முடியாது.)

(க - து.) பொருளில்லாதாரிடஞ் சென்று பொருள் கொடுக்கும்படி வற்புறுத்தலாகாது.

ஓகார மிரண்டும் வினவோடு விடைப்பொருட் குறிப்பின. ‘உள்ளபொழுது’ என்றமையால், ‘இல்லாதபொழுது’ என்ெறான்றும், ‘அளிப்பது’ என்றமையாற் ‘பொருள்’ என்ெறான்றும் வருவித்துக்கொள்க. ‘தெள்ளு தமிழ்’ என்பதை வினைத்தொகையாகக் கொண்டு கருத்துக்களைத் தெள்ளித்தரும் தமிழ் மொழி என்றுரைத்தலுமாம். தமிழின் அமைதியே, அதாவது தமிழிலக்கியத்தின் அமைதியே தமிழிலக்கணமாவதாதலால், தமிழ்ச் சீர் என்பதை ஆறும் வேற்றுமைத் தொகையாகக் கொள்க. முந்நீர் - கடல்; ஆற்று நீர், ஊற்று நீர், மழை நீர் என்பன. “நிலத்தைப் படைத்தலும், காத்தலும், அழித்தலுமாகிய மூன்று தொழிலு முடைமையின், முந்நீர் ஆகுபெயர் (சீவக சிந்தாமணி, அவையடக்கம், 2,) என்பார் ஆசிரியர் நச்சினார்க்கினியர். இச் செய்யுள் இரவலரை விளித்துக் கூறியபடி. (36)

பேதையரைக் கண்டாற் பெரியோர் வழிவிலகி
நீதியொடு போதல் நெறியன்றோ—காதுமத
மாகரத்த யானை வழிவிலகல் புன்மலந்தின்
சூகரத்துக் கஞ்சியோ சொல்.

(இ - ள்.) காதும் - கொல்லுகின்ற; மதம் மா கரத்த யானை - மதத்தையும் பெரிய தும்பிக்கையையு முடைய யானை, வழி விலகல் - வழிவிலகிப் போதல், புன் மலந் தின் - தாழ்ந்த மலத்தைத் தின்கின்ற, சூகரத்துக்கு - பன்றிக்கு, அஞ்சியோ- அச்சப்பட்டோ ? சொல்-நீ சொல்லு, (அச்சப்பட்டன்று; அது தனக்குள்ள பெருந்தன்மையால் அங்ஙனஞ் செய்கின்றது ; அது போலவே,) பேதையரைக் கண்டால் - அறிவில்லாத கீழ் மக்களைக் கண்டால், பெரியோர் - அறிவு மிக்க மேன்மக்கள், நீதியொடு வழிவிலகிப் போதல் - பெருந்தன்மையோடு வழிவிட்டுப் போதல், நெறியன்றோ - முறையன்றோ? (அவர் அக் கீழ்மக்களுக்கு அஞ்சி அது செய்கின்றார் என்பதன்று என்றபடி.)

(க - து.) சிறியாரைக் கண்டு பெரியார் வழிவிலகிப் போதல் அவர்க்குள்ள அச்சத்தா லன்று.

ஓகாரங்கள் இரண்டும் வினாப் பொருளன. ஒருவருக்கொருவர் மாறுவார் இருவரைப் பேதையார் என்றும் பெரியார் என்றுங் கூறினமையால், முன்னவர்க்குச் சிறியார் என்பதும், பின்னவர்க்கு அறிவுடையார் என்பதும் வருவிக்கப்பட்டன. பேதையராகிய சிறியார், அறிஞராகிய பெரியார் என்பதை அவ்வாறு கூறியது, 'சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்' என்னும் அழகின் பொருட்டு. இவ்வகையான அழகுகளைத் திருக்குறளுக்குப் பரிமேலழகர் உரைத்த மதித்திறன் வாய்ந்த நுட்ப உரையிற் காணலாம். நீதியோடு போதலாவது, அங்ஙனம் வழிவிலகிப் போதலை ஓரிழிவாக நினையாமல் அஃதொரு நல்லொழுக்கமெனவே நினைத்துப் போதல். காதுதல்-கொல்லுதல்; இஃதிப்பொருள் தருதலை, "அவுணர் தங்கிளையைக் காதி" என்னுங் கந்தபுராணத்துத் (விடை. 46) திருமொழியிற் கண்டு கொள்க. காது மதம் என்பது, 'யானை தனக்கெதிரே வந்த பன்றியைக் கொன்றுவிடக் கூடிய ஆற்றலுடையதாயிருந்தும், அவ்வாற்றலைப் பயன்படுத்தாமல் ஒதுங்கிச் சென்றது அச்சத்தாலன்று' என்னும் பொருளைச் சுட்டி நின்ற குறிப்படைமொழி. சூகரம், பன்றி; "கடிகமழ் கள் கமல மலர்க்கண் திகிரிக்கரன் ஒரு சூகரம தாகி" (கடவுள் வாழ்த்து, 2) என்பது சிவராத்திரி புராணம். (37)

மந்திரமுந் தேவு மருந்துங் குருவருளுந்
தந்திரமும் ஞானந் தருமுறையும்—யந்திரமும்

மெய்யெனில் மெய்யாய் விளங்குமே மேதினியிற்
பொய்யெனிற் பொய்யாகிப் போம்.

(இ - ள்.) மேதினியில் - உலகத்தில், மந்திரமும் - மறைமொழிகளும், தேவும்-கடவுளும், மருந்தும்-மருந்துகளும், குரு அருளும் - ஆசான் அருளும், தந்திரமும் - நூல்களும், ஞானம் தரு முறையும்-வழிபாட்டு முறைகளும், யந்திரமும்-மறைமொழி யமைக்குங் கட்டங்களும் (ஆக இவ்வேழும்) மெய் எனில்-மெய் யென்று நம்பினால், மெய்யா விளங்கும்-மெய்யாகவே விளங்கிப் பயன் கொடுக்கும்; பொய் யெனில்-பொய்யென்று நினைத்தால், பொய்யாகிப் போம் - பொய்யாகிப் பயன்படாது போம்.

(க - து.) மறைமொழி, கடவுள் முதலியவைகளை நம்பினோற்றான் பயன்.

ஏகாரத்தைப் பிரித்திசைத்துப் பொருளுரைக்க. இவை ஏழும் நினைவையே நிலைக்களனாகக் கொண்டு அதற்கேற்பப் பயன் தருவனவாதலால், மெய்யாய் நினைத்தால் மெய்யாகவும், பொய் யாய் நினைத்தால் பொய்யாகவும் பயன் தருவனவாயின. இவை யெல்லாம் இங்ஙனம் நினைப்புக்குத் தகப் பயனளிப்பன ஆதலாற்றான், 'நினைப்பவரைப் பாதுகாப்பது' என்னும் அப் பொருளிலேயே வரும் மந்திரம் என்பது முதற்கண் நிறுத்தப் பட்டது. (38)

ஈசனெதிர் நின்றாலும் ஈசனருள் பெற்றுயர்ந்த
நேசரெதிர் நிற்ப தரிதாமே—தேசுவளர்
செங்கதிர்முன் னின்றாலுஞ் செங்கதிர வன்கிரணந்
தங்குமணல் நிற்கரிதே தான்.

(இ - ள்.) தேசு வளர் - ஒளி மிகுகின்ற, செங்கதிர் முன் - முறுக்கான ஞாயிற்றின் முன், நின்றாலும்-வெயில் பொறுத்து நின்றாலும்; செங்கதிரவன் கிரணம் தங்கும் மணல்-அஞ்ஞாயிற்றின் கதிர்சூடு தங்கியுள்ள பொடி மணலில், நிற்க அரிது-(நிற்கிறேன் பார் என்று) அவ்வாறு நிற்க இயலாது. (அதுபோல) ஈசன் எதிர் நின்றாலும்-எல்லாம்வல்ல கடவுள் முன் பகைத்து நின்றாலும், ஈசன்- அக்கடவுளின், அருள் பெற்று-பேரருளைப் பெற்று, உயர்ந்த - மற்றெல்லாரையும் விட மேம்பட்டுயர்ந்த,

நேசர் எதிர் - அன்பர்கள் எதிரே, நிற்பது அரிது - பகைத்து நிற்றல் இயலாது.

(க - து.) அருட்சான்றோர் முன் பகைத்துநிற்றல் பெருங் கெடுதியாம்.

இங்கு ஞாயிற்றின் கதிரே வேண்டப்படுவதாதலால், அக் கதிர்கொண்டு ஞாயிற்றை உணரவைத்தார் என்க. செம்மை- இங்கு நன்மைப் பொருளது. கருத்துக் கேற்ப முறுக்கான என்று அஃது உரை செய்யப்பட்டது. வீரனைப் பார்த்து 'நன்றாய்ச் சண்டைசெய்தான்' என்றால் 'வீரமாகப் பொருதான்' என்பது பொருளாதல் போலவென்க. அருள் தங்கி வீறும் கடவுளடியா ராதலின் அவர் மிகுத்தெடுத்துப் பாராட்டப்பட்டனர். எதிர்த்து நிற்றல் இயலாதவாறு அடியார் பெருமக்கள் பேராற்றல் படைத்தவர்கள் என்பது,

"குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது" (குறள், நீத்தார்பெருமை, 9)

என்பதனால் நன்கு விளங்கும். (39)

முற்று மிறைசெயலே முற்றிடினுந் தன்னருளைப்
பெற்றவர்தம் பாலே பெரிதாகும்—பற்றுபெருந்
தாபத் திடத்தே தழன்றிடினும் நற்சோதி
தீபத் திடத்தே சிறப்பு.

(இ - ள்.) நல் சோதி - நல்ல ஒளி, பற்று பெரு தாபத்திடத்து - பற்றக்கூடிய பெரிய காட்டுத்தீயினிடத்தில், தழன்றிடினும் - ஒளி விட்டாலும், தீபத்திடத்தே - விளக்கினிடத்திலேயே, சிறப்பு (ஆகும்) - அவ் வொளிக்குச் சிறப்பாகும், (அதுபோல) முற்றும் - உலகமெங்கும், இறை செயல் - கடவுளுடைய அருட் செய்கை, முற்றிடினும்-நிறைந்திருந்தாலும், தன் அருளைப் பெற்றவர்தம் பாலே - அவரருளைப் பெற்ற அடியார்களிடத்திலேயே, பெரிது ஆகும்-அவரருட்செய்கை நிறைந்திருப்பது மிகுதியாகும்.

(க - து.) இறைவன் அடியார் பெருமக்களிடத்தில் மட்டும் மிக்கு விளங்குவன்.

விளக்கம்-விளக்கு; ஆகும் என்பதைச் சிறப்பு என்பதனோடுங் கூட்டுக. தழன்றிடினும்-தழல் என்னும் பெயரடியாகப் பிறந்த வினை. களங்கமற்று நன்றாய்ச் சுடர் விட்டு எரியுந் தீக்கு 'நற் சோதி' என்றார். எங்கும் இறைவன் நிறைந்திருந்தாலும் அடியாரிடத்து மட்டும் மிகவும் விளங்கித்தோன்றுவன் என்னும் அதன் கருத்தோ டொப்பவே,

"விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட்டு உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே"

என்று அப்பர் தேவாரமும் வருத லறிக. (40)

கன்னியரைப் பொன்னாண் கழிந்தோரை மற்றயலார்
பன்னியரை மாயப் பரத்தையரை—முன்னரிய
தாதியரை நல்லோர் தழுவநினை யார்நரகத்
தீதுவரு மென்றே தெரிந்து.

(இ - ள்.) நல்லோர் - அறிவுடையவர்கள், கன்னியரை-மணமாகாத பெண்டிரையும், பொன் நாண் கழிந்தோரை-பொன்னாலான தாலியை இழந்த கைம்பெண்களையும், அயலார் பன்னியரை - பிறர் மனைவியரையும், மாயப் பரத்தையரை-வஞ்சனையுடைய வேசிகளையும், முன்ன அரிய தாதியரை-விரும்பத்தகாத வேலைக்காரிகளையும், நரகத் தீது வரும் என்று தெரிந்து-நரகத்துன்பம் வந்துவிடுமே என்று உணர்ந்து, தழுவ நினையார்-சேர நினைக்கமாட்டார்கள்.

(க - து.) மணம்பெறாப் பெண்டிர் முதலான இவ் வைந்து வகையாரையுந் தழுவுவதற்கு அறிஞர் நினைக்கவும் மாட்டார்.

குறிக்கப்பட்டவரெல்லாரும் சேர்தற்குத் தகுதி யற்றவர் என்பதை ஆசிரியர் அவ்வச் சொற்பொருள் கொண்டே நன்கு விளங்கவைத்தல் காண்க. தீது - இங்குத் துன்பம்.

தன்னை யளித்தாள் தமையன் மனைகுருவின்
பன்னி யரசன் பயிறேவி—தன்மனையைப்
பெற்றா ளிவரைவர் பேசி லெவருக்கும்
நற்றாய ரென்றே நவில்.

(இ - ள்.) பேசில்-பேசுமிடத்து, தன்னை அளித்தாள்-தன்னைப் பெற்றவள், தமையன் மனை - தமையனுக்கு மனைவி, குருவின் பன்னி-ஆசிரியரின் மனைவியார், அரசன் பயில் தேவி-அரசன் இன்புறிவரும் அவன் மனைவி, தன்மனையைப் பெற்றாள்-தன் மனைவியைப் பெற்றவள், இவர் ஐவர் - ஆகிய இவர்கள் ஐந்து வகையாரையும், எவருக்கும் - அவரவர்க்கும், நற்றாயர் என்றே நவில் - பெற்ற தாய்மார்கள் என்றே சொல்லு.

(க - து.) தன்னை யளித்தாள் முதலான ஐவரையுந் தாயாகக் கருதுதல் வேண்டும்.

மனை - ஆகுபெயர். தன்னைப் பெற்றாள் முதல் தன் மனைவியைப் பெற்றாள் ஈறாகக் குறிப்பிடப்பட்ட இவ்வைவராலும் ஒருவனுக்கு நன்மையுண்டாதலின், அவரைத் தாய் என்றார். 'நற்றாய்' என்பது பெற்றெடுத்த தாயைக் குறிப்பதொரு குறியீட்டுச் சொல். இதனை அகப்பொருள் நூல்களிற் காண்க. (42)

வாவியுறை நீரும் வடநிழலும் பாவகமும்
ஏவனைய கண்ணா ரிளமுலையும்—ஓவியமே
மென்சீத காலத்து வெம்மைதரும் வெம்மைதனில்
இன்பாருஞ் சீதளமா மே.

(இ - ள்.) ஓவியமே-படமெழுதினாற் போன்ற பெண்ணே, வாவி உறை நீரும் - குளத்தில் உள்ள நீரும், வட நிழலும்-ஆலமரத்தின் நிழலும், பாவு அகமும் - பாவு கல் இட்ட வீடும், ஏ அனைய கண்ணார் இள முலையும் - அம்பைப் போன்ற கூரிய கண்களையுடைய பெண்களின் இளங்கொங்கையும், மென் சீத காலத்து வெம்மை தரும் - மெல்லிய குளிர்ச்சி வாய்ந்த காலங்களில் வெப்பத்தைக் கொடுக்கும்; வெம்மைதனில் - சூடான காலத்தில், இன்பு ஆரும் சீதளம் ஆமே - இன்பம் நிறைந்த குளிர்ச்சியைத் தரும்.

(க - து.) வாவிநீர் முதலியன காலத்துக் கேற்ப இன்பந் தரும்.

குளிர்ந்த காலத்தில் குளிர்ச்சியும் சூடான காலத்தில் சூடும் அத்துணை இன்பந் தருவதில்லை யாகலின் இவை கூறப்பட்டன. நீரும் நிழலும் அகமும் இளமுலைக்கு உவமைகளாகக் கொள்ளலுமாம்.

உற்றதொழில் செய்வோர்க் குறுபஞ்ச மில்லையாம்
பற்றுசெபத் தோர்க்கில்லை பாவங்கள்—முற்றும்
மவுனத்தோர்க் கில்லை வருகலகம் துஞ்சாப்
பவனத்தோர்க் கில்லை பயம்.

(இ - ள்.) உற்ற தொழில் செய்வோர்க்கு உறு பஞ்சம் இல்லை-தமக்கேற்ற தொழிலைச் செய்துகொண்டிருப்பவர்களுக்கு உண்டாகின்ற வற்கடம் ஏதும் இல்லை. பற்று செபத்தோர்க்குப் பாவங்கள் இல்லை - அன்போடு பற்றக் கூடிய வழிபாடுடையவர்களுக்கு வினை இராது. முற்றும் மவுனத்தோர்க்கு வரு கலகம் இல்லை - சிறிதுமே பேசாமல் இருப்பவர்களுக்கு வரக்கூடிய கலகம் ஒன்றும் இல்லை. துஞ்சாப் பவனத்தோர்க்குப் பயம் இல்லை - தூங்குதல் இல்லாத விண்ணுலகத்தாருக்கு அச்சமே இல்லை.

(க - து.) வேலை செய்பவர்கட்கு வற்கடமும், கடவுளை வழிபடுபவர்களுக்குத் தீவினையும், பேசாமலே இருப்பவர்கட்குக் கலகமும், தேவர்கட்கு அச்சமும் இல்லை.

ஆம்-அசை. உற்ற தொழில்-தமக் கிணக்கமான தொழில்; தீதல்லாத நல்ல தொழிலுமாம். தம்மைத் தளர்ச்சியில் விட்டு விடாத நிலைபேறுடைய தொழில் என்றலுமொன்று. அன்போடு செய்தல் வேண்டும் என்பதற்குப் 'பற்று செபம்' என்றார். தேவர்கள் இமையாராதலின், 'துஞ்சாப் பவனத்தோர்' என்றார். "இமையாரின் வாழினும்" என்பது திருக்குறள்.

ஆபத்து வந்தா லரும்பொருடான் வேண்டுமே
ஆபத்தேன் பூமா தருகிருந்தால்—ஆபத்து
வந்தா லவளு மருவாம லெப்பொருளும்
அந்தோ வுடன்போ மறி.

(இ - ள்.) ஆபத்து வந்தால் - ஒருவனுக்கு இக்கட்டான காலம் வந்தால், அரும்பொருள்தான் வேண்டும் - அருமையான செல்வமே வேண்டப்படும், பூமாது அருகு இருந்தால் ஆபத்து ஏன்-மலர்மகள் உடன் இருக்குமானால் அவ் விடுக்கான காலம் ஏன் வரும் (என்றால்), ஆபத்துவந்தால்-இடுக்கண் நேரிட்டால், அவளும் மருவாமல் - அத்திருவினளுஞ் சேராமல், அந்தோ

எப்பொருளும் உடன் போம் - ஐயோ எல்லாப் பொருள்களும் அவளோடு போய்விடும்; அறி - நீ இதனைத் தெரிந்துகொள்.

(க - து.) இக்கட்டு வரும்போது எவரும் உதவமாட்டார்; இறைவனே உதவுவான்.

இடுக்கான காலம் வந்தால் பொருள் வேண்டும்; ஆனால், அவ்விடுக்கான காலம் வரும்பொழுதே பூமகளும் நீங்கிவிடுதலால், அக்காலத்தில் வேண்டப்படும் பணமே யன்றி வேறு எப்பொருள் தான் தங்கும்? எனவே, அக்காலத்தில் ஏதும் இராது என்றபடி. 'என்றால்' என்றொரு சொல் வருவிக்க. 'பூமாது மருவாமல் எப்பொருளும் போம்' என்பது, மழை பெய்யாமல் நெல் சாவியாம் என்றாற் போல் வந்தது. (45)

இன்னல் தரும்பொருளை ஈட்டுதலுந் துன்பமே
பின்னதனைப் பேணுதலுந் துன்பமே—அன்ன
தழித்தலுந் துன்பமே யந்தோ பிறர்பால்
இழத்தலுந் துன்பமே யாம்.

(இ - ள்.) இன்னல் தரும் பொருளை ஈட்டுதலுந் துன்பமே- துன்பத்தைத் தரக்கூடிய செல்வத்தைச் சேகரித்தலுந் துன்பம், பின் அதனைப் பேணுதலும் துன்பமே - அங்ஙனம் சேகரித்த பின்பு அச் செல்வத்தைக் காப்பாற்றுதலுந் துன்பமே, அன்னது அழித்தலும் துன்பமே - அப்படிப்பட்ட பொருளைச் செலவழித்தலும் துன்பமே, அந்தோ பிறர்பால் இழத்தலும் துன்பமே ஆம்-ஐயோ பிறரிடத்தில் அதனைக் கொடுத்து இழந்துபோதலுந் துன்பமே யாகும்.

(க - து.) பொருட் பற்றுக் கூடாது.

உம்மைகள் எச்சம். பொருளுக்கு இன்னல் தரும் என்று அடைமொழி கொடுத்தது, அப்பொருளைப் பெற்றவனுக்குத் தீ யொழுக்கமுந் தீதுமான பொல்லாத பிறவித் துன்பங்களை யெல்லாம் அது தருதலானு மென்க. 'அங்ஙனந் துன்பந்தரும் அச்செல்வம் எளிதாகவேனுஞ் சேர்ந்து இருந்து செலவழிந்து கொடுக்கப் படுகிறதோவென்றால்,அதுதானுமில்லையே; ஆதலால் பொருட்பற்று எதற்கு என்று இச்செய்யுள் அறிவுறுத்தியபடி யாம். பேணுதல் என்பதைப் பொருள் அழிவுறாதபடி பாது காத்தற்கு மட்டுமே யன்றி அதனைப் பெருக்குதற்குங் கொள்க.

" ஆற்றின் அளவறிந் தீக அதுபொருள்
போற்றி வழங்கு நெறி " (குறள், வலியறிதல், 7)

என்பதுங் காண்க. எனவே, அதனை வளர்த்தலுந் துன்பமாம் என்பது. அன்னது என்றது, ஈட்டுதலாலும் பேணுதலாலும் பெருந்துன்பம் தரக்கூடிய செல்வம் என்று குறித்தற்கு. மற்ற மூன்றைவிடப் பிறர்பால் இழத்தல் பெருந்துன்பந் தருதலால், அதனை யுணர்த்த அந்தோ ஆம் என்பன தரப்பட்டன. (46)

தானே புரிவினையாற் சாரு மிருபயனுந்
தானே யனுபவித்தல் தப்பாது—தானூறு
கோடிகற்பஞ் சென்றாலுங் கோதையே செய்தவினை
நாடிநிற்கு மென்றார் நயந்து.

(இ - ள்.) கோதையே - பெண்ணே ! நூறு கோடி கற்பம் சென்றாலும் - அளவற்ற கோடி கோடி ஊழிகள் கடந்து விட்டாலும், செய்த வினை நயந்து நாடிநிற்கும் என்றார்-ஒருவனை அவன் செய்த வினைகள் விரும்பி எப்படியும் தேடிச் சேர்ந்து நிற்கும் என்று பெரியோர் சொல்லுவர். ஆதலால், தானே புரி வினையால் சாரும் இருபயனும் - ஒருவன் தானே செய்த வினையினால் வந்து சேரக்கூடிய இரண்டு பயன்களும், தானே அனுபவித்தல் தப்பாது-செய்த அவன் தானே அடைந்து நுகர் தல் தப்பாதுகாண்.

(க - து.) வினை செய்யலாகாது.

முதலிரண்டு ஏகாரங்கள் தேற்றம். பின்னது இசைநிறை. நூறுகோடி என்றது கால மிகுதிக்கு. கற்பம் - ஊழிக் கால மாதல், " கற்பங்கடோறும் நடஞ்செய் கழலடைந்தோர் " (கோயிற் புராணம், பாயிரம்-21) என்பதால் விளங்கும். பயன் இரண் டென்றமையின் புரிவினையும் இரண்டாயின. அவை நல் வினை தீவினையாம். அவற்றின் இருபயனும் முறையே இன்ப துன்பங்கள். இவ்விரண்டு பயன்களும் எப்படியேனும் செய்த வனை நாடிநிற்கும் என்றார். இச் செய்யுட் பொருட்கு ஏற்பத்,

" தாந்தாமுன் செய்தவினை தாமே அநுபவிப்பார்
பூந்தா மரையோன் பொறிவழியே—வேந்தே
ஒறுத்தாரை என்செயலாம் ஊரெல்லாம் ஒன்றாய்
வெறுத்தாலும் போமோ விதி " (நல்வழி, 60)

"பல்லாவுள் உய்த்து விடினும் குழக்கன்று
வல்லதாம் தாய்நாடிக் கோடலைத்—தொல்லைப்
பழவினையும் அன்ன தகைத்தே தற்செய்த
கிழவனை நாடிக் கொளற்கு" (நாலடியார், பழவினை, 1)

"பரியினும் ஆகாவாம் பாலல்ல உய்த்துச்
சொரியினும் போகா தம" (குறள், ஊழ். 6)

என்று ஆன்றோர் பிறர் செய்யுட்களும் வந்திருத்தல் காண்க. (47)

தூய அறிவினர்முன் சூழ்துன்ப மில்லையாம்
காயும் விடங்கருடற் கில்லையாம்—ஆயுங்காற்
பன்முகஞ்சேர் தீமுன் பயில்சீத மில்லையாம்
துன்முகனுக் குண்டோ சுகம்.

(இ - ள்.) ஆயுங்கால்-ஆராய்ந்து பார்க்குமிடத்து, காயும் விடம் கருடற்கு இல்லை - கொல்லுகின்ற நஞ்சு கருடனுக்கு ஒன்றுஞ் செய்வதில்லை; (அதுபோல) தூய அறிவினர்முன் சூழ் துன்பம் இல்லை - நல்ல அறிவுடையோர் முன்வருந் துன்பம் ஒன்றுஞ் செய்வதில்லை; பன்முகம் சேர் தீ முன் - நாலா பக்கங்களிலுஞ் சுடர் காலும் நெருப்பின் முன், பயில் சீதம் இல்லை-அணுகுங் குளிர்ச்சி ஏதும் இல்லை. (அதுபோல) துன் முகனுக்கு உண்டோ சுகம் - தீயோருக்கு இன்பம் என்பது உண்டோ; இல்லை.

(க - து.) அறிஞர்க்குத் துன்பமில்லை; மூடர்க்கு இன்ப மில்லை.

தூய அறிவினர் - நிலைதிரியாத களங்கமற்ற நல்லறிவினர். காய்தல் - கொல்லுதல்; "தந்தையைக் காயில் என் பெறுவா யென" (மாபாத. 11) என்பது திருவிளையாடல். பன்முகம்-நாலா பக்கமும். பயில் சீதம் - அணுகுங் குளிர்ச்சி. பயிலுதல்-அணுகுதல், நெருங்குதல்; அதாவது செறிதல் என்னும் பொருளிற் "பயில் இதழ்க் கமலமும்" (மணி மேகலை, 24; 39) என்றும், "கதிர் நுழைகல்லா மரம்பயில் கடிமிளை" (புறநானூறு, 21 : 5) என்றும் ஆன்றோர் நூல்களில் வந்திருத்தல் கண்டுகொள்க. துன் முகன்-தீய முகமுடையவன்; தீயோன். இச்செய்யுள், இரண்டு கருத்துக்களும், அவற்றிற்கேற்ப இரண்டு உவமங்களுங் கொண்டது. (48)

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க லென்றிவரோ
டின்புறத்தா னுண்ட லினிதாமே—அன்புறவே
தக்கவரை யின்றித் தனித்துண்டல் தான்கவர்மீன்
கொக்கருந்த லென்றே குறி.

(இ - ள்.) தென்புலத்தார்-தென்புலத்துத் தேவர், தெய்வம்-கடவுள், விருந்து - விருந்தினர், ஒக்கல் - சுற்றத்தார், என்று இவரோடு - என்று சொல்லப்பட்ட இந்த நான்கு பேரோடு, இன்புற - இன்பம் மிகும்படி, தான் உண்டல் இனிது-ஒருவன் தான் உண்பது நல்லது; அன்பு உற-அன்பு உண்டாகும்படி, தக்க அவரை இன்றி - உண்டற்குத் தகுந்தவர்களான அந்த நான்கு பேரும் இல்லாமல், தனித்து உண்டல்-தனியாக இருந்து உண்ணல், கொக்கு தான் கவர் மீன் அருந்தல் என்றே-கொக்கு தான் கவர்ந்த மீனைத் தனியே யிருந்து தின்னுதலோடொக்கும் என்றே, குறி - நீ எண்ணுவாயாக.

(க - து.) ஈட்டும் பொருளை ஒருவன் தென்புலத்தார் முதலிய நால்வருந் தானுமாகப் பயன்படுத்துதல் வேண்டும்.

ஈற்றில் ஏகாரம் தேற்றம். முதலிரண்டடிகள் திருவள்ளுவர் திருமொழியைத் தழுவியெடுத்து அமைக்கப்பட்டுள்ளன. அவற்றின் பொருள்களைத்,

“ தென்புலத்தார் தெய்வம் விருந்(து)ஒக்கல் தான் என்றாங்(கு)
ஐம்புலத்தா(று) ஓம்பல் தலை ” (இல்வாழ்க்கை, 3)

என்னுந் திருக்குறளிலும் அதற்குப் பரிமேலழகர் கூறிய உரையிலுங் கண்டுகொள்க. தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் என்பவரோடு உண்ணுதலில்மட்டும் இன்பம் மிகுதலால், ‘இன்புறத் தான் உண்டல்’ என்றார். உற-மிக. அந்நால்வரும் உடனிருந்து உண்ணுதலால் உண்பிப்பான் றனக்கு அன்பு உண்டாகி அது மிகுதலின், “ அன்புறவே தக்க அவரை இன்றி ” என்றார். தக்க அவரை-நிலைமொழி இறுதி அகரந் தொக்கது.

இந்திரவி நீள்கிரண மெங்கு நிறைந்தாலும்
இந்திரவி காந்தத் திலகுமே—இந்திரவி
நேத்திரத்தோ னெங்கு நிறைந்தாலு நித்தனருள்
நேத்திரத்தோர் பாலே நிறைவு.

(இ - ள்.) இந்து இரவி நீள் கிரணம் - திங்கள் ஞாயிறு என்பவைகளின் நீண்ட ஒளிகள், எங்கும் நிறைந்தாலும் - உலக மெங்கும் நிறைந்திருந்தாலும், இந்து இரவி - அந்தத் திங்கள் ஞாயிறுகளின் ஒளிகள், காந்தத்து இலகும்-காந்தக் கல்லினிடத்தில் மிகவும் விளங்கும்: (அதுபோல) இந்து இரவி நேத்திரத்தோன்-திங்கள் ஞாயிறு என்னும் இரண்டையுமே இரண்டு கண்களாக உடைய கடவுள், எங்கும் நிறைந்தாலும் - உலகெங்கும் நிறைந்திருந்தாலும், நித்தன் நிறைவு-அக்கடவுளின் மிகுந்த விளக்கம், அருள் நேத்திரத்தோர் பாலே - அருட் கண்ணுடைய அடியவர்களிடத்தேதான் உண்டு.

(க - து.) இறைவன் தன் அடியாரிடத்தில்மட்டும் மிக்கு விளங்கிநிற்பன்.

காந்தக் கல் - அவ் வொளியினை மிகுத்துக் காட்டுங் கல்; இதனைக் காந்தமணி யென்றுங் கூறுப. கடவுளுக்கு உலகத்தையே ஒருடம்பாகக் கூறுவது மரபாதலால், திங்களும் ஞாயிறும் அவருக்குக் கண்களாயின. அருள் நேத்திரத்தோர்-அருட் கண்ணோர்; கடவுள் அருள்வழியாக, எல்லாவற்றையும் பார்ப்பவர்; அவர், அடியார். "அருளால் எவையும் பார் என்றான்" என்பது தாயுமானார் பாடல். அருட்கண்ணோர் கண்ணுக்கு இரவி போல் நிற்கும் அரன் ஏய்ந்து,' என்னும் சிவஞானபோதத் திருமொழியில் இச் செய்யுட் பொருள் நன்கு காணப்படுகின்றமை காண்க. இச் செய்யுளைப் போலவே, இந்நூலின் 40-ம் செய்யுளும் ஒரு கருத்தின் மேலதாய் வந்திருக்கின்றது. (50)

தாமோ தரன்முதலோர் சாதல்நூல் சாற்றுவதும்
பூமேலோர் பொன்றுவதுங் கண்டோமே—நாமுடலை
நேசிப்ப தென்னோ நிலையாகுஞ் சங்கரனைப்
பூசிப்ப தென்றோ புகல்.

(இ - ள்.) தாமோதரன் முதலோர் சாதல் நூல் சாற்றுவதும்-திருமால் முதலிய தேவர்கள் இறத்தலைப்பற்றி நூல்கள் சொல்வதையும், பூமேலோர் பொன்றுவதும் - நில உலகத்திலுள்ள மக்கள் முதலான உயிர்கள் செத்துப் போவதையும், கண்டோமே - முறையே காதாலுங் கண்ணாலும் தெரிந்து கொண்டோமே; (அப்படியிருந்தும்), நாம் உடலை நேசிப்பது

என்றே - நாம் உடம்பின்மேற் பற்று வைப்பது எதற்காகவோ, சங்கரனைப் பூசிப்பதே நிலையாகும் என்று புகல் - சிவபெருமானை வழிபடுவதே நிலையானதென்று சொல்.

(க - து.) நிலையில்லாத உடம்பின்மேற் பற்றுவையாது அவ்வுடம்பைக் கருவியாகக் கொண்டு நிலையான இறைவன் திருவருளைப் பரவுதல் வேண்டும்.

'பூசிப்பது என்றே' என்பதைப் 'பூசிப்பதே என்று' என ஏகாரத்தைப் பிரித்துக்கூட்டித் தேற்றப்பொருட் படுத்துக. தாமோதரன் முதலோர் இறந்து அழிந்துபோதலை,

"நூறு கோடி பிரமர்கள் நொந்தினார்
ஆறு கோடிநா ராயணர் அங்ஙனே
ஏறுகங்கை மணலெண்ணி லிந்திரர்
ஈறி லாதவன் ஈசன் ஒருவனே"

(பொது, ஆதிபுராணத் திருக்குறுந்தொகை, 3

"எண்ணிலி இந்திரர் எத்தனையோ பிரமர்களும்
மண்மிசை மால்பலர் மாண்டனர்காண் தோணேக்கம்"

என்னுந் தேவார திருவாசகங்களால் உணர்ந்துகொள்க. பொன்றுதல்-அழிந்து இறந்துபடுதல்; "பொன்றுங்காற் பொன்றாத் துணை" (அறன்வலி யுறுத்தல், 6) என்பது திருக்குறள்.

அரசி னிலையதனி னக்கிரத்தி னின்று
விரைய விழுதுளியே போலும்—புரையுடைய
ஆக்கைவிடா முன்ன மரன்பாதம் பூசித்தல்
நோக்கனன் றென்றே நுவல்.

(இ - ள்.) அரசின் இலையதனின் அக்கிரத்தின் நின்று - அரசிலையின் நுனியிலிருந்து, விரைய விழு துளியே போலும் - விரைவாக விழுகின்ற நீர்த்துளியைப்போல, புரை உடைய ஆக்கை விடா முன்னம் - குற்றமுடைய உடம்பு நீங்காததன் முன்னமேயே, அரன் பாதம் பூசித்தல் - சிவபெருமான் திருவடியை வழிபடுதலும், நோக்கல் - வழிபட்டபின் அதனைக் கண்ணாரக்கண்டு மகிழ்தலும், நன்று என்றே நவில்-நன்மையென்றே சொல்.

(க - து.) இறந்து போவதற்கு முன்பே இறைவனை வணங்கி நலம் பெறவேண்டும்.

அக்கிரம்: கிலாக்கிரம், குசலாக்கிரம் என்று வழங்குதலறிக. அரசிலையில் இருக்கும் நீர்த்துளி அதன்கண் தங்காமல் அதன் நுனி வழியாகக் கீழ் விழுந்துவிடுதல் போல, உடம்பினுள்ள செந்நீரும் நாளடைவில் துளித்துளியாக அவ்வுடம்பினின்றும் ஒழுகி வற்றிக் கேடுறுதலால், உடம்பு புரையுடையது என்றார். இங்ஙனங் குறிப்பிட்டது, உடல் விடுமுன்னமே இறைவனைத் தொழல்வேண்டு மென்பது,

"கால மான கழிவதன் முன்னமே
ஏலு மாறு வணங்கிநின் றேத்துமின்"

என்னுந் தேவாரத்தால் விளங்கும். பூசித்தல் நோக்கல் கூறினமையின், பூசித்துப் பின் நோக்குவார்க்கு உள்ளங் கசிதலும், பின் பாடுதல் முதலாயினவும் நேர்தல் இயல்பாதலால் அவைகளெல்லாவற்றையும் அவ்விரண்டின் வரிசையிற் கொள்க. முன் செய்யுளிற் கூறிய கடமையை இச்செய்யுள் விரைந்து செய்யுமாறு வற்புறுத்திற்று. (52)

சத்தியத்தை வெல்லா தசத்தியந்தா னீள்பொறையை
மெத்திய கோபமது வெல்லாது—பத்திமிகு
புண்ணியத்தைப் பாவமது வெல்லாது போரரக்கர்
கண்ணனைத்தான் வெல்லுவரோ காண்.

(இ - ள்) போர் அரக்கர் கண்ணனை வெல்லுவரோ - சண்டை செய்கின்ற இராக்கதர்கள் கண்ணபிரானை வென்றுவிடுவார்களோ?? (வெல்லமாட்டார்கள்; அதுபோல) அசத்தியம் சத்தியத்தை வெல்லாது - பொய் மெய்யை வெல்லமாட்டாது; மெத்திய கோபமது நீள் பொறை வெல்லாது - மிகுந்த சினம் மேலான பொறுமையை வெல்லாது, பத்தி மிகு புண்ணியத்தைப் பாவமது வெல்லாது-அன்பு மிக்க நல்வினையைத் தீவினை வெல்லாது.

(க-து.) நன்மையைத் தீமை வெல்லமாட்டாது.

காண் - முன்னிலை அசை. ஓர் விகு. நீள் - மேன்மையின் மிகுந்தமைக்கு. மெத்திய-அளவின் மிகுந்தமைக்கு. நல்வினை

ன்பது இறைவன்பாற் கொள்ளும் மெய்யன்பு நிலையே யாத ாற், "பத்திமிகு புண்ணியம்" என்றார். போரரக்கர் என்றது, ண்டையே செய்வாராய் அதிற் பழக்கம் மிகுந்த அரக்கருங் ண்ணனை வெல்லமாட்டார் என்பதற்கு, கண்ணன் - எதுப் பயர். இச்செய்யுள் ஒருவமை கொண்டு மூன்று கருத்துக்களை றிவுறுத்திற்று. இதன் பொருள்,

"வெட்டெனவை மெத்தெனவை வெல்லாவாம் வேழத்திற்
பட்டுருவுங் கோல்பஞ்சிற் பாயாது—நெட்டிருப்புப்
பாறைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும்"

ன்னும் நல்வழியின் கருத்தோடொத்து நிற்கின்றது. (53)

பொற்பறிவில் லாதபல புத்திரரைப் பேறலினோர்
ற்புதல்வனைப்பெறுதல் நன்றாமே—பொற்கொடியே
ன்றிபல குட்டி பயந்ததனு லேதுபயன்
ஒன்றமையா தோகரிக்கன் றோது.

(இ - ள்.) பொற்கொடியே-பொன்னாலான கொடியைப்போ ிருப்பவளே, பன்றி பல குட்டிகளைப் பயந்ததனால் என்ன பயன் - பன்றி பல குட்டிகளைப் பெற்றதனால் ஏது பயன்? ஒன்றுமில்லை); கரிக் கன்று ஒன்று அமையாதோ-யானைக்கு அதன் கன்று ஒன்று போதாதோ, ஓது - நீ சொல். (ஆதலால், பொற்பு அறிவு இல்லாத பல புத்திரரைப் பேறலின்-நல்ல அறி வில்லாத பிள்ளைகள் பலரைப் பெறுதலினும் ஒரு நற்புதல்வனைப் பெறுதல் நன்று ஆம் - நல்லறிவுடைய புதல்வன் ஒருவனைப் பெறுவது நன்மையாகும்.

(க - து.) அறிவுடைய மக்களே விரும்பத்தக்கவர்.

பொற்பு அறிவு-அழகான அறிவு; "கல்வியழகே யழகு" என்றமையால், அங்ஙனம் அழகு தரும் அறி வென்க. பெறலின் என்பது முதல் நீண்டது. பல குட்டிகள் பயப்பதிற் பன்றி எடுத்துக்காட்டாக நிற்பது. அங்ஙனமே ஒன்று பயத்தலிற் கரியும் என்க. பயத்தல் - பயன் தரல்; நன் மக்களைப் பெறுத லும் மக்கட் பிறப்பாலாகும் பயன்களுள் ஒன்றாமாதலின், அச் சொல்லால் அதனைக் குறிப்பது மரபு. கரிக்குக் கன்று என்க.

அறிவில்லாத பலரைப் பெற்றெடுப்பதினும் அறிவுடைய ஒருவனைப் பெறுவது நன்மை தரும் என்பது. ஏனென்றால், "மடமாக்கள் பொன்றிலென் பொன்றாக்கா லென்" (நாலடியார், புல்லறிவாண்மை, 3) என்று ஆன்றோர்கள் ஏசுதலின் என்க. (54)

அத்தி மலரும் அருங்காக்கை வெண்ணிறமுங்
கத்துபுனன் மீன்பதமுங் கண்டாலும்—பித்தரே
கானார் தெரியற் கடவுளருங் காண்பரோ
மானார் விழியார் மனம்.

(இ - ள்.) பித்தரே-பெண் மயக்குப் பிடித்த பித்தர்களே! அரு - பார்ப்பதற்கு அருமையான, அத்தி மலரும் - அத்திப் பூவும், காக்கை வெண்ணிறமும்-காக்கையின் வெள்ளை நிறமும், கத்து புனல் மீன் பதமும்-ஒலிக்கின்ற கடலில் உள்ள பெரு மீன்களின் கால்களும், கண்டாலும்-ஒருகாற் பார்க்க இயன்றாலும், (பெண்களின் நெஞ்சு நினைப்பை நம்மால் அறிய முடியாது. நாம் மட்டுமோ என்றால்) கான் ஆர் தெரியல் கடவுளரும் - மணம் பொருந்திய மாலைகளையுடைய தேவர்களும், மான் ஆர் விழியார் மனம் - மான் பார்வைபோலும் மருண்ட கண்களையுடைய அப் பெண்களின் நெஞ்சத்தை, காண்பரோ - காண்பார்களோ? (அவருங் காணமாட்டார்.)

(க - து.) பெண்மக்கள் ஆழ்ந்த நினைப்பும் ஒழுக்கமும் உடையவர்கள்.

கத்தும் என்னும் குறிப்பால், புனல் என்பதற்குக் கடல் என்று பொருள் கூறப்பட்டது. கண்டாலும் என்பது காணமாட்டார் என்பதைக் காட்டிற்று. கான் - மணம். கடவுளர் என்பது தேவருக்குப் பெயராய் வருதலைக் "கடவுளர் அதனை நோக்கிக் கரங்குலைத் திரங்க லுற்றார்" (தாரக, 53) என்னுங் கந்த புராணத்துட் காண்க. (54)

காளவிடப் பாந்தள் கருடனையுங் கட்டுமோ
வாளெரியைக் கட்டுமோ வன்கயிறு—நீரும்
பவமருளும் பாசம்வெம் பஞ்சேந் திரியஞ்
சிவயோகி யைப்பிணியா வே.

(இ - ள்.) காளவிடம் பாந்தள் கருடனையும் கட்டுமோ - கரியதான நஞ்சையுடைய பாம்பு கருடனைக் கட்டுமோ? வன் கயிறு வாள் எரியைக் கட்டுமோ - வலிய கயிறு ஒளி மிக்க நெருப்புக் கொழுந்தைக் கட்டுமோ? (கட்டா.) அவை போல், நீளும் பவம் அருளும் பாசம் - மிகுந்துகொண்டே யிருக்குந் தீவினையைக் கொடுக்கும் மலங்களும், வெம் பஞ்சேந்திரியம்-அம் மலங்கட்கு உதவியாயிருக்குங் கொடுமையான ஐம்பொறிகளும், சிவயோகியைப் பிணியா - சிவத்தை நோக்கித் தவம் புரியும் அடியார்களைத் துன்புறுத்தா.

(க - து.) சிவனடியார்களுக்கு இவ் வுலகத் துன்பங்கள் இல்லை.

காளம் - கருமை. இது, "காளம் ஆகு இருளை" (மண் மக, 144)என்னும் சிந்தாமணியாலும், அதற்குக் "கருமை மேன் மேலும் பெருகாநின்ற இருளை" என்று உரையாசிரியர் நச்சி னார்க்கினியர் எழுதிய உரையாலும் விளங்கும். பாசம் பவங் கொடுத்தலை அருளும் என்றது இகழ்ச்சி. இறைவனது அருள் விளக்கத்தோடு நெஞ்சம் பொருந்தி நெகிழும் பெரியோர்களுக்கு மலத்தாலும் ஐம்பொறியாலும் எய்துந் துன்பம் துன்பமாகத் தோன்றமாட்டாதாதலின், "சிவயோகியைப் பிணியா" என்றார். இவ்வாறான அவரியல்பினை,

"உடற்கு வருமிடர்நெஞ்சு ஓங்குபரத்(து) உற்றோர்
அடுக்கும் ஒருகோடி யாக-நடுக்கமுறார்"

(நன்னெறி, 29)

என்று சிவப்பிரகாசரும் அருளுதல் காண்க. (56)

புத்தியொடு முத்திதரும் புண்ணியத்தா லன்றியே
மத்தமிகு பாவத்தால் வாழ்வாமோ—வித்துபயிர்
தாயாகி யேவளர்க்குந் தண்புனலா லல்லாது
தீயால் வளருமோ செப்பு.

(இ - ள்.) வித்து பயிர்-விதைத்துண்டாகும் பயிர், தாயாகி வளர்க்கும் தண்புனலால் அல்லாது-தாயைப் போலவே நின்று தன்னை வளர்க்குங் குளிர்ச்சியான தண்ணீரால் விளைவதல்லாமல், தீயால் வளருமோ-நெருப்பினால் விளையுமோ, செப்பு-நீ சொல்,

(அதுபோல) புத்தியொடு முத்திதரும் புண்ணியத்தால் அன்றி-அறிவோடு அவ்வறிவின் பயனான வீடுபேற்றையுங் கொடுக்கும் நல்வினையாலல்லாமல், மத்தம் மிகு பாவத்தால்-அறியாமை மிகுகின்ற தீ வினையால், வாழ்வு ஆமோ-நல்வாழ்வு உண்டாகுமோ? (தீவினையால் உண்டாகாது; நல்வினையினாலேயே நல் வாழ்வு உண்டாகும் என்பது).

(க - து.) இம்மையிலும் மறுமையிலும் வேண்டப்படும் நல் வாழ்வு நல்வினையினாலேயே வரும்.

அறிவு பெற்று அதுகொண்டு வீடுபெற வேண்டுமாதலால், 'புத்தியொடு முத்தி தரும்' என்று முன்னும் பின்னுமாகக் கூறினார். "ஞானத்தால் வீடு" என்று (8, 27) சிவஞானசித்தியார் கூறுதல் காண்க. மத்தம்-உன்மத்தம். மணம் அடைமொழிதராது வாளா கூறப்பட்டால் அது நன்மணத்தையே உணர்த்துதல்போல, இங்கு அடைமொழி தராது இடப்பட்ட வாழ்வென்னுஞ் சொல்லும் நல்வாழ்வைக் குறித்தது. நல்வாழ்வாவது இன்பவாழ்வு; அது நல்வினையினாலேயே உண்டாகும் என்பது. 'வித்துபயிர்: வினைத் தொகை. வித்து வினைச் சொல்லாய் வருதலை, "வித்திய உழவர் நெல்லொடு பெயரும்" (ஐங்குறுநூறு, மருதம், 3) என்பதிற் காண்க. (57)

சிவனே சிவனே சிவனேயென் பார்பின்
சிவனுமையா ளோடுந் திரிவன்—சிவனருளால்
பெற்றவிளங் கன்றைப் பிரியாமற் பின்னோடிச்
சுற்று பசுப்போற் றொடர்ந்து.

(இ - ள்.) சிவன் அருளால் - சிவபிரான் திருவருளினாலே சிவனே சிவனே சிவனே என்பார் பின்-சிவபெருமானே சிவ பெருமானே சிவபெருமானே என்று அலறுபவர்களின் பின்னே, பெற்ற இளம் கன்றைப் பிரியாமல் பின் ஓடிச் சுற்று பசுப் போ-ல்தான் பெற்ற இளமையாகிய கன்றைப் பிரியாமல் அதன் பின் ஓடி அதனைச் சுற்றிச் சுற்றித் திரிகின்ற ஆவைப்போல், தொடர்ந்து - இடைவிடாமல், சிவன் - சிவபெருமான், உமையாளோடும் - அருளுருவாகிய உமையம்மையோடும், திரிவன்-கூடவே திரிந்துகொண்டிருப்பான்.

(க - து.) கடவுள் நினைவுடையார்க்கு அவன் றிருவருள் இடைவிடாது தொடர்ந்துநிற்கும்.

'என்பார்' என்று பொதுச்சொல்லில் நிறுத்தினர், சிவனே சிவனே சிவனே என்று வாயாற் கேட்கச் சொல்லுதலே யன்றி அதனைக் கேட்கவொட்டாமற் சொல்லுதலும், எண்ணுதல் முதலியவைகளும் உண்டாதலின். சிவபிரான் அருளுக்கு இருப்பிடம் உமையம்மையாதலாலும், அவ்வருளம்மை இல்லாமல் அவன் இல்லை யாதலாலும், இவ்வுண்மையை 'அருளுண்டா மீசற்கு அது சத்தியன்றே; அருளும் அவனன்றி யில்லை; அருளின் றவனன்றே யில்லை' என்று சிவஞானபோதம் எடுத்துரைப்பதாலும் சிவனும் உமையும் ஒருவரை யொருவர் பிரியார் என்க. சிவனருளால் சிவனை வணங்கும் உண்மையை, "அவனருளாலே அவன் தாள் வணங்கி" என்று மாணிக்கவாசகர் அருளுதல் காண்க. (58)

தாமுங்கொ டார்கொடுப்போர் தம்மையுமீ யாதவகை
சேமஞ்செய் வாருஞ் சிலருண்டே—யேமநிழல்
இட்டுமலர் காய்கனிக ளீந்துதவு நன்மரத்தைக்
கட்டுமுடை முள்ளெனவே காண்.

(இ - ள்.) தாமும் கொடார்-தாங்களும் ஒருவர்க்கு ஒன்று கொடுக்காமல், கொடுப்போர் தம்மையும்-கொடுக்கக்கூடிய ஈகை யியல்புடைய நன்மக்களையும், ஏமம் நிழல் இட்டு மலர் காய் கனிகள் ஈந்து உதவும் நல் மரத்தைக் கட்டும் உடைமுள் என-இன்பமான நிழலைக் கொடுத்துப் பூவுங் காயும் பழமுந் தந்து உதவக்கூடிய நல்ல மரத்தைச் சூழ்ந்த உடைவேல் முள்ளைப் போல, ஈயாத வகை சேமம் செய்வாரும்-கொடுக்காதபடி தடுத்துக் காவல் செய்வாரும், சிலர் உண்டு - சிலர் இருக்கின்றார்கள்.

(க - து.) கொடுத்தலைத் தடுத்தலாகாது.

காண்-முன்னிலையசை. 'தாமுங் கொடார்; கொடுப்போர் தம்மையும், உதவும் நன்மரத்தைக் கட்டும் முள்ளெனச் சேமம் செய்வாரும் சில ருண்டு' என்பது. கொடார் என்பது முற்றெச்சம். சேமம் - காவல்; இப்பொரு ளுண்மை "தீங்கு புரிந்த வன்றன்னைச் சேமமுறக் கொண்டுபோகி" (திருநாவு, 123) என்னுந் திருத்தொண்டர் புராணத் திரு உரையாற் றெளியப் படும். உடை என்பது ஒருவகையான முள் மிக்க வேலமரம்;

இது குடைவேலமரம் என்றும் வழங்கும் (பிங்கல, 3190). கொடையாளனுக்குப் பழமரம் உவமையாதலைப் "பயன் மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால்" என்னுந் திருக்குறளிற் காண்க. (59)

ஆயுமலர்த் தேன்வண் டருந்துவது போலிரப்போர்
ஈயு மவர்வருந்தா தேற்றலறந்—தூயவிளம்
பச்சிலையைக் கீடமறப் பற்றி யரிப்பதுபோல்
அச்சமுற வாங்க லகம்.

(இ - ள்.) ஆயும் மலர்த் தேன் - வண்டினால் ஆராயப்படும் மலரில் உள்ள தேனை, வண்டு அருந்துவதுபோல் - அவ்வண்டு உண்பதுபோல, இரப்போர் - பிச்சையெடுப்போர், ஈயுமவர் வருந்ாது-கொடுப்பவர்கள் வருந்ாதபடி, ஏற்றல் அறம்-அவர் குறிப்பறிந்து பெறுதல் நல்லது ; கீடம் தூய இளம் பச்சிலையைப் பற்றி அற அரிப்பதுபோல்-புழு அழுக்கற்ற இளைய பச்சிலையைப் பிடித்து நின்று அதனை இடையறும்படி அரித்துவிடுவதுபோல, அச்சம் உற வாங்கல் அகம்-கொடுப்பவர்கள் அஞ்சும்படி வாங்குதல் தீது.

(க - து.) கொடுப்பவரை வருத்தாது வாங்குவது நன்று ; வருத்தி வாங்குவது தீது.

வருந்ாதேற்றல் அறம் என்றமையின், அச்சமுற வாங்கல் மறம்; அஃதாவது தீது ஆயிற்று. அச்சம் உற-அஞ்சுதல் மிக. அகம் என்பது நான் என்னும் முனைப்பு; அஃ திங்குத் தீதாயிற்று. (60)

மாதா மரிக்கின் மகனாவி னற்சுவைபோம்
தாதா வெனிற்கல்வி தானகலும்—ஓதினுடன்
வந்தோன் மரித்துவிடில் வாகுவலி போமனையேல்
அந்தோ விவையாவும் போம்.

(இ - ள்.) ஓதின்-சொல்லுவோமானால், மாதா மரிக்கின் மகன் நாவின் நல் சுவை போம் - தாய் இறந்துவிட்டால் பிள்ளையின் நாவிற்குச் சிறந்த சுவைப் பொருள்கள் இல்லாமற் போம்; தாதா எனில் கல்வி அகலும் - தந்தை இறந்தான் என்றால் அப் பிள்ளைக்குக் கல்வி குறைந்துவிடும்; உடன்வந்தோன் மரித்து

விடில் வாகுவலி போம்-உடன்பிறந்தோன் இறந்துவிட்டால் தோள்வலி கெட்டுப்போம்; மனையேல் - மனைவியே இறந்தாளென்றால், அந்தோ இவை யாவும் போம் - ஐயோ நாவின் சுவை, கல்வி, தோள்வலி என்னும் இவை எல்லாம் கெட்டுப் போய்விடும்.

(க - து.) ஒருவனுக்குத் தாய் தந்தை உடன்பிறந்தான் என்பாரும் மனைவியும் இல்லாவிட்டால், அவனுக்கு முறையே உணவு, கல்வி, வெற்றி என்பனவும் அனைத்துங் கெட்டுவிடும்.

அகலும் என்றது குறைந்துபோம் என்றற்கு. மனைவி ஒரு குடும்பத்தின் பல துறைகளையும் ஏற்றுப் பொறுப்புடன் செய்யு நீரள் ஆதலின், அவளோடு அனைத்தும் போமென்றார். இச் செய்யுட் கருத்து,

"தாயோ டறுசுவைபோம் தந்தையொடு கல்விபோம்
சேயோடு தான் பெற்ற செல்வம்போம்"

எனப் பிற விடங்களிலும் வருதல் நினைவுகூர்தற் குரியது. (61)

ஓதுபொருள் கண்டோர்க் குறுமாசை நீதியிலாப்
பாதகரைக் கண்டோர்க்குப் பாவமாஞ்—சீதமலர்
கண்டோர்க் குறும்வாசங் கற்றமைந்த நற்றவரைக்
கண்டோர்க் குடனுங் கதி.

(இ - ள்.) ஓது பொருள் கண்டோர்க்கு ஆசை உறும்—உலகத்திலே சொல்லப்படுகின்ற செல்வத்தைப் பார்த்தவர்களுக்கு அதில் ஆர்வம் மிகும், நீதி இலாப் பாதகரைக் கண்டோர்க்குப் பாவம் ஆம் - ஒழுக்கமில்லாத தீயோரைக் கண்டவர்களுக்குத் தீது உண்டாகும், சீத மலர் கண்டோர்க்கு வாசம் உறும்—குளிர்ச்சியான பூக்களைப் பார்த்தவர்களுக்கு மணம் உண்டாகும், கற்று அமைந்த நற்றவரைக் கண்டோர்க்கு கதி உடன் ஆம்—படித்தடங்கிய பெரியாரைக் கண்டவர்களுக்கு நல்ல வழி உடனே உண்டாகும்.

(க - து.) நல்லாரைக் காண்பது நன்று.

கற்று அமைந்த - கற்று அடங்கிய. "அறிவோர்க் கழகு கற்றுணர்ந் தடங்கல்" என்பது வெற்றிவேற்கை. கதி-வீடுபேறு. இதனைக் "கதி யிழக்கினுங் கட்டுரை இழக்கிலோம்" என்னும்

அரிச்சந்திர புராணத் தொடரிற் காண்க. இங்கே, இது நல்வழியை உணர்த்திற்று. (62)

பாவிதனந் தண்டிப்போர் பாலாகு மல்லதருள்
மேவுசிவ னன்பர்பான் மேவாதே—ஓவியமே!
நாயின்பா லத்தனையு நாய்தனக்கா மன்றியே
தூயவருக் காகுமோ சொல்.

(இ - ள்.) ஓவியமே - படத்தி லெழுதிய பாவை போன்றவளே, நாயின் பால் அத்தனையும் நாய் தனக்கு ஆம் அன்றி - நாயினுடைய பால் அவ்வளவும் நாய்க்கே ஆமல்லது, தூயவருக்கு ஆகுமோ சொல் - தூய்மையாயிருக்கும் மக்களுக்கு ஆகுமா நீ சொல்; (அதுபோல) பாவி தனம் தண்டிப்போர்பால் ஆகுமல்லது - தீயவர்களின் பணம் கண்டித்து வாங்குந் தீயவர்களிடத்திற் சேருமேயல்லாமல், அருள் மேவு சிவன் அன்பர்பால் மேவாது-இரக்கம் பொருந்திய சிவனடியார்களிடத்திற் சேராது.

(க - து.) தீயோர் பொருள் நல்லோர்க் குதவாது.

நாய்தனக்கு என்னுங் குறிப்பாற் பணத்தின் இழிவு முதலியன தெளியப்பட்டன. அதனால் அது தூயோர்க்குப் பயன்படாதாயிற்று! (63)

பொன்னுங் கரும்பும் புகழ்பாலுஞ் சந்தனமும்
சின்னம் படவருத்தஞ் செய்தாலும்—முன்னிருந்த
நற்குணமே தோன்றும் நலிந்தாலு முத்தமர்பால்
நற்குணமே தோன்றும் நயந்து.

(இ - ள்.) புகழ் - இனிமையான தென்று எல்லாராலும் புகழப்படுகின்றன, பொன்னும் கரும்பும் பாலும் சந்தனமும் - பொன் கரும்பு பால் சந்தனம் என்னும் இந் நான்கு நற்பொருள்களையும், சின்னம் பட வருத்தம் செய்தாலும்-நிலைகுலைந்து வருந்தும்படி துன்புறுத்தினாலும், முன்னிருந்த நற்குணமே தோன்றும - முன்னை இருந்த ஒளி, இனிமை, சுவை, மணம என்னும் நல்ல இயல்புகளே மிகுந்து தோன்றும்; (அதுபோல), உத்தமர்பால் - நல்லோரிடத்தும், நலிந்தாலும் - அவர் துன்புற்றாலும், நற்குணமே நயந்து தோன்றும் - நல்ல இயல்பே மிளிர்ந்து தோன்றும்.

(க - து.) நல்லோர் எவ்வளவு நிலைமாறி வருந்தினாலும் அவர் நல்லியல்பு மாறாது.

சின்னம்பட - வடுப்பட : என்றது, நிலைகுலைந்து என்னும் பொருட்டு. (64)

வேசியரும் நாயும் விதிநூல் வயித்தியரும்
பூசுரருங் கோழிகளும் பொன்னனையாய்—பேசிலொரு
காரணந்தா னின்றியே கண்டவுட னேபகையாங்
காரணந்தா னப்பிறப்பே காண்.

(இ - ள்.) பொன் அனையாய் - திருமகளைப் போன்ற பெண்ணே, பேசில் - சொல்லுமிடத்து, வேசியரும் - பொது மகளிரும், நாயும்-நாய்களும், விதி நூல்-சட்ட நூலும், வைத்தியரும்-மருத்துவரும், பூசுரரும்-பார்ப்பனரும், கோழிகளும்-, ஒரு காரணந்தான் இன்றியே கண்ட உடனே பகை ஆம் - ஓரேதுவும் இல்லாமலே பார்த்தஉடனே பகைவராய்விடுவர்; காரணந்தான் அப்பிறப்பே காண்-அதற்கு எது அப்பிறவியின் தன்மையே யாம்; இது கிாண்க.

(க - து.) வேசியர் மருத்துவர் பார்ப்பனர் என்பாரின் பகையாந்தன்மை அவர்கட்குப் பிறப்பிலேயே உள்ளது.

விதிநூலும் என உம்மை விரித்துக்கொள்க. நாயையுங் கோழியையும் எடுத்துக் காட்டியது வேசையருக்கும் வைத்தியருக்கும் பூசுரருக்கும் உள்ள தன்மையைப்புலப்படுத்துவதற்காம். ஆதலின், அவ்விரண்டையும் உவமைகளாகக் கொள்ளுதல் சிறக்கும். (65)

அன்னமனை யாய்குயிலுக் கானவழ கின்னிசையே
கன்னன்மொழி யார்க்கழகு கற்பாமே—மன்னுகலை
கற்றோர்க் கழகு கருணையே யாசைமயக்
கற்றோர்க் கழகுபொறை யாம்.

(இ - ள்.) அன்னம் அனையாய்-அன்னப் பறவை போல்வாளே, குயிலுக்கான அழகு இன் இசையே - குயிலுக்கு உள்ள அழகு இனிய இசையே யாவதுபோல, கன்னல் மொழியார்க்கு அழகு கற்பு ஆம்-இனிக்கும் மொழியையுடைய பெண்

மக்களுக்கு அழகு கற்பேயாகும், மன்னு கலை கற்றோர்க்கு அழகு கருணையே ஆம் - நிலைபெற்ற கல்வியைப் படித்தவர்களுக்கு அழகு இரக்கமே யாகும், ஆசை மயக்கு அற்றோர்க்கு அழகு பொறையே ஆம் - அவாவாகிய மயக்கத்தை விட்டவர்களுக்கு அழகு பொறுமையேயாகும்.

(க - து.) பெண்கள் கற்பாகவும், கற்றவர்கள் இரக்கமாகவும், துறவிகள் பொறுமையாகவும் இருத்தல்வேண்டும்.

மன்னு கலை என்றது அறிவுநூற் கல்வியை. மற்று உலக நூற் கல்வி காலத்துக் கேற்ப மாறுபட்டொழியுமாதலின், நிலைபெற்ற அறிவுநூற் கல்வியை 'மன்னு கலை' என்றார். பெண்ணாய்ப் பிறப்பதாலும், படிப்பதாலும் துறப்பதாலும் ஆன பயன் முறையே கற்பும், இரக்கமும், பொறுமையுமே யாம் என்று உணர்த்தியபடி. (66)

இதமகித வார்த்தை யெவர்க்கேனு மேலாம்
இதமெனவே கூறலித மன்றே—இதமுரைத்த
வாக்கினல் ஏரண்ட மாமுனியுஞ் சோழனெடு
தேக்குநீர் வீழ்ந்தொழிந்தான் சேர்ந்து.

(இ - ள்.) இதம் உரைத்த வாக்கினல் - நன்மை பயக்கும் உரையைச் சொன்ன சொல்லால், ஏரண்ட மாமுனியும்-ஏரண்டர் என்னும் மாபெரும் முனிவரும், சோழனெடு சேர்ந்து தேக்கு நீர் வீழ்ந்தொழிந்தான் - சோழ மன்னனேடு கூடத் தானும் தேங்கியிருந்த மிகுந்த நீரில் விழுந்து இறந்தார். (ஆதலால்), எவர்க்கேனும் - நல்லவர் தீயவர் என்று அவர் எவராயிருந்தாலும், இத வார்த்தை - நல்லவர்களுக்கு நல்ல சொற்களையும், அகித வார்த்தை- தீயவர்களுக்குத் தீய சொற்களையும், மேலாம் இதம் எனவே-மேலான நன்மை என்றே, கூறல்-சொல்லுதல், இதம் அன்றே - நன்றன்றே.

(க - து.) நல்லவர்களுக்கு நல்லவாயுந் தீயோர்க்குத் தீய உரையாயுமே உரைத்தல் வேண்டும் என்னும் வரம்பின்றிக் காலம் இடம் முதலியவைகட்கு ஏற்றபடி சொற்களை அவ்வவர்பாற் சொல்லல் வேண்டும்.

'இதமுரைத்த முனி சோழனோடு சேர்ந்து வீழ்ந்தொழிந்தான்; (ஆதலால்) எவர்க்கும் இதம் அகிதவார்த்தை மேலாம் இதமெனவே கூறல் இதமன்றே' என்று முடிக்க. சொல்லப்படுவன தீயவாயினும் நல்லவாயினும், அவை முடிவில் நன்மையையே பயத்தல்வேண்டும் என்று உணர்த்தியபடியாம். தேங்கு நீர் என்பது வலித்தது. நீர் தேங்கினமையின் மிகுந்த நீர் என்று பொருளுரைக்கப்பட்டது.

கதை: காவிரியாறு திருவலஞ்சுழி என்னு மிடத்திற்குப் பக்கத்தில் நீர் தேங்கி நிலத்துட் சுழித்துச் சென்றது. சோழன் அந்நீர் நாட்டுக்குப் பயன்படாமற் போகின்றதே என்றெண்ணி வருந்தி ஏரண்ட முனிவரிடஞ் சொன்னான். முனிவர் அந்த நீர்ச் சுழியில் ஒரு மயிர்த் தலையைப் பலி கொடுத்தால் அது நாட்டிற் பாயும் என்றார். அரசன் உலகம் நன்மையடைய வேண்டுமே யென்று தன் தலையைக் கொடுத்து இறந்தான். நமது சொல்லாலன்றோ அரசன் உயிரிழக்க நேர்ந்ததென்று முனிவரும் அவனோடு சேர்ந்து அச்சுழியில் வீழ்ந்து இறந்தார். 'அரசன் இரக்கமுடையவனாதலால், அவனிடத்தில் உண்மையான பயன்படுஞ் சொல்லைச் சொன்னால் என்ன நேருமோ' என்று நினையாமல், நல்லாரிடத்தில் நற்சொல் சொல்லல் வேண்டுமென்பதே கருத்தாகக் கொண்டு ஏரண்டர் சொன்னமையால், அரசன் இறந்து நாடு கெட்டது மன்றித் தாமும் உயிரிழக்க நேர்ந்தமை காண்க.

இத்தரையோர் தம்மி லிருவரே மேலானோர்
சித்திரச வாதி சிவயோகி—முத்தனையாய்
நல்குரவு முற்பவமு நாசம் புரிவாரே
அல்லவர் வீரியக்கீ டம்.

(இ - ள்.) முத்து அனையாய் - முத்துப்போல்வாளே! இத்தரையோர் தம்மில்-இவ்வுலகத்தில் உள்ளவர்களில், நல்குரவும் உற்பவமும் நாசம் புரிவார் - இல்லாமையையும் பிறப்பையும் ஒழிப்பவர்களாகிய, சித்து இரசவாதி சிவயோகி-சித்தாகிய இரசவாதம் செய்யும் சித்தர்களும் சிவயோகிகளும் என்னும், இருவரே-இரண்டு வகையானவர்களே, மேலானோர் - மேன்மையானவர்கள்; அல்லவர்-இவ்விருவருமல்லாத மற்றையோர், வீரியக்கீடம் - பொறியிலானான புழுக்கள்.

(க - து.) பொருளும் அருளுந் தேடும் பெரியாரன்றி மற்றவரெல்லாம் புழுக்களாவார்.

சித்திரசவாதிகள், இரும்பு முதலானவற்றைப் பொன்னாக்குவோர்: அதுகொண்டு அவர் நல்குரவின் நீங்கிச் செல்வராவர். சிவயோகிகள் கடவுள் அருளை அடைதலால், அதுகொண்டு அவர்கள் தம் பிறப்பை ஒழித்து வீடு பெறுவர்.

" அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க்
கிவ்வுலக மில்லாகி யாங்கு" (அருளுடைமை, 7.)

என்று திருக்குறள் கூறுவதுபோல, இவ்விருவரும் இம்மைக்கு வேண்டிய செல்வத்தையும் மறுமைக்கு வேண்டிய அருளையும் பெறுதலின், இவரே மற்றவரினுஞ் சிறந்தார். மற்றவர் இம்மைக்கும் மறுமைக்குந் தேடவேண்டிய பொருளையும் அருளையுந் தேடாமல் எடுத்த உடம்பை வீணாக்குதலால், 'அல்லவர் வீரியக் கீடம்' என்றார். அவர் பார்வைக்கு உடம்புமட்டும் உடையராய் இருத்தலால், அவ்வுடம்பு எதனாலாயிற்றோ அதனையே சுட்டி இழிவுபடுத்தினார் என்க. உற்பவம் பிறப்பைக் குறித்து வருதல், " மாநுட உற்பவம் பெற்று வாழுத லரிது" (பாரதம், சஞ்சய, 7) என்பதிற் காண்க. (68)

அற்றசிவ யோகிக் கருஞ்சின்ன மூன்றுண்டு
பற்றலகை யுன்மத்தர் பாலரியல்—முற்றுரச
வாதிக்குச் சின்னமூன் றுண்டே மகிழ்போகம்
ஈத லிரவாமை யென்று.

(இ - ள்.) முற்று ரசவாதிக்கு - தலையான சித்தருக்கு, மகிழ் போகம் ஈதல் இரவாமை என்று-மகிழ்ச்சியான வாழ்வு கொடுப்பது, பிச்சையெடாமை என்று, சின்னம் மூன்று உண்டு-அடையாளங்கள் மூன்றிருக்கின்றன ; அங்ஙனமே, அற்ற சிவ யோகிக்கு-துறந்த சிவனடியார்க்கும், பற்று அலகை உன்மத்தர் பாலர் இயல் - ஒன்றைப் பற்றி நிற்கும் பேய்களியல்பு, பித்தரியல்பு, குழந்தைகளியல்பு என்று, அருஞ்சின்னம் மூன்று உண்டு-அருமையான அடையாளங்கள் மூன்று உள்ளன.

(க - து.) இல்வாழ்வாரிற் சிறந்தவரை நல்வாழ்வு, கொடை, இரவாமை என்பவைகளாலும், துறவறத்தாரிற் றலையாயினாரைப்

பேயியல்பு, பித்தரியல்பு, குழந்தையியல்பு என்பவைகளாலுந் தெரிந்துகொள்ளலாம்.

இச்செய்யுள் முற்செய்யுளிற் கூறப்பட்ட இரசவாதியையுஞ் சிவயோகியையும் அறிந்துகொள்ளத் தக்க அடையாளங்களைக் கூறிற்று. அலகையியல்பு தன் செயல் இழந்து ஏதேனும் ஒன்றைச் செய்துகொண்டே யிருப்பது; பித்தரியல்பு ஒருகாற் செய்வதும் மற்றொருகாற் செய்யாமல் வாளாஇருப்பது மாம்; குழந்தையியல்பு எப்பொழுதும் எதுஞ் செய்தலின்றிக் களங்கமற்றிருப்பது. சிவனடியார்கட்குள்ள இவ்வியல்புகளையும் இவ் வியல்புகளின் உண்மைகளையும்,

"பாலருடன் உன்மத்தர் பிசாசர்குணம் மருவிப்
பாடலினொ டாடலிவை பயின்றிடினும் பயில்வர்"

(நூற்பா. 8, அதி-2, 32)

என்னுஞ் சிவஞான சித்தித் திருமொழியாலும், "பாலர் குணம் அறவொழிதற்கும், உன்மத்தர் குணம் ஒருகாற் செய்தொருகா லொழிதற்கும், பிசாசர் குணம் செயலிழப்பினின்று செய்தற்கும் உவமையாயின" என்று இதற்குச் சிவஞான முனிவரர் எழுதிய பொழிப்பானுந் தெளிந்துகொள்க. இவ்விரண்டு செய்யுட் குறிப்பி னாலும் முற்றுரசவாதி என்பாரும், அற்ற சிவயோகி என்பாரும் முறையே இல்வாழ்வாருந் துறவறத்தாருமாவார் என்று கொள் ளப்படும். (69)

வல்லவர்பாற் கல்வி மதமா ணவம்போக்கும்
அல்லவர்பாற் கல்வி யவையாக்கும்—நல்லிடத்தில்
யோகம் பயில்வா ருயர்ந்தோ ரிழிந்தோர்கள்
போகம் பயில்வார் புரிந்து.

(இ - ள்.) வல்லவர்பால் கல்வி மதம் ஆணவம் போக்கும்— தக்கவரிடத்தில் உண்டான கல்வி அறியாமையையும் ஆணவத் தையுங் கெடுக்கும். உயர்ந்தோர் நல்லிடத்தில் யோகம் பயில் வார்-ஆதலால் அக்கல்வியில் உயர்ந்தோர் நல்ல இடங்களி லிருந்து கடவுளை வணங்குவார்கள், அல்லவர்பால் கல்வி அவை ஆக்கும்-நல்லவரல்லாத கீழோரிடத்துள்ள கல்வி அறியாமை யையும் ஆணவத்தையும் மிகுதியாக்கும், இழிந்தோர்கள் போகம்

புரிந்து பயில்வார்-ஆதலால், அக் கீழோர்கள் தாழ்ந்த உலக வாழ்க்கைகளை விரும்பி அதனை நுகர்ந்துகொண்டிருப்பார்.

(க - து.) உயர்ந்தோரது கல்வி அறியாமை முதலியவைகளைக் கெடுத்தலால் அவர் கடவுள் வணக்கத்தை விரும்புவர்; தாழ்ந்தோரது கல்வி அவ்வறியாமை முதலியவைகளைப் பெருக்குதலால் அவர் உலக வாழ்க்கையையே விரும்புவர்.

கல்வியின் விளைவு உயர்ந்தோரிடமும் தாழ்ந்தோரிடமும் வேறுபட்டுத் தோன்றுதலை இச்செய்யுள் நன்கு விளக்கிற்று; இதனால் கல்வியினும் உயர்குணமே சிறப்பாகப் பெறற்பாலதென்பது இனிது விளங்காநிற்கும். மேல்வருஞ் செய்யுளுங் கருதுக. மதம் அறியாமைக்கும், புரிந்து விரும்பி என்பதற்கும் வருதலை முறையே, "உறுநர்த் தாங்கிய மதன் உடை நோன்றாள்" (திருமுருகாற்றுப்படை, 4) "சாதலே புரிந்து தோன்றுந் தன்மை" (சிந்தாமணி, 1748) என்னுந் திருமொழிகளாற் கொள்க. (70)

தீயவர்பாற் கல்வி சிறந்தாலும் மற்றவரைத்
தூயவரொன்'றெண்ணியே துன்னற்க—சேயிழையே
தண்ணொளிய மாணிக்கம் சர்ப்பந் தரித்தாலும்
நண்ணுவரோ மற்றதனை நாடு.

(இ - ள்.) 'சேயிழையே - நல்ல நகைகளை அணிந்த பெண்ணே, சர்ப்பம் தண் ஒளிய மாணிக்கம் தரித்தாலும்-பாம்பு குளிர்ச்சியான ஒளி பொருந்திய மாணிக்க மணியை வைத்திருந்தாலும், அதனை நண்ணுவரோ - மாணிக்கத்தை விரும்பி அப்பாம்பை நெருங்குவார்களோ, நாடு-நீ அதனை நினைத்துப் பார்; (ஒருகாலும் நெருங்கமாட்டார்கள்; அதுபோல,) 'தீயவர்பால் கல்வி சிறந்திருந்தாலும் - கெட்ட தன்மையுள்ளவர்களிடத்திற் கல்வி மிகுந்திருந்தாலும், அவரைத் தூயவர் 'என்றெண்ணித் துன்னற்க - அவர்களைப் பெரியவர்களென்று நினைத்துச் சேராதொழிக.

(க - து.) நல்லியல்பு இல்லாதவர் கல்வியிற் பெரியராயிருத்தலால்மட்டும் பெரியவராகமாட்டார்கள்.

தூயவர்-கெட்ட தன்மையென்னும் அழுக்கு அற்றவராய்த் துப்புரவாய் விளங்கும் நல்லோராவர்; அவர் பெரியோர். (71)

ஊரூ ரெனும்வனத்தே யொள்வாட்கண் மாதரெனுங்
கூரூர் விடமுட் குழாமுண்டே—சீரூர்
விரத்திவை ராக்ய விவேகத் தொடுதோல்
உரத்தணியத் தையாவென் றோது.

(இ - ள்.) ஊர் ஊர் எனும் வனத்தே - வாழ்கின்ற ஊர் என்னுங் காட்டிலே, ஒள் வாள்கண் மாதர் எனும் கூர் ஊர் விடம் முள்குழாம் உண்டு-ஒளியுள்ள வாட் படையைப்போன்ற கண்களையுடைய பெண்கள் என்னும் கூர்மை மிகுந்த நஞ்சுபோலும் முட்கூட்டங்கள் உண்டு, சீர் ஊர் விரத்தி-சிறப்பு மிக்க துறவோர், விவேக வைராக்ய தொடுதோல் உரத்து அணிய-அறிவு உறைப்பு என்னுஞ் செருப்பை அறிவாகிய காலில் இட்டுக் கொள்ள, தையா என்று ஓது - அந்தப் பெண் என்னும் முட்கள் அவர் அறிவுக் காலைத் தைக்கமாட்டா என்று சொல்லு.

(க - து.) சிவனடியார்கள் தமக்கிருக்கும் உறுதியான எண்ணத்தாற் காமவலையிற் சிக்கமாட்டார்கள்.

இச்செய்யுளின் உருவகம் மிகவும் அழகானது. ஊரூர் வினைத் தொகை; ஊரும் ஊர் என்க. மக்கள் ஊர்தலால் ஊர் என்பது வாழ்விடத்தைக் குறித்தது. மாதர் என்று வாளா கூறாது ஒள்வாள் கண் மாதர் என்றமையின், அவர்தந் திறம் உணர்த்தியபடியாம். ஊர்தல் மிகுதிப் பொருளில் வருதல் மேலே 33-ஞ் செய்யுளுரையிற் காட்டப்பட்டது. உரம் என்பது திண்ணிய அறிவுக்கே பெயர். "உரமொருவற் குள்ள வெறுக்கை" (ஊக்கமுடைமை, 10) என்னுந் திருக்குறளை நோக்குக.) (72)

போற்று குருகிளைஞர் பொன்னாசை யோர்க்கில்லை
தோற்றுபசிக் கில்லை சுவைபாகந்—தேற்றுகல்வி
சேர்க் கிலைசுகமு நித்திரையுங் காமுகர்தம்
ஆசைக் கிலைபயமா னம்.

(இ - ள்.) போற்று குரு கிளைஞர் பொன்னாசையோர்க்கு இல்லை - போற்றப்படுதற்குரிய ஆசிரியரும் சுற்றத்தாரும் பண ஆசை பிடித்தவர்களுக்கு இல்லை, தோற்று பசிக்கு இல்லை சுவை

பாகம்-தோன்றும் பசிக்கு நல்ல சுவையும் நல்ல சமையலும் வேண்டாம், தேற்று கல்வி நேசருக்கு இலை சுகமும் நித்திரையும்-தெளிவிக்கும் கல்வியில் விருப்பமுடைய அன்பர்களுக்கு இன்பமுந் தூக்கமும் இல்லை. காமுகர்தம் ஆசைக்கு இல்லை பயம் மானம்-காம வியல்புடையவர்களின் விருப்பத்துக்கு அச்சமும் அவமானமும் இல்லை.

(க - து.) பொன்னாசை, பசி, இன்பம், தூக்கம், காமம் என்பவற்றை அளவின் நிறுத்துதல் வேண்டும்.

இச்செய்யுளின் கருத்துக்களைப் 'பணத்தின்மேல் ஆசை வையாது குரு கிளைஞரைப் போற்றுதல் வேண்டும்'; 'துடிக்கத் தக்க பசியெடுக்கு முன்னரே தக்க பசியோடு சுவையும் பாகமும் பார்த்து உண்ணல் வேண்டும்'; 'கற்கும்போது இன்பமுந் தூக்கமும் இடையூறுகளாய் நேர்ந்தவிடத்தும் அவற்றை நீக்கிக் கல்வியிலேயே கருத்திருத்துதல் வேண்டும்'; 'காமவியல்பை ஒழித்து அச்சத்தையும் மானத்தையுங் கைக்கொள்ளல் வேண்டும்' என்று உடன்பாட்டு முகமாகவுங் கொள்ளலாம் (73)

நன்றறியாத் தீயோர்க் கிடங்கொடுத்த நல்லோர்க்குந்
துன்று கிளைக்குந் துயர்சேருங்—குன்றிடத்திற்
பின்னிரவில் வந்தகரும் பிள்ளைக் கிடங்கொடுத்த
அன்னமுதற் பட்டதுபோ லாம்.

(இ - ள்.) நன்று அறியாத் தீயோர்க்கு இடம் கொடுத்த நல்லோர்க்கும்-செய்த நன்மையினை அறிந்துகொள்ள மாட்டாத தீயோர்க்குத் தமது இடம் கொடுக்கும் நல்லவர்களுக்கும், துன்று கிளைக்கும்-அவர்களைச் சேர்ந்த சுற்றத்தாருக்கும், துயர் சேரும்-துன்பம் வந்து மிகும், (அஃது எதுபோலவெனின்); முதல்-முன்னொருநாளில், குன்றிடத்தில் - மலையில், இரவில்வந்த-இரவிலே வந்த, கரும் பிள்ளைக்கு-காக்கைக்கு, இடம்கொடுத்த அன்னம்-இருக்க இடங்கொடுத்த அன்னப்பறவை, பின்பட்டது போல் ஆம்-பின்னால் துயரப்பட்டது போலாகும்.

(க - து.) கெட்டவர்களுக்கு இடங்கொடுக்கலாகாது.

செய்த நன்மையை யறியாது தீங்கு செய்வார்க்கு 'நன்றறியாத் தீயோர்' என்றார். இத்தொடர்பொருள் நுட்பம் உடையது.

கிளை-சுற்றம்; அவர், ஒரு மரத்தோடு சதைத்தொடர்புடைய கிளைகள்போல ஒருவனுக்கு உடம்புத் தொடர்புடைய உறவினராவர். 'சேரும்' என்றது மிகுதிப்பொருட்டு. கரும்பிள்ளை-காக்கை; நிறம்பற்றி வந்தபெயர். முதல் பின் என்பன காலங் குறித்தன.

கதை :—ஒரு பெரிய மலையில் ஓர் அன்னப்பறவை தன் இனத்தோடு வாழ்ந்துகொண்டிருந்தது. அப்போது ஒருநாளிரவில் மழையால் நனைந்து வருந்திய காகமொன்று அங்கு வந்து இருக்க இடங்கேட்டது. அவ்வன்னம் இடந்தரவே, காகமும் அங்குத் தங்கினமையின், அஃது எச்சமிட நேரிட்டது. அவ்வெச்சத்திலிருந்த ஆலம் விதை முளைத்தெழுந்து மரமாகிக் கீழே விழுதுவிட, அவ்விழுதுகளைப் பற்றிப் பலர் மேலே ஏறி வந்து அவ் வன்னத்தையும், அதைச் சேர்ந்த பிற அன்னங்களையும் பிடித்துக்கொண்டனர். தாழ்ந்த காக்கைக்கு இடம் விட்டமையின், உயர்ந்த அன்னத்துக்குத் துன்பம் வந்தமை காண்க.

மனம்வேறு சொல்வேறு மன்னுதொழில் வேறு
வினைவேறு பட்டவர்பால் மேவும்—அனமே
மனமொன்று சொல்லொன்று வான்பொருளு மொன்றே
கனமொன்று மேலவர்தங் கண்.

(இ - ள்.) அனமே - அன்னம்போல்வாளே! வினை வேறு பட்டவர்பால்-ஒழுங்கற்ற செய்கையை உடைய கீழோரிடத்தில், மனம்வேறு சொல்வேறு மன்னுதொழில் வேறு மேவும்-மனமும் சொல்லும் செய்யுஞ் செய்கையும் வேறு வேறாயிருக்கும்; கனம் ஒன்று மேலவர்தங்கண்-பெருமை பொருந்திய பெரியாரிடத்தில், மனம் ஒன்று சொல் ஒன்று வான்பொருளும் ஒன்றே - மனமுஞ் சொல்லும் உயர்ந்த செயலும் ஒன்றேயாம்.

(க - து.) நினைவு சொற் செயல்கள் ஒத்து நிற்ப ஒவ்வொரு செயலையுஞ் செய்தல்வேண்டும்.

'மன்னு தொழில்' என்றது தமக்கு நேர்ந்த தொழிலென்பதற்கு. இச் செய்யுட் பொருள்,

கையொன்று செய்ய விழியொன்று நாடக்
கருத்தொன்றெண்ணப்

பொய்யொன்று வஞ்சக நாவொன்று பேசப்
புலால்கமழும்
மெய்யொன்று சாரச் செவியொன்று கேட்க
விரும்புமியான்
செய்கின்ற பூசையெவ் வாறுகொள் வாய்வினை
தீர்த்தவனே.

என்னும் பட்டினத்தடிகள் திருமொழியில் விளக்கமாகக் காணப்படும் (75)

கண்ணுக் கினிய சபைக்குமணி கற்றோனே
விண்ணுக் கினியமணி வெய்யோனே—வண்ணநறுஞ்
சந்த முலையாள் சயனத் தினியமணி
மைந்தன் மனைக்கு மணி.

(இ - ள்.) விண்ணுக்கு இனிய மணி வெய்யோனே-வானத்துக்கு நல்ல மணி கதிரவனே, (அதுபோல) கண்ணுக்கு இனிய சபைக்கு மணி கற்றோனே-பார்வைக்கு அழகாயுள்ள அவைக்களத்துக்கு நல்ல மணி படித்தவனே, சயனத்து இனிய மணி நறு சந்த வண்ண முலையாள்-படுக்கைக்கு இனிமையான மணி நல்ல மணம் பொருந்திய சந்தனத்தை அணிந்த அழகிய கொங்கையினையுடைய மனைவியாம், மனைக்கு மணி மைந்தன்-வீட்டிக்கு மணி மகன்.

(க - து.) அவைக்குக் கற்றோரும், அறைக்கு மனையாளும், மனைக்கு மைந்தனுமே அழகு செய்வார்.

ஏகாரங்கள் - பிரிநிலை. மணி மணி என்பன முதன்மை குறித்தன. கண்ணுக்கு இனிய என்பதை அவைக்கும், அங்கு நின்ற கற்றோனுக்குங் கொள்க. இங்குக் கண் என்பது அறிவாகிய அகக் கண்ணையுங் கருதியபடியாகும். 'விண்ணுக் கினியமணி வெய்யோனே' என்பதை உவமையாகக் கொள்க. 'வண்ணம்' என்பது முலைக்கும் 'நறு' என்பது சாந்துக்கும் அடைமொழிகள். இனிய என்பதை மைந்தனாகிய மணிக்குங் கூட்டுக. (76)

பாலினீர் தீயணுகப் பால்வெகுண்டு தீப்புகுந்து
மேலுநீர் கண்டமையும் மேன்மைபோல்—நூலினெறி

உற்றோ ரிடுக்கண் உயிர்கொடுத்தும் மாற்றுவரே
மற்றோர் புகல மதித்து.

(இ - ள்.) பாலின் நீர் தீ அணுக-பாலில் உள்ள நீரைத் தீ அணுகிச் சுட, பால் வெகுண்டு தீ புகுந்து-பால் சினந்து பொங்கி அத் தீயுட் புகுந்து அதனை அவித்து, மேலும் நீர் கண்டு அமையும் மேன்மைபோல்-பின்னும் நீரைக்கண்டு தன் சினம் அடங்கும் பெருமைபோல, நூலின் நெறி உற்றோர்-நூல் வழியே நடப்பவர்கள், இடுக்கண்-தம்மைச் சேர்ந்தவர்க்கு உண்டான துன்பத்தை, மற்றோர் புகல-பிறர் இதுவே தகுதியென்று புகழ்ந்து சொல்லுமாறு, மதித்து உயிர்கொடுத்தும் மாற்றுவர் - இதுவே நன்றாம் என்று எண்ணித் தம் உயிரைக் கொடுத்தும் மாற்றுவார்கள்.

(க - து.) தம்மை அடுத்தாரின் துன்பத்தை உயிர் கொடுத்தாயினுங் கற்றவர் காப்பாற்றுவர்.

வெகுண்டு புகுந்து அமையும் என்பனவெல்லாம் உருவக வினைகள்; 'நூலினெறி உற்றோ' ரென்பவர் கற்றோர். (77)

அந்தோ புரமெரித்த அண்ணலடி யார்பொருள்கள்
செந்தீ யினுங்கொடிய தீகண்டாய்—செந்தீயை
நீங்கிற் சுடாதே நெடுந்தூரம் போனாலும்
ஏங்கச் சுடுமே யிது.

(இ - ள்.) அந்தோ - ஐயோ! புரம் எரித்த அண்ணல் அடியார் பொருள்கள்-மூன்று பட்டினங்களையும் கொளுத்திவிட்ட பெருமை மிக்க நீப்பிழம்பாகிய சிவபிரான்ற னடியார் பொருள்கள், செம் தீயினும் கொடிய தீ கண்டாய்-சிவந்த நெருப்பைவிட இன்னுங் கொடுமையான நெருப்பென்று அறிவாயாக, (ஏனென்றால்), செம் தீயை நீங்கில் சுடாதே-அச் சிவந்த நெருப்பைவிட்டு நீங்கிவிட்டால் அத்தீச் சுடாதே, நெடுந்தூரம் போனாலும் இது ஏங்கச்சுடுமே - எவ்வளவு தொலைவுதான் மறைந்து சென்றாலும் அடியார் பொருள்களாகிய தீ ஏங்கித் துடிக்குமாறு சுட்டுவிடுமே!

(க - து.) அடியார் பொருள்களைக் கவர்தலாகாது.

புரமெரித்த அண்ணல் - புரமெரித்த பெருமையை யுடையான். அடியார் பொருள்களின் தீ மிகுதியைக் காட்டுதற்குச்

சிவபிரானை 'புரமெரித்த அண்ணல்' என்று விதந்தார். கண்டாய் என்பது, எளிதாக நினைத்திருந்த பொருளை அரிதென்று இடித்துரைத்தற்கண் வந்த முன்னிலை அசைச்சொல்; இது சிறிது பொருள் பயந்து நின்றது. அளவற்ற பிறவிகளை எடுத்து அப்பாற் சென்றாலும் அத் தீவிடாது என்பார். 'நெடுந்தூரம் போனாலும்' என்றார். ஏகாரங்கள் இரக்கங் குறித்தன. (78)

நிந்தையிலாத் தூயவரும் நிந்தையரைச் சேரிலவர்
நிந்தையது தம்மிடத்தே நிற்குமே—நிந்தைமிகு
தாலநிழற் கீழிருந்தான் றன்பா லருந்திடினும்
பாலதெனச் சொல்லுவரோ பார்.

(இ - ள்.) நிந்தை மிகு தால நிழல் கீழ் இருந்து ஆன் றன் பால் அருந்திடினும் பாலது எனச் சொல்லுவரோ-இழிவு மிகுந்த பனை மரத்தின் கீழ் அதன் நிழலில் உட்கார்ந்து ஆவின்பாலைக் குடித்தாலும் பிறர் அதனைப் பால் என்று சொல்லுவார்களோ, பார் - நீ அதனை நினைத்துப் பார்; (பாலென்று சொல்லாமற் கள்ளென்றே சொல்லுவார்கள்; அதுபோல) நிந்தை இலாத் தூயவரும் நிந்தையரைச் சேரில் அவர் நிந்தையது தம் இடத்தே நிற்கும்-இகழப்படாத மேன்மக்களும் இகழப்படுங் கீழ்மக்களைச் சேர்ந்தால் அக் கீழ்மக்களுக்குரிய பழிப்புரை தம்மிடமும் வந்து பொருந்துதற்கு ஏதுவாகும். (79)

(க - து.) கீழோருடைய தொடர்பே கூடாது.

பனைமரத்துக்கு வருமிடத்தில் இழிவு என்றும், மற்ற இடங்களிற் பழியென்றும் நிந்தைக்குப் பொருள்கொள்க.

சன்மமே பூரித்த காயத்தோர் தஞ்செவியில்
தன்மநூல் புக்காலுந் தங்காதே—சன்மமெலும்
புண்டு சமிக்குநா யூணவி னெய்யதனை
உண்டு சமிக்குமோ ஓது.

(இ - ள்.) சன்மம் எலும்பு உண்டு சமிக்கும் நாய்-தோலையும் எலும்பையும் உண்டு பசியாறும் நாய், ஆவின் நெய் ஊண் அதனை உண்டு சமிக்குமோ-ஆவின் நெய் கலந்த இனிய உணவினை உண்டு அமையுமோ, ஓது - நீ சொல்; (அதுபோல)

கன்மமே பூரித்த காயத்தோர்தம் செவியில்-வினையே மிகுந்து அதனாலுருவான உடம்பையுடைய தீயோரின் காதிலே, தன்ம நூல் புக்காலும் தங்காது - அறநூற் கருத்து அறிவுறுக்கப்பட்டாலும் அஃது அவரிடத்தில் நில்லாது.

(க - து.) தீயோர்க்கு அறவுரைகள் கூறுதலால் ஏதும் பயனில்லை.

கருமம் தருமம், கன்மம் தன்மம் என்றாயினாற்போல; சருமம் என்பதுஞ் சன்மம் என்றாயிற்று. 'ஊனாவினெய்' என்பதை 'ஆவின் நெய்யூண்' என்று மாற்றுக. (80)

பெண்ணுதவுங் காலைப் பிதாவிரும்பும் வித்தையே
எண்ணில் தனம்விரும்பும் ஈன்றதாய்—நண்ணிடையிற்
கூறியுநற் சுற்றங் குலம்விரும்புங் காந்தனது
பேரழகு தான்விரும்பும் பெண்.

(இ - ள்.) பெண் உதவுங் காலை-பெண்ணை மணஞ்செய்து ஒருவனுக்குக் கொடுக்கும்போது, பிதா வித்தையே விரும்பும்-அப் பெண்ணின் தந்தை மணமகனின் கல்வியையே விரும்புவான், ஈன்ற தாய்-பெற்ற தாயார், எண்ணில் தனம் விரும்பும்-மிகுந்த பணத்தையே விரும்புவாள், நண் இடையில் கூறிய நல் சுற்றம் குலம் விரும்பும்-நேரும் இடைக்காலத்திற் பொருந்தியிருந்த நல்ல சுற்றத்தவர் சிறந்த குலத்தையே விரும்புவார்கள், பெண் காந்தனது பேர் அழகுதான் விரும்பும்-மணமகளாகிய அப்பெண் தன் கணவனுடைய பேரழகையே விரும்புவாள்.

(க-து.) பெண்ணும் அப்பெண்ணுக்கு உறவினராவாரும் பலவாறு நினைத்தலின், இயற்கைக் காதலொழுக்கங் கண்டு அவட்குத் திருமணஞ் செய்தல் வேண்டும்.

இச் செய்யுளினாற் றந்தையாயினானுக்குந் தாயானாளுக்குஞ் சுற்றமாவாருக்கும் மணப்பெண்ணாவாளுக்கும் உள்ள உள்ளத்தின் இயல்பு புலப்பட்டமை காண்க. ஒருவனுக்குப் பெண்ணை மணஞ்செய்து கொடுத்தல் ஓர் உதவுதலாமாதலின், 'உதவுங் காலை' எனப்பட்டது. (81)

காந்துநறும் புண்ணைக் கலந்தீ விரும்புமே
வேந்தர் தனமே விரும்புவார்—சாந்தநூல்
கல்லார் பகைசேர் கலகம் விரும்புவார்
நல்லார் விரும்புவார் நட்பு.

(இ-ள்.) ஈ காந்தும் நறு புண்ணைக் கலந்து விரும்பும்-ஈக்கள் காந்துகின்ற நாற்றமுடைய புண்ணையே சேர்ந்து அதனை விரும்பும். வேந்தர் தனமே விரும்புவார்-அரசர்கள் செல்வத்தையே விரும்புவார்கள், (அதுபோல) சாந்தநூல் கல்லார் பகைசேர் கலகம் விரும்புவார்-அடக்கந் தரக்கூடிய அருள் நூல்களைப் படியாதவர்கள் பகையை உண்டாக்குகின்ற கலகத்தையே விரும்புவார்கள், நல்லார் நட்பு விரும்புவார்-அவ்வறிவுநூல் கற்ற நல்லவர்கள் இணக்கத்தையே விரும்புவார்கள்.

(க-து.) கெட்டவர்கள் பகைமூட்டுவதிலும் நல்லவர்கள் நட்புக் கூட்டுதலிலும் மகிழ்ச்சி யுடையவராவர்.

முதல் ஏகாரத்தைப் பிரித்திசைக்க; சாந்தநூல் என்ற தன் அருமை நினைந்து இன்புறுதற் குரியது. (82)

கற்றைக் குழலார் கவினெல்லாம் ஓர்மகவைப்
பெற்றக் கணமே பிரியுமே—கற்றருளை
வேட்ட பெரியோர் பெருமையெல்லாம் வேறொன்றைக்
கேட்ட பொழுதே கெடும்.

(இ-ள்.) கற்றைக் குழலார் கவின் எல்லாம்-அடர்த்தியான மயிரையுடைய பெண்களின் அழகெல்லாம், ஓர் மகவைப் பெற்ற கணமே பிரியும்-ஒரு குழந்தையைப்பெற்ற அந்த நொடியே நீங்கிவிடும், (அதுபோல) கற்று அருளை வேட்ட பெரியார் பெருமை எலாம்-நல்ல நூல்களைப் படித்துணர்ந்து கடவுளருளைப் பெற விரும்பிய பெரியவர்களின் பெருமைகளெல்லாம், வேறு ஒன்றைக் கேட்டபொழுதே கெடும்-அவ்வருளின்பத்துக்கு வேறான உலக இன்பங்களைப் பற்றிக் கேள்விப்பட்ட அவ்வளவிலேயே ஒழிந்துவிடும்.

(க-து.) ஒரு நெறிய மனமில்லாதவர்களுக்குக் கடவுளருள் உண்டாகாது.

நரம்பிளக்கத்தால் உடம்பின் வலிகுன்றிக் கட்டற்று இளமை கெட்டு அழகழியும் பெண்டிர்க்கு உடம்பு இங்ஙனம் மாறியது போலவே, ஆன்றோரும் உலக இன்பங்களை விரும்பினோர்களாயின், அவர்கள் அறிவும் நிலைகுலைந்து தடுமாறிக் கட்டற்று உரங்கெட்டு உறுதி குறைந்து பெருமை கெடும். அவர்கள் அச் சிற்றின்பங்களைச் சிறிது நினைக்கவும் ஆகாதென்பார், 'கேட்டபொழுதே கெடும்' என்றார். இறையருளை வேண்டுவார் வேறு நினைவின்றி அவ்வருட் பெருக்கிலேயே படிந்திருத்தல் வேண்டுமென்று அவர்கட்கு விழிப்புக் கூறியபடியாகும். அப்பரடிகள்.

> "புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என்மனத்தே
> வழுவாதிருக்க வரந்தரல் வேண்டும்."
>
> (திருப்பாதிரிப்புலியூர்த் தேவாரம்)

என்று குறையிரப்பாரானார்கள். (83)

சீலங் குலமடியாள் தீண்டிற் கெடுங்கணிகை
ஆலிங் கனந்தனநா சம்மாகும்— நூலிழந்த
வல்லிதழு வக்குறையும் வாழ்நாள் பிறர்தாரம்
புல்லினர்க்கெல் லாநலமும் போம்.

(இ. ள்.) அடியாள் தீண்டில் சீலம் குலம் கெடும்-பணிப் பெண்ணைச் சேர்ந்தால் ஒழுக்கமுங் குலமுங் கெட்டுப் போகும்; கணிகை ஆலிங்கனம் தனம் நாசம் ஆகும்-வேசையரின் சேர்க்கையால் செல்வம் அழிந்து போகும், நூல் இழந்த வல்லி தழுவ வாழ்நாள் குறையும்-தாலி நீங்கிய கைம்பெண்களைச் சேர்ந்தால் வாழ்நாள் (ஆயுசு) குறையும். பிறர் தாரம் புல்லினர்க்கு எல்லா நலமும் போம்-பிறர் மனைவியரைச் சேர்ந்தவர்களுக்கு இங்குக் கூறிய சீலம் குலம் செல்வம் வாழ்நாள் என்பவைகளும் பிறவும் ஆகிய எல்லா நலங்களும் ஒழிந்துபோம்.

(க - து.) பணிப்பெண், கணிகை, கைம்பெண், பிறன் மனைவி என்பாரைச் சேர்தலாகாது.

அடியாள் தாழ்ந்த கூட்டுறவுகள் உடையவளாதலின் அவளைத் தீண்டில் ஒழுக்கமுஞ் சுற்றமுங் கெடுமென்றும், கணிகை

கள் பொருட்பெண்டிராதலால் அவரைச் சேர்ந்தவர் பொருளிழந்து போவரென்றும், நூலிழந்தவல்லி கணவனிழந்தவளாதலால் அவள் கணவனுக்கு வாழ்நாள் குறைந்தது போலவே அவளைச் சேர்ந்தவர்க்கும் வாழ்நாள் குறையுமென்றுங் கூறினாரென்க. பிறன் மனைவியைச் சேர்வது அவள் வாழ்க்கையை அழிப்பது போலுமாதலின், அங்ஙனஞ் சேர்ந்து அவள் வாழ்க்கையின் நலங்களைக் கெடுத்த தமக்கும் தம் வாழ்நலமெல்லாம் போமென்றார். பிறன்மனை நயந்து தன் வாழ்நலன் கெடுதலை நாயனார்,

"நலக்குரியார் யாரெனின் நாமநீர் வைப்பில்
பிறர்க்குரியாள் தோள்தோயா தார். (பிறனில் விழையாமை,9)
"விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரின்
தீமை புரிந்தொழுகு வார்" (பிறனில் விழையாமை, 3)

என்று கூறியருளினமை காண்க. (84)

சத்தியமெக் காலுஞ் சனவிருத்த மாகுமே
எத்தியபொய் யார்க்கும் இதமாகும்—நத்தியபால்
வீடுதொறுஞ் சென்று விலையாம் மதுவிருந்த
வீடுதனி லேவிலையா மே.

(இ - ள்.) நத்தியபால் வீடுதொறும் சென்று விலையாம் - உடம்பை வளர்க்கின்ற ஆவின்பால் வீடு வீடாய்ப் போய் விலையாகும், மது இருந்த வீடுதனில் விலையாம் - உடம்பைக் கெடுக்கும் இழிவான கள் தான் இருக்குங் குடிசையிலேயே விலையாய் விடும், (இதனாற் பாலுக்குத் தாழ்வுங் கள்ளுக்கு உயர்வும் வந்துவிடமாட்டா; அதுபோலவே) சத்தியம் எக்காலும் சனவிருத்தமாகும்-எல்லாரையும் தெளிவிக்கும் உயர்வான உண்மைத் தன்மையென்பது கீழ்மக்களுக்கு வெறுப்பாகும். எத்திய பொய் யார்க்கும் இதம் ஆகும்-எல்லாரையும் மயக்குகின்ற பொய் அக் கீழ்மக்கட்கு விருப்பாகும். (இதனால் மெய்க்குத் தாழ்வும் பொய்க்கு உயர்வும் உண்டாகமாட்டா என்பது.)

(க. - து.) கீழ்மக்கள் பலரால் இழிக்கப்படுவது கண்டு, தம் உயிர்க்கு உறுதிபயக்கும் உண்மையைக் கைவிடலாகாது.

சனம் என்பதும், மது என்பதும் தம் சொற்பொருள்களாலேயே கீழ்மக்களையுங் கள்ளையும் முறையே உணர்த்தின.

என்னை? கீழ் மக்களே உலகத்தில் மிகுந்தவராதலாலும், மயக்கம் என்னும் பொருளுடைமையாலும் என்பது. வீடுதோறுஞ் சென்று விலையாதலும் இருந்த வீட்டிலேயே விலையாதலும், மக்கள் பாராட்டாமைக்கும் பாராட்டுதற்கும் எடுத்துக் காட்டப்பட்டன. (85)

நல்லொழுக்க மில்லா ரிடஞ்சேர்ந்த நல்லோர்க்கு
நல்லொழுக்க மில்லாச்சொல் நண்ணுமே—கொல்லும்
பாம்பெனவுன் னுரோ பழுதையே யானாலுந் [விடப்
தூம்பமரும் புற்றடுத்தாற் சொல்.

(இ - ள்.) தூம்பு அமரும் புற்று அடுத்தால் - சந்துகள் பொருந்திய புற்றுக்குப் பக்கத்திற் கிடக்குமானால், பழுதையே ஆனாலும் - அங்ஙனங் கிடப்பது பழுதைக் கயிறே யானாலும், கொல்லும் விடப்பாம்பு என உன்னுரோ சொல்-கொல்லக்கூடிய நஞ்சையுடைய பாம்பு என்று அதனைச் சொல்லமாட்டார்களோ நீ சொல், (அதுபோல) நல் ஒழுக்கம் இல்லார் இடம் சேர்ந்த நல்லோர்க்கும் - நல்ல நடக்கைகள் இல்லாத தீயோரிடத்தைச் சேர்ந்த நல்லவர்களுக்கும், நல் ஒழுக்கம் இல்லாச் சொல் நண்ணும்-பழிச்சொல்லே வந்து சேரும்.

(க - து.) தீயவரிடத்தைச் சார்ந்து நல்லொழுக்கத்திலேயே நின்றாராயினும், நல்லோர்க்குப் பொல்லாப் பெயரே உண்டாகும்.

ஏகாரத்தைப் பிரித்துக் கூட்டுக. இப்பொருளுடைய செய்யுளொன்று முன்னும் வந்தது (79). தூம்பு - உட்டுளைப் பொருள்; இதனை,

"வாயிலு முட்டுளைப் பொருளு மூங்கிலு
மரக்காலு மதகுந் தூம்பென லாகும்"

என்னும் பிங்கலந்தையிற் (3669) காண்க. அமரும் - இங்கே பொருந்திய என்றற்கு. (86)

வாக்குநயத் தாலன்றிக் கற்றவரை மற்றவரை
ஆக்கைநயத் தாலறிய லாகாதே—காக்கையொடு
நீலச் சிறுகுயிலை நீடிசையா லன்றியே
கோலத் தறிவருமோ கூறு.

(இ - ள்.) காக்கையொடு நீலச் சிறு குயிலை - காக்கையையும் அதைப்போலவே கருநிறமுடைய சிறிய குயிலையும், நீடு இசையால் அன்றி - இனிமை மிக்க இசைக்குரலால் அல்லாமல், கோலத்து அறிவருமோ கூறு - உருவத்தினால் அவற்றின் பெருமையை அறியக் கூடுமோ நீ சொல், (அவற்றின் பெருமையை எப்படி உருவத்தால் அறியமுடியாதோ, அதைப் போலவே) கற்றவரை மற்றவரை - படித்த பெரியவர்களையும் அங்ஙனம் படியாத மற்றவர்களையும், வாக்கு நயத்தால் அன்றி - அவரவர்கள் பேச்சின் இனிமையினாலல்லாமல், ஆக்கை நயத்தால் அறியலாகாதே - உடம்பழகினால் அறிய முடியாது.

(க - து.) கற்றாரையுங் கல்லாதாரையும் உடல் வளத்தால் மதித்தலாகாது.

உலக மக்களில் கற்றவர் இவர் கல்லாதவர் இவர் என்று அறியும் முறை கூறிற்று. அஃது உடலாலன்று உரையால் அறிக வென்பது. இச்செய்யுளில் உவமானத்தாலும், உவமேயத்தாலும் அறியப்படுங் கருத்துக்கள் இரண்டு உள; 'காக்கையொடு நீலச் சிறு குயில்' என்பதில் கருநிறக் காக்கையும் நீலநிறக் குயிலும் ஒரே அழகுடையன ஆயினும் அவ் வுடலொற்றுமையினாலேயே அவற்றின் பெருமையை அறிவதற்கில்லையாதலின், கற்றாருடம்பைப்போலவே கல்லாதாருடம்பு அழகாயிருப்பினும் அஃது ஒன்றிலேயே அவரைக் கற்றாரென்று மதித்தற்கில்லை என்பது விளங்கும். இவ்வுவமையிற் பெறப்பட்ட கருத்து, உடலொப்புமையினாலேயே பெருமை சிறுமைகளை அறிய முடியாதென்பது. இனி 'ஆக்கை நயத்தால் ஆகாதே' என்பதில், கல்லாதாருடம்பு கற்றாருடம்பைவிட இன்னும் அழகாயிருந்தாலும், அவ்வுடம்பழகினாலேயே அவர் கற்றாரை விடப் பெருமையானவர் என்று கொள்ளுதற்கில்லை என்பது புலப்படுகின்றது. இவ்வுவமேயத்தாற் பெறப்பட்ட கருத்து உடலின் உயர்வினாலேயே பெருமை சிறுமைகளை அறிய முடியாதென்பது. 'கற்றோர் உடல்சிறிய ரென்றிருக்க வேண்டாம்' (வாக்குண்டாம், 12) என்பதும் இங்கு நினைவு கூர்தற்குரியது.

ஆசையெனும் பாசத்தா லாடவர்தஞ் சிந்தைதனை
வீசுமனை யாந்தறியில் வீழ்த்தியே—மாசுபுரி

மாயா மனைவியரா மக்கள் மகவென்னும்
நாயாற் கடிப்பித்தல் நாடு.

(இ - ள்.) மாசு புரி மாயா மனைவியர் - குற்றஞ் செய்யும் மாயையோராகிய தீய மனைவிமார்கள், ஆசை எனும் பாசத்தால் ஆடவர்தம் சிந்தைதனை - பெண்ணாசை என்னுங் கயிற்றினால் ஆண்மக்களின் நெஞ்சமாகிய விலங்குகளை, வீசு மனையாம் தறியில் வீழ்த்தியே - பெரிய இல்வாழ்க்கையென்னுந் தூணிற் கட்டி, மக்கள் மகவு என்னும் நாயால் கடிப்பித்தல் - குழந்தை குட்டிகள் என்னும் நாய்களாற் கடிக்கும்படி செய்தலை, நாடு - நீ நினைப்பாயாக, ஆ ஈ தென்ன கொடுமை!

(க - து.) அருள்வழி நின்று குடும்பங்களை நடத்தல் வேண்டும்.

இச்செய்யுளுருவகம் அழகியது; இஃது இறைவனருள் கொண்டு அதன் வழி நின்று நடத்தாமல், வெறுங் காமவிருப்பங் கொண்டு அதன்வழி நின்று நடத்தப்படுங் குடும்ப நிலை கூறிற்று. ஆண்மக்களின் மலவுணர்ச்சியினைப் பெண்மக்கள்மே லேற்றி உரைத்ததென்று கொள்க. (88)

தானறிந்தோ ருக்குதவி தன்னா லமையுமெனில்
தானுவந் தீதல் தலையாமே—ஆனதனாற்
சொன்னாற் புரிதலிடை சொல்லியும்பன் னாள்மறுத்துப்
பின்னாட் புரிவதுவே பின்.

(இ - ள்.) தான் அறிந்தோருக்கு - தன்னோடு பழகிய நண்பர்களுக்கு, உதவி தன்னால் அமையும் எனில் - தன்னால் ஏதேனும் உதவி செய்யக் கூடுமானால், தானே உவந்து ஈதல் தலையாம் - அவர் கேளாமுன் தானே மகிழ்ந்து கொடுத்தல் முதலாகும், ஆனதனால் - அது முதலானதனால், சொன்னால் புரிதல் இடை - அவர் கேட்ட பின்பு அது செய்தல் இடையாகும், சொல்லியும் பல் நாள் மறுத்துப் பின்னாள் புரிவது பின்- அவர்கள் கேட்டுங்கூடப் பலநாட்கள் ஆகட்டும் ஆகட்டும் என்று செய்யாமலே நாள் தள்ளிக்கொண்டு வந்து அதன்பின் ஒருநாள் செய்துபோடுவது கடையாகும்.

(க - து.) இல்லாதவர்களுக்கு அவர்கள் கேளாமுன் தன்னால் இயல்வதைத் தருவது நன்று.

முதல் ஏகாரத்தைப் பிரித்துக் கூட்டுக: இன்னென்று அசை. தான் அறிந்தோர்க்கு என்பதைத் தன்னைத் தெரிந்து கொண்டவர்களுக்கு என்றும் பொருட்படுத்தலாம். அன்றித் 'தன்னால் இதுபோது இல்லாதவர்கள் என்று தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கு' என்றலும் ஒன்று. பின்னாற் சொன்னால் என்றும் சொல்லியும் என்றும் வருதலின், முதலிற் சொல்லாமலே அதாவது கேளாமலே என்பது வருவித்துக் கொள்ளப் பட்டது. மறுத்து என்பது செயலின்மேல் நின்றது.

உற்ற மறையகத்தி னுய்க்குமவ னுத்தமனே
மற்று மறைபகர்வோன் மத்திமனே—முற்றிழையே
அத்த முறலாற் புகல்வா னதமனென
வித்தகநூ லோதும் விரித்து.

(இ - ள்.) முற்று இழையே - முடிந்த ஓவிய வேலைகள் நிரம்பிய நகைகளை அணிந்த பெண்ணே, உற்ற மறை அகத்தின் உய்க்குமவன் உத்தமன் - செவியிலே வந்து பொருந்திய பிறருடைய மறைபொருள்களை (இரகசியங்களை) வெளியே விடாமல் நெஞ்சத்துட் செலுத்துபவன் தலையானவன், மற்று அம் மறை பகர்வோன் மத்திமன் - அவ்வாறன்றி அம் மறை பொருளை வெளியே சொல்லுபவன் இடைப்பட்டவன், அத்தம் உறலால் புகல்வான் அதமன் - பணம் கிடைக்கின்றது என்று அதனால் அம் மறைபொருளைப் பிறருக்குச் சொல்பவன் கடைப் பட்டவன், என - என்று, வித்தக நூல் விரித்து ஓதும் - அறிவு நூல் விரித்துச் சொல்லும்.

(க - து.) மறை பொருள்களை வெளியிடலாகாது.

மற்று - வினைமாற்று. தலையானவன், கேட்ட மறையை வெளியே செலுத்தாது உள்ளே செலுத்தினோன் என்க. அதாவது நெஞ்சத்தே அடக்கிவிட்டவன் என்பது. உய்த்தல் செலுத்தலுக்கு வருதலைக்,

"கொலையுடை நெடுங்கூர் வாளி
கோடிகோ டிகள்நின்று உய்ப்ப" (கந்தபு-சிங்கமுகா-192)

என்பதிற் காண்க. உற்ற மறை என்றமையால், தானாகவும் அம் மறைகளைக் கேட்க முயலலாகாது என்பது பெறப்பட்டது. முற்றிழை - முடிந்த தொழிலையுடைய இழை; தலைமையான தொழிலையுடைய இழை என்பது. இதற்குத் தொழில் முடிந்த இழை என்றும் உரை கூறுப. தொழில் முடியாத இழைகள் இருக்குமென்பது கூடாமையால், அங்ஙனமொன்று கூறுதலிற் பொருட்பேறின்றாம். அத்தம் - அர்த்தம் என்னும் வடசொல்லின் திரிபு; அது செல்வம். (90)

உத்தமர்தா மீயுமிடத் தோங்குபனை போல்வரே
மத்திமர்தாந் தெங்குதனை மானுவரே—முத்தலரும்
ஆங்கமுகு போல்வா ரதம ரவர்களே
தேங்கதலி யும்போல்வார் தேர்ந்து.

(இ - ள்.) தேர்ந்து ஈயுமிடத்து உத்தமர் ஓங்குபனை போல்வர் - குறிப்பறிந்து கொடுக்கும்பொழுது தலையானவர்கள் ஓங்கி வளரும் பனைமரத்துக்கு ஒப்பாவார்கள், மத்திமர் தெங்குதனை மானுவர் - இடைப்பட்டவர்கள் அங்ஙனமொன்று கொடுப்பதில் தென்னைமரத்துக்கு ஒப்பாவார்கள். முத்து அலரும் கமுகு போல்வார் அதமர் - கடைப்பட்டவர்கள் முத்துப்போற் பூக்கும் பாக்கு மரத்தைப் போல்வார்கள், அவர்களே தேம் கதலியும் போல்வர் - அக் கடையானவர்களே இனிய பழங்களைத் தரும் வாழை மரத்தையும் போல்வார்கள்.

(க - து.) பனைமரத்தைப்போற் பிறர்க்கு உதவுதல் வேண்டும்.

நீரூற்றிப் பாதுகாவாம லிருக்கும்போதே பனைமரம் எல்லாங் கொடுத்து எல்லாவற்றிற்கும் மிகவும் பயன்படுதலால், முன்னால் உதவி ஏதுஞ் செய்யாதார்க்கும் போதுமான படி கொடுத்துப் பேருதவி செய்யுந் தலையான மக்கட்கு அஃது உவமையாயிற்று. தெங்கோ, சிறிதுகாலம் நீரூற்றிப் பாதுகாத்த பின்னரே ஓங்கி வளர்ந்து, அங்ஙனம் பாதுகாத்தாலுங் கூடப், பனைமரத்தைப்போல அவ்வளவு முழு உதவி செய்யாது சிறு உதவியே செய்தலால், முன்னுதவி செய்து கேட்ட பிறகுஞ் சிறிது கொடுத்துதவும் இடைப்பட்டவர்க்கு அஃது உவமையாயிற்று. பனைமரம் கொடுக்குங் கிழங்கு, சாறு,

சோறு, ஓலை, செதிள், விறகு, காழ்த்த கட்டை முதலியன தென்னைமரம் தருதலில்லை. பனந்தோப்பு ஒன்றே கொண்டும் மக்கள் உயிர்வாழலாம். ஆனால், தென்னையை வைத்துக் கொண்டு அங்ஙனம் உயிர்வாழ்தல் இயலாது. இனிக் கமுக மரமோ என்றால், தென்னையைவிட மிகுந்தகாலம் பாதுகாத்தா லல்லாமற் பயன் தராது. அங்ஙனந் தரும் அப் பயனும் ஏதோ ஒன்றுக்கே பயன்படக்கூடிய மிகச் சிறு பயனே யாம். ஆகவே முன்னுதவி மிகச் செய்து கேட்டாலும் நீண்டநாட் கழித்து மிகச் சிறிதே உதவி செய்யும் அழுக்கர்கள் அதற்கு நிகரானூர் கள். அதோடு கூட அவர்கள் ஒரு முறைக்குமேல் மறுமுறை எவ்வளவு கேட்டாலுந் தரார்களாதலால், அங்ஙனமே ஒரு முறைக்கு மேல் மறு முறை ஈனுத வாழைமரமும் அவர்க்கு உவமையாயிற்று. மானுவர் - ஒப்பார். (91)

எல்லோர் தமக்கு மினிதுதவ லன்றியே
நல்லோர் தமக்குதவி நாடாரே—வல்லதரு
நாமநிதி மேகம் நயந்துதவ லன்றியே
தாமுதவி நாடுமோ சாற்று.

(இ - ள்.) வல்ல தரு-விரும்பும் பொருள்களைக் கொடுக்க வல்ல தேவதாரு என்னும் மரமும், நாம நிதி-பெருமையுடைய சங்கநிதி பதுமநிதிகளும், மேகம்-மேகமும், நயந்து உதவல் அன்றியே-பிறர்க்குத் தாம் விரும்பி உதவுதலல்லாமல், தாமுதவி நாடுமோ-தாம் அவர்களிடமிருந்து எதிர் உதவி ஏதேனும் விரும்புமோ, சாற்று-நீ சொல், (அதுபோல); நல்லோர் எல்லோர் தமக்கும் இனிது உதவல் அன்றியே தமக்கு உதவி நாடார்-நல்ல வர்களாயிருப்பவர்கள் பிறரெல்லார்க்கும் நன்றாய் உதவுவதல்லா மல் அவர்களிடமிருந்து தமக்கோர் எதிர் உதவி வேண்டமாட் டார்கள்.

(க - து.) எதிர் உதவி நாடாமல் உதவி செய்தல் வேண்டும்.

தருவும் நிதியுந் தேவேந்திரனுக்கு உரிமைப் பொருள் களாய் விண்ணுட்டில் இருக்குமென்ப, நாமம்-புகழ். “நாம நல்லுரை நாட்டுது மென்று” (15 : 26) என்பது சிலப்பதி காரம். இனிது உதவல் - மகிழ்வோடு மகிழ்வு கொள்ளக் கொடுத்தல். இனிது, குறிப்பு வினையாலணையும் பெயருமாம். அஃதானல் நல்லது கொடுத்தல் என்று பொருள் செய்க. (92)

வெய்யோன் கிரண மிகச்சுடுமே வெய்யவனிற்
செய்யோன் கிரணமிகத் தீதாமே—வெய்யகதிர்
எல்லோன் கிரணத் தெரியினிலு மெண்ணமில்லார்
சொல்லே மிகவுஞ் சுடும்.

(இ - ள்.) வெய்யோன் கிரணம் மிகச்சுடும்-கதிரவனுடைய வெயிலே மிகவுஞ் சுடும், வெய்யவனின் செய்யோன் கிரணம் மிகத் தீது ஆம் - கதிரவனைவிட நெருப்பின் சுடர் இன்னுங் கொடியதாகும், வெய்யகதிர் எல்லோன் கிரணத்து எரியினிலும்-கொடிய சூட்டுக் கதிர்களை உடைய கதிரவன் வெயிலையும் நெருப்பின் சுடரையும்விட, எண்ணம் இல்லார் சொல்லே மிகவும் சுடும்-நல்ல எண்ணம் இல்லாத தீயோர் கூறுந் தீய சொல்லே மிகவுஞ்சுடும்.

(க - து.) தீயோர் சொல் சுடுவதுபோல உலகத்தில் எதுவுமே சுடாது.

செய்யோன் - நெருப்பு; அது சிவந்த நிறமுடையதாதலின், அப்பெயர் பெற்றது. எல் - ஒளி, அஃதுடைய கதிரவன் எல்லோன் எனப்பட்டான். எரிதலின் நெருப்புக்கு எரி என்றார். (93)

திங்க ளமிர்த கிரணமிகச் சீதளமே
திங்களினுஞ் சந்தனமே சீதளமாம்—இங்கிவற்றின்
அன்பறிவு சாந்தம் அருளுடையார் நல்வசனம்
இன்பமிகுஞ் சீதளமா மே.

(இ - ள்.) இங்கு-இவ்வுலகத்தில், திங்கள் அமிர்த கிரணம் மிகச் சீதளம் ஆம்-நிலவின் அமிழ்து போன்ற கதிர்கள் மிகவும் குளிர்ச்சியானவை, திங்களினும், சந்தனமே சீதளம் ஆம்-அந்த நிலவின் ஒளியைவிடச் சந்தனமே இன்னுங் குளிர்ச்சியுடையதாகும், இவற்றின் அன்பு அறிவு சாந்தம் அருள் உடையார் நல்வசனம் இன்பம் மிகும் சீதளம் ஆம்-இவ்விரண்டையும் விட அன்பும் அறிவும் பொறுமையும் அருளும் உடைய நல்லவர்களின் நல்ல சொல் இன்பம் பெருகக்கூடிய மிக்க குளிர்ச்சியினையுடையதாகும்.

(க - து.) நல்லோர் சொல்லைவிடக் குளிர்ந்தது உலகத்தில் வேறில்லை.

திங்கள் கிரணத்துக்கு அமிர்தமென்றமையால் நல்லோர் வசனத்துக்கு இன்பமென்றார். சந்தனம் குளிர்ச்சியான தென்பதைச்,

'சந்தனஞ்சொரி தண்கதிர்த்திங்கள்' (மண்மக, 206)
என்னுஞ் சிந்தாமணியிற் காண்க. (94)

சீராம்வெண் ணீற்றுத் திரிபுண் டரம்விடுத்தே
பேரான முத்தி பெறவிரும்பல்—ஆரமிர்த
சஞ்சீ வியைவிடுத்தே சாகா திருப்பதற்கு
நஞ்சே புசித்ததுபோ லாகுமே.

(இ - ள்.) சீர் ஆம் வெண்ணீற்றுத் திரிபுண்டரம் விடுத்து-சிறப்பான திருவெண்ணீற்றினால் நெற்றிக்குத் திருக்குறி யிடுதலை விட்டுவிட்டு, பேரான முத்தி பெறவிரும்பல்-மேன்மையாகிய வீடுபேற்றை அடைய ஆசைப்படுதல், ஆர் அமிர்த சஞ்சீவியை விடுத்து-அருமையான அமிர்தமென்னும் மருந்தை விட்டுவிட்டு, சாகாதிருப்பதற்கு நஞ்சே புசித்தது போல்-சாவாமல் இருப்பதற்கு நஞ்சையே உண்டதுபோ லாகும்; நாடு - நீ ஆராய்ந்து பார்.

(க - து.) கடவுளை வழிபட்டு வீடுபேறடைவதற்குச் சைவமூன் திருநீறுமே தக்கனவாம்.

உலகத்திலே மக்கட்பிறப்பிற் பிறந்ததன் நோக்கம் மலத்தை நீக்கிக்கொள்ளுதலேயா மாதலால், அம் மலம் நீறுதலை உணர்த்துந் திருநீறு, அங்ஙனமொன்றை யுணர்த்தாத மற்றத் திருக்குறிகளைவிடச் சிறப்பாயிற்று. திரிபுண்டரம்-உயிர்களுக்குற்ற மூன்று மலங்களும் எரிக்கப்பட்டமைக்கு அறிகுறியாக நெற்றியில் மூன்று கோடாக இடப்படும் நீற்றுக்குறி. திருநீற்றொழுக்கத்தால் வீடடைதல் கூடுமென்பது,

'கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்வீரே யாமாகில்
தங்கா வினைகளுஞ் சாருஞ் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வரே'

என்னும் திருமந்திரத்தினால் துணியப்படும். அமிர்த சஞ்சீவினி என்றொரு சாவா மருந்துண்டென்ப. இச்செய்யுளால் நீற்றி னெறியின் உண்மையும், இச் செய்யுளாசிரியர்க்கு அதன்கண் உள்ள அன்பும் வெளிப்படும். (95)

செந்தா மரையிரவி சேருதயம் பார்க்குமே
சந்திரோத யம்பார்க்குந் தண்குமுதம்—கந்தமிகும்
பூவலரப் பார்க்கும் பொறிவண் டரனன்பர்
தேவரவைப் பார்ப்பர் தெளிந்து.

(இ - ள்.) செந்தாமரை இரவிசேர் உதயம் பார்க்கும்—சிவந்த தாமரை மலர்கள் கதிரவன் வந்து புறப்படுங் காலத்தை எதிர்பார்க்கும், சந்திரோதயம் பார்க்கும் தண் குமுதம்-குளிர்ச்சியான ஆம்பல் மலர் நிலவு புறப்படுதலை எதிர்பார்க்கும், கந்தம் மிகும் பூ அலரப் பார்க்கும் பொறிவண்டு - புள்ளிகளையுடைய வண்டுகள் மணம் மிகுந்த பூக்கள் மலர அதனைப் பார்க்கும், (அதுபோல) அரன் அன்பர் தெளிந்து தே வரவைப் பார்ப்பர் - சிவனடியார்கள் உண்மை உணர்ந்து சிவபெருமான் திருவருளையே எதிர்நோக்கிக் கிடப்பர்.

(க - து.) சிவனடியார்கள் கடவுளருளையே நோக்கி நிற்பார்கள்.

தெளிதல், இறைவனுக்கும் அவனல்லாத ஏனைப் பொருள்களுக்கும் உள்ள வேற்றுமை முதலியவற்றைத் தெளிதல். திங்களையுங் கதிரையும் அம்மையப்பராந் திருக்கோலத்துக்கும், அலர் பூவை அவர்கள் அருட்செய்கைக்கும் உள்ளுறை கூறி மகிழ்தலுமாம். (96)

வில்லமறு குக்கொவ்வா மென்மலர்கள் நால்வரெனும்
நல்லவன்பர் சொற்கொவ்வா நான்மறைகள்-மெல்லிநல்லா
ஆமந் திரமெவையு மைந்தெழுத்தை யொவ்வாவே [ய்
சோமசுந்த ரற்கென்றே சொல்.

(இ - ள்.) மெல்லிநல்லாய் - மெல்லிய நல்லியல்பினை யுடைய பெண்ணே, சோமசுந்தரற்கு - அம்மையப்பராய் விளங்கும் பேரழகராகிய சிவபெருமானுக்கு, மெல் மலர்கள்

வில்லம் அறுகுக்கு ஒவ்வா - மெல்லிய தன்மையுடைய எல்லாப் பூக்களும் வில்வத்துக்கும் அறுகுக்கும் இணையாகா, நான் மறைகள் நால்வரெனும் நல்லவன்பர் சொற்கு ஒவ்வா - இக்காலத்திற் கூறப்படும் நான்கு வேதங்களும் நால்வரென்று புகழ்ந்து சொல்லப்படுகின்ற நல்ல அன்பர்களாகிய திருஞானசம்பந்தப் பெருமான் முதலியவர்கள் அருளிய அருட்சொல்லாகிய தேவார திருவாசகங்கட்கு ஒப்பாகா, மந்திரம் எவையும் ஐந்தெழுத்தை ஒவ்வா - எவ்வகையான மந்திரங்களுந் திருவைந்தெழுத்தை ஒவ்வா.

(க - து.) சைவராவார் வில்வமும் அறுகுங்கொண்டு வழிபட்டுத் தேவார திருவாசகங்கள் ஓதி ஐந்தெழுத்து எண்ணிச் சிவபிரானை வணங்குதல் வேண்டும்.

வில்வம் அறுகுகளும், தேவார திருவாசகங்களும், ஐந்தெழுத்தும் சிவபிரான் வழிபாட்டிற்குச் சிறந்தவைகள் என்றபடி. மென்மலர்கள் என்பன, மல்லிகை முதலானவைகள் அவைகள் தமக்குள்ள இனிய மணத்தாலும் அழகாலும் மக்களால் விரும்பப்படுதலின், சிவபிரானுக்கு ஆகாவாயின. இக்காலத்து நான்மறைகள் என்று சொல்லப்படுபவை இருக்கு, எசுர், சாம, அதர்வண மென்பவைகள். அவைகள் முழுமுதற் கடவுளின் இலக்கணங்களுக்கு மாறுன உரைகளையும் உடைமையால், அம் முழுமுதற் கடவுளிலக்கணமொன்றே கொண்டு அதனை வழாது உரைக்குந் தேவார திருவாசகங்களுக்கு ஒவ்வாவாயின. நால்வர் திருஞான சம்பந்த நாயனுர், திருநாவுக்கரசு நாயனுர், சுந்தரமூர்த்தி நாயனுர், மாணிக்கவாசகப் பெருமான் என்பவர்கள். பிற மந்திரங்கள், காயத்திரி, அஷ்டாட்சர முதலியன. இருள் நிலையிற் கிடந்த உயிர்கள் சிவ நிலையை எய்துமளவும் இறைவன் செய்யும் அருட்செய்கைகளையும்ஒழுங்கான நெறிமுறைகளையும் அவ்வுயிர் கட்கு முறை முறையாகஉணர்த்தி அவற்றை வீடுபேறடைவிக்கும் பொருட்பேறு முதலியன அம்மந்திரங்கட் கில்லாமையின், அவை தாம் அவை தம்மையெல்லாம் ஒருங்கே உடைய திருவைந்தெழுத்துக்கு நிகராகாவாயின வென்றுரைப்ப. சொற்கு - ஆகுபெயர். (97)

கல்லார் பலர்கூடிக் காதலித்து வாழினு நூல்
வல்லா னொருவனையே மானுவரோ—அல்லாரும்

எண்ணிலா வான்மீ னிலகிடினும் வானகத்தோர்
வெண்ணிலா வாமோ விளம்பு.

(இ - ள்.) வான்அகத்து - வானத்தில்; அல் ஆரும் எண்ணிலா வான்மீன் இலகிடினும்-இரவிலே நிறையும் அளவில்லாத விண்மீன்கள் ஒன்றாய் விளங்கினாலும், ஓர் வெண்ணிலா ஆமோ-ஒரு வெண்ணிலாவுக்கு நிகராகுமோ, விளம்பு - நீ சொல்லு. (அதுபோல) கல்லார் பலர்கூடிக் காதலித்து வாழினும் - படியாத மூடர்கள் பலர் கூடி ஒருவரையொருவர் விரும்பி வாழ்ந்தாலும், நூல் வல்லான் ஒருவனை மானுவரோ - கல்வியில் வல்ல பெரியாரொருவருக்கு ஒப்பாவார்களோ? (ஒப்பாகமாட்டார்கள் என்றபடி.)

(க - து.) எதற்குங் கற்றார் கூட்டுறவு இன்றியமையாதது.

காதலித்து என்றமையின், உவமையில் ஒன்றாய் என்று வருவிக்கப்பட்டது. நூல் ஆகுபெயராய்க் கல்வியை உணர்த்தும். மானுதல் - ஒத்தல். அல் - இருட்டு. 'அல்லும் பகலும்' என்பது வழக்கு. உலக நிகழ்ச்சிகளெல்லாம் 'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே' என்றாற்போலக் கற்ற பெருமக்களின் நெஞ்சத்துறுதியில் அடங்குதலாலும், கல்லாதார் அவர் ஆட்ட ஆடுவோரேயன்றித் தாமே எதும் செய்யமாட்டாராதலாலும் இங்ஙனங் கூறினார். (98)

சந்தனத்தைச் சேர்தருவுந் தக்க மணங்கமழுஞ்
சந்தனத்தைச் சார்வேய் தழல்பற்ற—அந்தவனந்
தானுமச் சந்தனமுந் தன்னினமு மாள்வதன்றித்
தானுங் கெடச்சுடுமே தான்.

(இ - ள்.) சந்தனத்தைச் சேர்தருவும் தக்க மணம் கமழும் - சந்தன மரத்தை அடுத்துள்ள மரங்களும் (அச் சந்தன மரமேபோல அதன் தொடர்பினால்) நல்ல மணம் வீசும், சந்தனத்தைச் சார்வேய் தழல்பற்ற - (ஆனால் அச் சந்தனத்தைச் சேர்ந்துள்ள மூங்கில்கள் நெருப்புப்பற்றிக் கொள்ள, அந்த வனமும் - அந்தக் காடு முழுமையும், சந்தனமும் - மணமுள்ள அச் சந்தன மரமும், தன் இனமும் - தனக்கு இனமான மற்ற மூங்கில்களும், மாள்வதன்றி - எரிந்து பொசுங்கிக் கெடுவதல்லாமல்,

தானும் கெட - தானும் எரிந்து கெட்டுப்போம்படி, சுடும் - பற்றி எரியும்.

(க - து.) தீயோரை நெருங்கவொட்ட லாகாது.

நல்லவர்களைச் சேருகின்றவரிற் சிலர், எல்லார்க்கும் நன்மை விளைத்துத் தாமும் நல்லவராவர். ஆனால் அங்ஙனஞ் சேருகின்றவரில் வேறு சிலர் பிறர்க்குந் தமக்குந் தீங்கு தேடிக்கொள்வதோடு, பலர்க்கும் நன்மையாயிருக்கக்கூடிய, தாஞ் சேர்ந்த நல்லோரையுங் கெடுத்துவிடுவர் என்பது இதனால் உணர்த்தப் படும் பொருள். இச் செய்யுள் முற்றுவமையில் வந்தது. (99)

கங்கைநதி பாவம் சசிதாபம் கற்பகந்தான்
மங்க லுறும்வறுமை மாற்றுமே—துங்கமிகும்
இக்குணமோர் மூன்றும் பெரியோ ரிடஞ்சேரில்
அக்கணமே போமென் றறி.

(இ - ள்.) கங்கை நதி பாவம் - கங்கையாறு தீவினைகளையும், சசி தாபம் - திங்கள் வெப்பத்தையும், கற்பகம் மங்கல் உறும் வறுமை - கற்பகம் எனப்படும் மரம் எல்லா நலங்களையும் மங்கும்படி செய்யும் வறுமையையும், மாற்றும் - நீக்கும், இக்குணம் ஓர் மூன்றும் - தீயவையான வினை வெப்பம் வறுமை என்னும் இம் மூன்று தன்மைகளும், துங்கம் மிகும் பெரியோரிடம் சேரில் அக்கணமே போம் என்று அறி - உயர்வு மிக்க பெரியோரிடத்திற் சேர்ந்தால், சேர்ந்த அந்த விநாடியே ஒழிந்து போகுமென்று நீ அறிந்துகொள்.

(க - து.) இம்மை மறுமைப் பயன்களுக்குப் பெரியாரிணக்கமே வேண்டப்படுவதாம்.

கங்கை என்பது மயமலையின் பக்கலில் ஓடு மோராறு. இது பல மட்சாரங்களிலும் பச்சிலைச் சாரங்களிலும் ஊறி அப் பொருட்டன்மைகளை ஏற்று வருதலால், அந்நீரில் தலைமுழுகுவோர் செம்மையான உடம்பும் தெளிந்த அறிவும் பெற்று நல் வழியில் ஒழுகநேர்தலின், 'கங்கை நதி பாவம் மாற்றும்' என்றார். கதிரவனால் ஆன பகலின் வெம்மையை இரவின் நிலவு க்கும். கற்பகம் வேண்டியவற்றைத் தருமென்பது,

"வல்லதரு
நாமநிதி மேகம் நயந்துதவ லன்றியே
தாமுதவி நாடுமோ சாற்று" (செ - 92)

என்று இந்நூலில் முன்னும் உணர்த்தப்பட்டது. உறும், பிற வினைப் பொருள் தன் வினையின்கண் வந்தது; மங்குதலை உறுவிக்கும் வறுமை என்று கொள்க. பாவம் தாபம் வறுமை என்பவற்றிற்கு உம்மை விரிக்க. துங்கம் மிகும் என்பதைப் பெரியோர்க்கு அடைமொழியாக்கிக் கங்கை திங்கள் கற்பகம் என்பவற்றினும் உயர்வு மிக்க பெரியோர் என்று பொருளுரைக்க. துங்கமிகும் பெரியோர் என்பதில் துங்கமிகும் என்பது அம் மூன்று தன்மைகளும் நீக்கும் ஆற்றலையும், பெரியோர் என்பது அக்கணமே நீக்கும் ஆற்றலையும் அறிவிப்பனவாம். அங்ஙனமன்றிப், பெரியோரிடஞ் சேரில் அக்கணமே போவதோடு துங்கமும் மிகும் என்று கொள்ளினும் அமையும். இங்குப் பெரியோரெனப்படுவோர் திருவருளாற்றல் பெற்ற அடியாராவர். அவர் நினைத்தால் எல்லாம் உண்டாமாதலின், இம் மூன்றும் அக்கணமேபோம் என்றார். கங்கை நதி பாவம் மாற்றுமென்பது சமய வழியையும், சசிதாபம் மாற்றுமென்பது சிற்றின்ப நுகர்ச்சியையும், கற்பகந்தான் மங்கலுறும் வறுமை மாற்றுமென்பதுசெல்வ நிலையையும் உணர்த்தும். இவை முறையே அறம் இன்பம் பொருள் என்பன உணர்த்தியவாறென்க. இம்மூன்றினும் பெரியாரிணக்கம் சிறந்ததென்றலின் அவர் 'வீடு' என்னும் உறுதிப்பொருட் குரியா ரென்பதுந் தெளிந்துகொள்ளப்படும்.

"மூர்த்திதலம் தீர்த்தம் முறையாற் றொடங்கினர்க்கோர்
வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே"

என்று தாயுமானச் செல்வரும் துறைபடிதல் முதலியவற்றின் பயன் பெரியாரிணக்கம் பெறுதலென்று காட்டினமை இங்கு நினைவு கூர்தற்குரியது. (100)

முற்றிற்று.

பாட்டு முதற்குறிப் பகராதி

நீதிநூற் கொத்து

உரையுடன்

முதற் பாகம்	1 12
இரண்டாம் பாகம்	3 0